**கவனிக்க.**- இவ்வாரம் வெளியாகும் வர்த்தமானியின் பகுதி VI இல் 2026 ஆம் ஆண்டிற்கான கண்டி மாவட்டத்தின் யூரிமார் பெயர்ப் பட்டியல் ஒன்று சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் பிரசுரிக்கப்படுகிறது.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2501 - 2026 අගෝස්තු මස 07 වැනි සිකුරාදා - 2026.08.07
2501 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 07 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (IIஅ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)

| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | - | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 4 |

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2026, ஓகத்து மாதம் 28 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2026, ஓகத்து மாதம் 14 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**பிரசன்ன ஜயரத்ன**,
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2026 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 02 ஆந் திகதி.
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

1. **வேண்டப்படும் பொதுத் தகைமைகள்** :

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிற பதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

2. **சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரசாங்க சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர்; தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

3. **நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள்** :

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுரத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/ 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரசாங்க சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரசாங்க சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரசாங்க சேவையில் ஏற்கனவே நிரந்தர/ தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

4. **பணிக்கமர்த்தும் நியதிகள்** :

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரசாங்க சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரசாங்க சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரசாங்க சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

5. **யுத்த சேவைச் சலுகை** :

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

6. **அரசாங்க சேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள்** :

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரசாங்க சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவு செய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமையபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

7. **தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை** :

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம், படி முதலியன சேர்ந்திருக்கா.

8. **ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை** :

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/ 90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

## பரீட்சார்த்திகளுக்கான விதிகளும் அறிவுறுத்தல்களும்

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் காலத்துக்குக்காலம் வெளியிடப்படுகின்ற சட்டங்களுக்கும் ஒழுங்குமுறைகளுக்கும் ஏற்ப ஒழுகுவதற்கு சகல பரீட்சார்த்திகளும் கட்டுப்பட்டவர்களாவர்.

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் 20 ஆம் வாசகத்தின் மூலம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய கீழ்க் குறிப்பிடப்படும் நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.

அனைத்துப் பரீட்சார்த்திகளும், கீழ்க் குறிப்பிடப்படும் விதிகளுக்கு கட்டுப்பட வேண்டும் என்பதுடன் இவ் விதிகளில் எவற்றையேனும் மீறும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தீர்மானத்துக்கு அமைய கீழ்க் குறிப்பிடப்படும் தண்டனைகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தண்டனைகளுக்கு உட்படுத்தப்படுவார்.

I. விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்ற முழுப் பரீட்சைக்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கு தோற்றுவதற்குத் தடை விதித்தல்;

II. விசாரணைக்கு உட்படுத்தப்படும் பரீட்சையின் ஒரு பாடத்திற்கு அல்லது மொத்தப் பரீட்சைக்கும் தகுதியற்றவர் ஆக்குதல்;

III. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற அனைத்துப் பரீட்சை களுக்கும் தோற்றுவதற்கு வாழ்நாள் தடை விதித்தல்;

IV. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற பரீட்சைகளில் தோற்றுவதற்குத் தடை விதித்தல்;

V. இடைநிறுத்தப்பட்ட, பரீட்சைக்கான தடை உடன் கடிதம் ஒன்றை வழங்குதல்;

VI. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு சான்றிதழ் தடை செய்யப்படல்;

VII. பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் கீழ் குற்றவியல் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்வதற்காக பரீட்சார்த்தியை காவற்றுறையிடம் ஒப்படைத்தல் அல்லது அக்குறித்த செயற்பாடு தொடர்பாக காவற்றுறையில் புகார் செய்தல்;

VIII. பரீட்சார்த்தி அரசாங்க ஊழியராக அமையும் சந்தர்ப்பத்தில் குறித்த பரீட்சார்த்தியின் செயற்பாடு தொடர்பாக (ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக) குறித்த பரீட்சார்த்தியின் நியமன அதிகாரிக்கு அறிவித்தல்.

பரீட்சைக்கு முன்பு, பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அல்லது பரீட்சைக்கு பின்பு அல்லது வேறு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அவ்வாறான பரீட்சார்த்தி தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், தம்வசம் கொண்டவர் ஆவார். இது தொடர்பாக அவரால் மேற்கொள்ளப்படும் தீர்மானம் இறுதியானதாகும்.

1. சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்தினுள் மற்றும் பரீட்சை நடைபெறும் வளாகத்தினுள் பரீட்சை மேற்பார்வையாளருக்கு அவரது பணிக் குழாமுக்கு, அதே போன்று ஏனைய பரீட்சார்த்திகளுக்கு இடையூறு அல்லது தடங்கல்கள் ஏற்படாத வகையில் நடந்துகொள்ள வேண்டும். பரீட்சார்த்திகள் பரீட்சை வளாகத்தின் சொத்துகளுக்கு அல்லது பரீட்சை ஊழியர்களின் தனிப்பட்ட சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்துதல் கூடாது.

2. பரீட்சார்த்திகள் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலப் பகுதியிலும் பரீட்சை ஆரம்பிப்பதற்கு முன்பும் அதே போன்று பரீட்சை நடைபெற்று முடிவடைந்தவுடனும் பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழுவின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப நடந்து கொள்ளல் வேண்டும்.

3. பரீட்சையின் போது வினாப்பத்திரத்திற்கு விடையளிப்பது ஆரம்பிக்கப்பட்டு அரை மணித்தியாலம் கழிந்த பின்னர் எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை முடிவடையும் வரை எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கும் இடமளிக்கப்பட மாட்டாது. செயன்முறைப் பரீட்சைகள் அல்லது வாய்மொழி மூலமான பரீட்சைகளுக்கு உரிய நேரத்திற்கு சமுகம் அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4. சகல பரீட்சார்த்திகளும் தமது சுட்டெண்ணுக்குரிய ஆசனம் தவிர்ந்த வேறு எந்த இடத்திலும் அமர்தல் கூடாது. பரீட்சை மேற்பார்வையாளரின் விசேட அனுமதி இன்றி தன்னுடைய இடத்தை மாற்றக் கூடாது. தனக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தைத் தவிர வேறு இடத்தில் அமர்தல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்பட நேரிடும்.

5. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி பேணப்பட வேண்டும். எக் காரணம் கொண்டும் பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சை மேற்பார்வை பணிக்குழுவில் உள்ள ஒருவரைத் தவிர பரீட்சை மண்டபத்தினுள் அல்லது வெளியே இருக்கும் எவர் ஒருவருடனும் எந்தவித காரணத்திற்காகவும் கதைத்தல் அல்லது தகவல் பரிமாறல் அல்லது வேறு எந்தவிதமான கொடுக்கல் வாங்கலிலும் ஈடுபடுதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

6. பரீட்சை சுட்டெண்ணை மட்டும் கொண்டே பரீட்சார்த்தியின் விடைத்தாள்கள் இனங்காணப்படுகின்றமையால் விடைத்தாளில் தன்னுடைய பெயரை எழுதுதல், விடைத்தாளை இனங்கண்டு கொள்ளக்கூடிய வகையில் ஏதேனும் குறியீடு அல்லது குறிப்பு இடுதல், விடைத்தாளில் அநாகரிகமான அல்லது அவசியமற்ற விடயங்களை எழுதுதல், விடைத்தாளுடன் நாணயத்தாள்களை இணைத்தல் ஆகியவை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன. மேலும் வேறு எவரேனும் பரீட்சார்த்தியின் சுட்டெண்ணை தன்னுடைய விடைத்தாளில் எழுதுதலும் மோசடி நடவடிக்கை ஒன்றைச் செய்வதற்கு முயன்றதாகக் கருதப்படும். இனங்கண்டு கொள்ள முடியாத வகையில் சுட்டெண் எழுதப்பட்ட விடைத்தாள்களும் நிராகரிக்கப்படும்;

7. உமக்கு பரீட்சை மண்டபத்தினுள் வழங்கப்படும் தாள்கள் (பரீட்சை நடைபெறும் திகதிக்குரிய நோக்குனரின் குறுகிய கையொப்பம் மற்றும் திகதி இடப்பட்ட விடை எழுதும் தாள்கள்) தவிர வினாத்தாளிலோ அல்லது மேசையிலோ அல்லது வேறு ஏதேனும் இடத்திலோ எவற்றையும் எழுதுதல் கூடாது. இந்த அறிவுறுத்தல்களுக்கு மாறாக செயற்படுதல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்படும்.

8. பரீட்சார்த்திக்கு வழங்கப்படுகின்ற தாள்களை அல்லது விடை எழுதும் புத்தகத்தை கிழித்தல் அல்லது கசக்குதல் கூடாது. பரும்படி வேலைகளை செய்து பார்ப்பதற்காக உபயோகிக்கும் சகல தாள்களையும் தெளிவாக குறுக்காக கோடிட்டு விடைத்தாளுடன் இணைத்தல் அல்லது விடைத்தாளுடன் கையளித்தல் அல்லது வழங்கப்படுகின்ற அறிவுறுத்தலின் படி செய்தல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதப்பட்ட எதனையும் வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. ஒரே வினாவிற்கான விடை இரு இடங்களில் எழுதப்பட்டிருப்பின் அவசியமற்ற விடையைத் தெளிவாக வெட்டி விட வேண்டும்.

9. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக உமக்கு வழங்கப்படுகின்ற தாள்கள் மற்றும் வேறு பொருட்களை பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான அனைத்துப் பொருட்களும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு சொந்தமானதுடன் இவ் விதியினை மீறுதல் ஒரு தண்டனைக்குரிய செயற்பாடாகக் கருதப்படும்.

10. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக தனக்கு வழங்கப்படுகின்ற காகிதாதிகள் ஒவ்வொரு பரீட்சையின் போதும் தனதருகே வைத்துக் கொள்ளக்கூடிய எழுத்து மூலமான அனுமதியுள்ள பொருட்கள் தவிர்ந்த ஏனைய குறிப்புப் புத்தகங்கள், குறிப்புகள் உள்ளடங்கிய தாள்கள் அல்லது கடதாசித்துண்டுகள் போன்றவை பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சைக்குத் தோற்றும் சந்தர்ப்பத்தில் தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் கூடாது. அது போன்றே பரீட்சை மண்டபத்தினுள் கையடக்கத் தொலைபேசி, இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் (Electronic Communication Instruments/ Devices) தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் மற்றும் அந்த சாதனங்கள்/கருவிகளை உபயோகித்து வெளி நபர்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் பரீட்சை நடைபெறும் போது வேறு நபர்களுக்கு மற்றும் சமூக ஊடகங்களுக்கு தகவல் அனுப்புதல் மோசடிச் செயற்பாடு என்பதுடன் தண்டனைக்குரிய குற்றமாகும்.

11. இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் மேற்குறிப்பிட்ட 10ஆவது பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாக உபயோகிக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டால் அச் சாதனங்கள்/கருவிகள் உரிய விசாரணை நடவடிக்கைகள் முடிவடையும் வரை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வசம் எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

12. பரீட்சை மண்டபத்தில் அமர்ந்த பின்னர், பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் எந்தவொரு பரீட்சார்த்தியும் தன் அருகே பரீட்சைக்காக கொண்டு வருவதற்கு அனுமதிக்கப்படாத எந்தவொரு பொருளையும் அல்லது உபகரணத்தையும் வைத்திருத்தல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழாம் கட்டளையிட்டால் சகல பரீட்சார்த்திகளும் தன் வசம் உள்ளவற்றை வெளிப்படுத்துவதற்கும் மற்றும் பரிசோதிப்பதற்கும் கட்டுப்படுவதுடன் இவ்வாறான தேவைப்பாட்டினை மீறுவது மோசடியான செயற்பாட்டை செய்வதற்கு முயற்சித்ததாகக் கருதப்படும்.

13. எவரேனும் ஒரு பரீட்சார்த்தி வேறு ஒரு பரீட்சார்த்தியின் விடைத்தாளிலிருந்து அல்லது புத்தகத்திலிருந்து அல்லது தாளிலிருந்து அல்லது குறிப்பெழுதிய தாள்களிலிருந்து அல்லது சமிக்ஞைகள் மூலம் அல்லது வேறு ஏதேனும் ஒன்றிலிருந்து பார்த்து எழுதுதல் அல்லது பார்த்து எழுத முயற்சித்தல் அல்லது மோசடியாக நடந்து கொள்ளல் என்பன குற்றமாகும். வேறு பரீட்சார்த்திக்கு உதவி செய்தல், வேறு பரீட்சார்த்தியிடமிருந்து அல்லது நபரிடமிருந்து அல்லது பரீட்சை பணிக் குழுவினரிடமிருந்து உதவி பெறுதல் குற்றம் என்பதுடன் விடையளித்து முடிந்த சகல தாள்களையும் எழுதிக் கொண்டிருக்கும் தாளுக்குக் கீழே வைத்து விடையளித்தல் வேண்டும். எழுதுகின்ற தாள்களை மேசையின் மேல் பரப்பி வைத்திருத்தல் கூடாது.

14. பரீட்சை ஆரம்பிக்கப்பட்டு வினாத்தாளுக்கு விடையளிக்கும் போது எக்காரணம் கொண்டும் குறுகிய நேரத்திற்குக் கூட பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கு எந்தவொரு பரீட்சார்த்திக்கும் இடமளிக்கப்பட மாட்டாது. எனினும், ஒரு பரீட்சார்த்திக்கு மலசலகூடத்திற்கு செல்வதற்காக பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டால் பரீட்சை மேற்பார்வையாளரின் உதவி பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரின் கண்காணிப்பின் கீழ் பரீட்சார்த்திக்கு சிறிது நேரம் வெளியே செல்வதற்கு அனுமதிக்கப்படுவார். அவ்வாறு வெளியே செல்லும் முன்பும், மீண்டும் பரீட்சை மண்டபத்திற்குள் வரும் போதும் அவர் சோதனைக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.

15. பரீட்சை மண்டபத்தில் விடையளிக்கத் தொடங்குவதற்கு முன் அல்லது பின் உரிய பரீட்சார்த்திக்குப் பதிலாக போலிப் பரீட்சார்த்தி ஒருவர் தோற்றுதல் தண்டனைக்கு உள்ளாகக்கூடிய செயற்பாடாகும். ஆளடையாள அட்டையை மாற்றுதல் அல்லது போலி அடையாள அட்டையைச் சமர்ப்பித்தல் ஒரு மோசடிச் செயற்பாடாகக் கருதப்படும்.

16. பரீட்சார்த்தி ஒருவர் அல்லது பரீட்சார்த்தி அல்லாத ஒருவர் எந்தவொரு பரீட்சார்த்திக்கும் தவறான முறையில், மோசடி செய்யும் வகையில் உதவி செய்தல் ஒரு பாரிய குற்றமாக கருதப்படும்.

17. பரீட்சார்த்தி ஒருவர் கீழ்க் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படல் வேண்டும்:

(i) சகல பரீட்சார்த்திகளும் தனது அனுமதிப்பத்திரத்தில் கையொப்பத்தினை உறுதி செய்து கொள்வதும், விண்ணப்பிக்கப்பட்ட பாடங்கள் மற்றும் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள பாடங்களுக்கிடையில் பொருந்தாத தன்மை காணப்படின் பரீட்சைத் திணைக்களத்தில் விசாரித்து பரீட்சைக்கு முன் அதைத் திருத்திக் கொள்வதும் மேற்கொள்ளப்பட வேண்டும்;

(ii) பரீட்சை ஆரம்பிப்பதற்கு அரை (1/2) மணித்தியாலத்திற்கு முன்னர் பரீட்சை மண்டபத்திற்கு சமுகமளித்தல் உசிதமானது என்பதுடன், பரீட்சை மண்டபம் நிச்சயமாகத் தெரியாதவிடத்து பரீட்சை ஆரம்பிக்கும் தினத்திற்கு முன்னரே அது குறித்து விசாரித்து பரீட்சை மண்டபத்தை சரியாக இனங்காணல் சிறந்தது;

(iii) பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி ஒவ்வொரு பாடங்களுக்குத் தோற்றும் போதும் தனது ஆள் அடையாள அட்டையை வழங்கி தனது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

(a) ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்தில் சமர்ப்பிக்காவிடின், பரீட்சார்த்தியாய் இருத்தல் இரத்துச் செய்யப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், ஏதேனும் காரணத்தால் அதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்திற்கு கொண்டு வர மறந்திருப்பின் அதனைப் பற்றி பரீட்சை மேற்பார்வையாளருக்கு அறிவித்து பரீட்சை முடிவடைவதற்கு முன்னர் அவற்றைச் சமர்ப்பிப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

(b) சகல பரீட்சார்த்திகளும் தனது ஆள் அடையாளம் தெளிவாக வெளிப்படுத்தும் வகையில், முழு முகத்தையும் நன்றாக அடையாளம் காணக்கூடிய வகையில் பரீட்சை நடைபெறும் கால எல்லையில் பரீட்சை மண்டபத்தில் இருக்க வேண்டும்.

(iv) பரீட்சார்த்தி புளூடூத் (Bluetooth) போன்ற இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/ கருவிகளை (Electronic Communication Devices) உபயோகிக்கவில்லை என்பதனை உறுதி செய்து கொள்வதற்காக பரீட்சை மண்டபத்தில் தனது இரு காதுகளையும் தெளிவாகத் தெரியும் வகையில் வைத்திருத்தல் வேண்டும்;

(v) பரீட்சை மண்டபத்தில் உமக்கு வழங்கப்படுகின்ற தாள்களை விடுத்து வேறு எவ்வித கடதாசிகளையும் விடையளிப்பதற்கு உபயோகிக்கக் கூடாது. எஞ்சிய கடதாசிகளை மற்றும் வேறு பொருட்களை அசுத்தப்படுத்தாது மீண்டும் உபயோகிக்கக்கூடிய வகையில் உமது மேசையின் மேல் வைக்க வேண்டும்;

(vi) பரீட்சார்த்திகள் தங்களது பேனா, பென்சில், அழிறப்பர், அடிமட்டம், கேத்திரகணித உபகரணங்கள், வர்ணப் பென்சில் பெட்டி, வர்ண சோக் பெட்டி போன்றவற்றைக் கொண்டு வருதல் வேண்டும்;

(vii) நீங்கள் உபயோகிக்கும் விடையளிக்கும் புத்தகம் மற்றும் சகல தாள்களிலும் விடையெழுத தொடங்கும் போது உடனடியாக சுட்டெண்ணைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். விடைத்தாள்களின் இருபுறமும் தெளிவாக, சுத்தமாக விடையெழுத வேண்டும். வினாவொன்றின் ஒரு பகுதிக்கு விடையெழுதிய பின் அவ் வினாவின் மற்றைய பகுதியை ஆரம்பிப்பதற்கு முன் ஒரு வரியையாவது வெறுமையாக விடுதல் வேண்டும். ஒவ்வொரு வினாக்களுக்குமான விடையினைப் புதிய பக்கத்தில் ஆரம்பித்தல் வேண்டும்;

(viii) விடையளிக்கும் தாளின் இடதுபுற விளிம்புக்கோடு காணப்படுவது வினாக்களின் இலக்கங்களை எழுதுவதற்காகும். வலதுபுற விளிம்புக்கோடு ஒதுக்கப்பட்டிருப்பது மதிப்பிடுபவரின் உபயோகத்திற்காகும். அதனால் அவற்றில் எதுவும் எழுதுதலாகாது. உம்மால் விடையளிக்கப்பட்ட வினாக்களின் இலக்கங்களைப் பிழையாக இடுவது குழப்பத்திற்குக் காரணமாக அமையும் என்பதனால் வினா இலக்கத்தைச் சரியாக எழுதுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்;

(ix) கணித வினாக்களுக்கு விடையளிக்கும் போது கணக்குச் செய்முறைகள் பார்த்த மற்றும் பரும்படி வேலைகள் அந்தந்த ஒழுங்கில் கணக்கிற்கான விடையைக் கண்டு பிடித்ததன் ஒரு பகுதியாகக் காட்டப்பட வேண்டும். அவசியமான இடங்களில் வரையப்படும் வரிப்படங்கள் மற்றும் படங்கள் சரியானவையாகவும் குறிப்பிடத்தக்க அளவு பெரிதானதாகவும் இருத்தல் வேண்டும்;

(x) கட்டாயமான வினா மற்றும் தெரிவு செய்யப்பட வேண்டிய ஏனைய வினாக்கள் தொடர்பாக வினாப்பத்திரத்தில் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்தல் வேண்டும். வினாப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப விடையளிக்கப்படாத சந்தர்ப்பங்களில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது;

(xi) ஒவ்வொரு வினாவிற்கும் விடையளித்து முடிந்த பின் விடையளித்த புத்தகத்திற்கு மேலதிகமாக எழுதிய தாள்களை பக்க இலக்கங்களின் ஒழுங்கில் இணைத்து இடதுபுற மேல்மூலையில் கழறாத வகையில் கட்டுதல்/இணைத்தல் வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளிக்கும் முன் சகல விடைத்தாள்களும் இணைக்கப்பட்டுள்ளனவா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளித்த பின் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லப்பட்ட எந்தவொரு விடை எழுதிய தாளும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட மாட்டாது;

(xii) உங்கள் விடைத்தாளை பரீட்சை மேற்பார்வையாளரிடம் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரிடம் கையளித்தல் வேண்டும். விடைப்பத்திரங்களை சேகரிக்கும் வரை உங்களது ஆசனத்தில் அமர்ந்திருத்தல் வேண்டும். அவ்வாறு செய்வதற்குத் தவறுவதானது, சிலவேளை உமது விடைப்பத்திரம் காணாமல் போவதற்கும் நீர் ஏதாவது பாடத்திற்கு சமுகமளிக்கவில்லை என்று கருதுவதற்கும் காரணமாக அமையும்;

(xiii) ஏதாவது காரணத்துக்காக பரீட்சை மேற்பார்வையாளருடன் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவருடன் கதைக்க வேண்டிய அவசியம் ஏற்படின், ஏனையவர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் மேசையில் இருமுறை தட்டுவதன் மூலம் சமிக்ஞை செய்தல் வேண்டும்.

**பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.**

**இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,**
**பெலவத்தை,**
**பத்தரமுல்லை.**

# பதவிகள் - வெற்றிடம்

**இலங்கை இராணுவத்தின் நிரந்தரப் படையில் நிலவும் பிற பதவி வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்புச் செய்யும் பொருட்டு விண்ணப்பங்களைக் கோருதல்**

**(தொழிற்றுறை / தொழிற்றுறை அல்லாத)**

1. இலங்கை இராணுவத்தின் நிரந்தரப் படையில் நிலவும் தொழிற்றுறை மற்றும் தொழிற்றுறை அல்லாத பதவி வெற்றிடங்களுக்கு பயிலுநர் ஆண்/பெண் சிப்பாய்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும் விண்ணப்பதாரிகள், அடிப்படை நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்படுவார்கள் என்பதுடன், அதில் தெரிவு செய்யப்படுகின்ற அனைத்து விண்ணப்பதாரிகளும், அவர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்படுவதற்கு முன் இலங்கை இராணுவத்தினால் மருத்துவப் பரிசோதனையொன்றிற்கு உட்படுத்தப்படுவார்கள். அதில் தகுதி பெறும் விண்ணப்பதாரிகள் படைப்பிரிவு நிலையங்களுடனான ஒருங்கிணைப்புடன் இராணுவ ஆளணி நிருவாக பணிப்பாளர் சபையினால், இலங்கை இராணுவத்தின் நிரந்தர படைக்கு இணைத்துக் கொள்ளப்படுவார்கள் என்பதுடன், இப் பதவிகளுக்கான தகைமைகள் வருமாறு:

(அ) ஆட்சேர்ப்புச் செய்வதற்கான அடிப்படைத் தகைமைகள்:

(1) **அடிப்படைத் தகைமைகள் - ஆண்:**

| | | |
|---|---|---|
| (அ) குடியுரிமை | : | இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும். |
| (ஆ) சிவில் அந்தஸ்து | : | திருமணமாகாதவராக இருத்தல் வேண்டும். |
| (இ) வயது | : | தொழிற்றுறை அல்லாத சிப்பாய். (2026 திசெம்பர் 31 ஆம் திகதிக்கு 18 வயதுக்குக் குறையாமலும், 24 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்).<br><br>தொழிற்றுறை சிப்பாய் (2026 திசெம்பர் 31 ஆம் திகதிக்கு 18 வயதுக்குக் குறையாமலும், 26 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்). |
| (ஈ) உயரம் | : | 5 அடி 4 அங்குலத்திற்குக் குறையாதிருத்தல் வேண்டும். (இலங்கை இராணுவப் பொலிஸ் படைப்பிரிவு நீங்கலாக) |
| (உ) நிறை | : | 50 கி.கி. குறையாதிருத்தல் வேண்டும். |
| (ஊ) மார்புச் சுற்றளவு | : | 32 அங்குலத்திற்குக் குறையாதிருத்தல் வேண்டும். |
| (எ) பார்வைக் கூர்மை | : | 6/6 ஆக இருத்தல் வேண்டும். (மூக்குக்கண்ணாடி மற்றும் தொடு வில்லைகள் (Lenses) இன்றி) |
| (ஏ) உடற் திணிவுச் சுட்டி | : | 18 Kg/m² - 25 Kg/m² க்கு இடைப்பட்டதாக இருத்தல் வேண்டும். |

(2) **அடிப்படைத் தகைமைகள் - பெண்:**

| | | |
|---|---|---|
| (அ) குடியுரிமை | : | இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும். |
| (ஆ) சிவில் அந்தஸ்து | : | திருமணமாகாதவராக இருத்தல் வேண்டும். |
| (இ) வயது | : | தொழிற்றுறை அல்லாத சிப்பாய். (2026 திசெம்பர் 31 ஆம் திகதிக்கு 18 வயதுக்குக் குறையாமலும், 22 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்).<br><br>தொழிற்றுறை சிப்பாய். (2026 திசெம்பர் 31 ஆம் திகதிக்கு 18 வயதுக்குக் குறையாமலும், 26 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்) |
| (ஈ) உயரம் | : | 5 அடி 2 அங்குலத்திற்குக் குறையாதிருத்தல் வேண்டும். (இலங்கை இராணுவப் பொலிஸ் படைப்பிரிவு நீங்கலாக) |
| (உ) நிறை | : | 40 கி.கி. குறையாதிருத்தல் வேண்டும். |

(ஊ) பார்வைக் கூர்மை : 6/6 ஆக இருத்தல் வேண்டும். (மூக்குக்கண்ணாடி மற்றும் தொடு வில்லைகள் (Lenses) இன்றி)

(எ) உடற் திணிவுச் சுட்டி : 18 Kg/m² - 25 Kg/m² க்கு இடைப்பட்டதாக இருத்தல் வேண்டும்.

(3) **இலங்கை இராணுவப் பொலிஸ் படைப்பிரிவு**

(அ) உயரம் : 5 அடி 8 அங்குலத்திற்குக் குறையாதிருத்தல் வேண்டும் (ஆண்)

: 5 அடி 4 அங்குலத்திற்குக் குறையாதிருத்தல் வேண்டும் (பெண்)

(ஆ) **தொழிற்றுறை அல்லாத கடமைகள்:**

(1) அடிப்படைக் கல்வித் தகைமைகள்: 10 ஆம் தரத்தில் அல்லது பிரிவெனா கல்வியில் 05 ஆம் தரத்தில் சித்தியெய்திருத்தல் வேண்டும். (இலங்கை இராணுவப் பொலிஸ் படைப்பிரிவு நீங்கலாக).

(2) கல்வித் தகைமைகள் இலங்கை இராணுவப் பொலிஸ் படைப்பிரிவு: க.பொ.த. (சா./த.) பரீட்சையில் இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில், சிங்களம் அல்லது தமிழ் மொழியுடன், மேலும் இரண்டு (02) பாடங்களில் திறமைச் சித்தியுடன், சமயம் மற்றும் கணிதம் உட்பட 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

(இ) **தொழிற்றுறை கடமைகள்:**

(1) அடிப்படைக் கல்வித் தகைமைகள்: 10 ஆம் தரத்தில் அல்லது பிரிவெனா கல்வியில் 05 ஆம் தரத்தில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். மேலும், அடிப்படைத் தகைமைகளுக்கு மேலதிகமாக, தேசிய தொழிற்தகுதிச் சான்றிதழ் (NVQ) உள்ள விண்ணப்பதாரிகளின் கல்வித் தகைமைகள் பின்வரும் அடிப்படையில் பரிசீலிக்கப்படும் என்பதுடன், அவ்வாறான சான்றிதழ்களை கொண்டுள்ள விண்ணப்பதாரிகளும் இலங்கை இராணுவத்திற்கு தொழிற் பயிலுநர்களாக ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர்.(அந்தந்த தொழிற்துறைக்கமைய கல்வித் தகைமைகள் வேறுபடலாம்)

(அ) NVQ III - க.பொ.த. (சா./த.) பரீட்சையில் சித்தியெய்திருப்பதற்குச் சமமாகும்.
(ஆ) NVQ IV - க.பொ.த. (உ./த.) பரீட்சையில் சித்தியெய்திருப்பதற்குச் சமமாகும்.

(ஈ) **தொழிற்துறை கடமைகளுக்குத் தேவையான தகைமைகள் மற்றும் அனுபவங்கள்:**

(1) **சமையல் உதவியாளர்** (Catering Assistant) - அனைத்துப் படைப் பிரிவுகள்

(அ) சாதாரண சிப்பாய் (ஆண்/பெண்) 2026 திசெம்பர் 31 ஆம் திகதிக்கு 18 வயதுக்குக் குறையாமலும், 26 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

(ஆ) அடிப்படைக் கல்வித் தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(இ) அரசாங்க நிறுவனமொன்றில் அல்லது அரசில் பதிவு செய்யப்பட்ட நிறுவனமொன்றில் 03 மாதகால தொழில் தொடர்பான சான்றிதழ் பாடநெறியொன்றைப் பூர்த்தி செய்திருத்தல்.

(ஈ) தொழில் தொடர்பான 06 மாத அனுபவத்தை கொண்டிருத்தல் மேலதிக தகைமையாகக் கொள்ளப்படும்.

(2) **சாரதி (மோட்டார் போக்குவரத்து) Driver (Motor Transport) - அனைத்துப் படைப் பிரிவுகள்:**

(அ) சாதாரண சிப்பாய் (ஆண்) 2026 திசெம்பர் 31 ஆம் திகதிக்கு 18 வயதுக்குக் குறையாமலும், 26 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

(ஆ) அடிப்படை கல்வித் தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(இ) கனரக அல்லது இலகுரக சாரதி அனுமதி பத்திரத்தை கொண்டிருத்தல்.

(ஈ) அரசாங்க நிறுவனமொன்றில் அல்லது அரசில் பதிவு செய்யப்பட்ட நிறுவனமொன்றில் சாரதியாக 06 மாதங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட அனுபவத்தை கொண்டிருத்தல்.

(உ) நடமாடும் பழுதுபார்ப்பு சம்பந்தமான அறிவு விசேட தகைமையாகக் கொள்ளப்படும்.

(3) **நிருவாக உதவியாளர் (Administrative Assistant) - அனைத்துப் படைப் பிரிவுகள்: (இலங்கை இராணுவ மருத்துவப் படைப்பிரிவு நீங்கலாக):**

(அ) சாதாரண சிப்பாய் (ஆண்/பெண்) 2026 திசெம்பர் 31 ஆம் திகதிக்கு 18 வயதுக்குக் குறையாமலும், 26 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

(ஆ) க.பொ.த. (சா./த.) பரீட்சையில் இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் இரண்டு (02) பாடங்களில் திறமைச் சித்தியுடன் சிங்களம் அல்லது தமிழ் மொழி, கணிதம் உட்பட 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

(இ) அரசாங்க நிறுவனமொன்றில் அல்லது அரசில் பதிவு செய்யப்பட்ட நிறுவனமொன்றில் குறைந்தபட்சம் 03 மாத சிங்களம் அல்லது ஆங்கில கணினி தட்டச்சு பாடநெறியொன்றைப் பூர்த்தி செய்து அதில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

(ஈ) க.பொ.த. (உ./த.) பரீட்சைக்குத் தோற்றியிருத்தலும், ஆங்கில மொழியில் தேர்ச்சியும் விசேட தகைமையாகக் கருதப்படும்.

(4) **பண்டங்கள் முகாமைத்துவ உதவியாளர் (Material Management Assistant) -** அனைத்துப் படைப் பிரிவுகள்: (இலங்கை பொறியியல் சேவை படைப் பிரிவு, இலங்கை இராணுவ மருத்துவப் படைப் பிரிவு மற்றும் இலங்கை இராணுவ சேவைகள் படைப்பிரிவு நீங்கலாக)

(அ) சாதாரண சிப்பாய் (ஆண்/பெண்) 2026 திசெம்பர் 31 ஆம் திகதிக்கு 18 வயதுக்குக் குறையாமலும், 26 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

(ஆ) க.பொ.த. (சா./த.) பரீட்சையில் இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் இரண்டு (02) பாடங்களில் திறமைச் சித்தியுடன் சிங்களம் அல்லது தமிழ் மொழி, கணிதம் உட்பட 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

(இ) களஞ்சியக் காப்பாளர் பாடநெறியொன்றை அல்லது அதற்குச் சமமான வேறு பாடநெறியொன்றைப் பூர்த்தி செய்திருத்தலும், சிங்களம் அல்லது ஆங்கிலம் தட்டச்சு மற்றும் கணினிப் பாடநெறியொன்றைப் பூர்த்தி செய்திருத்தலும்.

(ஈ) களஞ்சியப்படுத்தல் சம்பந்தமாக 06 மாத அனுபவத்தைக் கொண்டிருத்தல் மேலதிக தகைமையாகக் கொள்ளப்படும்.

(5) **தச்சுத் தொழில் உதவியாளர் (Carpenter)** - அனைத்துப் படைப் பிரிவுகள்:

(அ) சாதாரண சிப்பாய் (ஆண்) 2026 திசெம்பர் 31 ஆம் திகதிக்கு 18 வயதுக்குக் குறையாமலும், 26 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

(ஆ) அடிப்படைக் கல்வித் தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(இ) அரசாங்க நிறுவனமொன்றில் அல்லது அரசில் பதிவு செய்யப்பட்ட நிறுவனமொன்றில் சம்பந்தப்பட்ட தொழில் தொடர்பான 03 மாத பாடநெறியொன்றைப் பூர்த்தி செய்திருத்தல் அல்லது சம்பந்தப்பட்ட தொழில் தொடர்பான NVQ LEVEL III அல்லது அதற்கு மேற்பட்ட சான்றிதழ் பாடநெறியை பூர்த்தி செய்திருத்தல்.

(ஈ) தச்சுத் தொழில் சம்பந்தமாக 06 மாத அனுபவத்தைக் கொண்டிருத்தல் விசேட தகைமையாகக் கொள்ளப்படும்.

(6) **கலாசார நடனக் கலைஞர் (Cultural Dancing Troops)** - அனைத்துப் படைப் பிரிவுகள்:

(அ) சாதாரண சிப்பாய் (ஆண்) 2026 திசெம்பர் 31 ஆம் திகதிக்கு 18 வயதுக்குக் குறையாமலும், 26 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (பெண்) 2026 திசெம்பர் 31 ஆம் திகதிக்கு 18 வயதுக்குக் குறையாமலும், 22 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

(ஆ) அடிப்படைக் கல்வித் தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(இ) கீழைத்தேய மற்றும் மேலைத்தேய நடன சான்றிதழ் கற்கைநெறிகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(உ) இலங்கை இராணுவ கலாசார வாத்தியக்குழுவின் கட்டளை அதிகாரியின் ஆரம்ப நேர்முகப் பரீட்சையின் பின் முன்வைக்கப்படுகின்ற பரிந்துரையின் அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்படுவார்கள்.

(7) **கவச வாகன சமிக்ஞை சிப்பாய் (Armoured Vehicle Gunner Operator)** - இலங்கை கவச வாகன படைப் பிரிவு, இலங்கை எந்திரவியல் காலாட் படைப் பிரிவு:

(அ) சாதாரண சிப்பாய் (ஆண்) 2026 திசெம்பர் 31 ஆம் திகதிக்கு 18 வயதுக்குக் குறையாமலும், 26 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

(ஆ) அடிப்படைக் கல்வித் தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(8) கவச வாகன சாரதி (Armoured Vehicle Driver) - இலங்கை கவச வாகன படைப் பிரிவு, இலங்கை எந்திரவியல் காலாட் படைப் பிரிவு:

(அ) சாதாரண சிப்பாய் (ஆண்) 2026 திசெம்பர் 31 ஆம் திகதிக்கு 18 வயதுக்குக் குறையாமலும், 26 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

(ஆ) அடிப்படைக் கல்வித் தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(இ) கனரக வாகன அல்லது இலகுரக வாகன சாரதி அனுமதிப்பத்திரம் வைத்திருத்தல் வேண்டும்.

(ஈ) அரசாங்க நிறுவனமொன்றில் அல்லது அரசில் பதிவு செய்யப்பட்ட நிறுவனமொன்றில் சாரதித் தொழிலுடன் தொடர்புடைய 06 மாத அல்லது அதற்கு மேற்பட்ட அனுபவத்தைக் கொண்டிருத்தல் விசேட தகைமையாக கருதப்படும்.

(9) **பீரங்கி தொழில்நுட்ப உதவியாளர் (Artillery Technician Assistant)** - இலங்கை பீரங்கி படைப் பிரிவு:

(அ) சாதாரண சிப்பாய் (ஆண்) 2026 திசெம்பர் 31 ஆம் திகதிக்கு 18 வயதுக்குக் குறையாமலும், 26 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

(ஆ) க.பொ.த. (சா./த.) பரீட்சையில் இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் இரண்டு (02) பாடங்களில் திறமை சித்தியுடன் சிங்களம் மற்றும் கணிதம் உட்பட 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

(10) **கள பொறியியல் உதவியாளர் (Field Engineer Assistant)** - இலங்கை பொறியியல் படைப் பிரிவு:

(அ) சாதாரண சிப்பாய் (ஆண்) 2026 திசெம்பர் 31 ஆம் திகதிக்கு 18 வயதுக்குக் குறையாமலும், 26 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

(ஆ) அடிப்படைக் கல்வித் தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(11) **இயந்திர இயக்குநர் உதவியாளர் (Machine Operator Assistant)** - இலங்கை பொறியியல் படைப் பிரிவு:

(அ) சாதாரண சிப்பாய் (ஆண்) 2026 திசெம்பர் 31 ஆம் திகதிக்கு 18 வயதுக்குக் குறையாமலும், 26 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

(ஆ) அரசாங்க நிறுவனமொன்றினால் அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றினால் நடாத்தப்பட்ட தொழில்சார் தேர்வில் தேர்ச்சி பெற்றதற்கான சான்றிதழைப் பெற்றிருத்தல்.

(இ) அரசாங்க நிறுவனமொன்றில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் ஓராண்டு காலம் சம்பந்தப்பட்ட தொழிலில் ஈடுபட்டிருத்தல் விசேட தகைமையாக கருதப்படும்.

(12) **இயந்திர காய்ச்சி ஒட்டுநர்/காய்ச்சி ஒட்டுநர் (Machine Welder/ Welder)** - இலங்கை பொறியியல் படைப் பிரிவு:

(அ) சாதாரண சிப்பாய் (ஆண்) 2026 திசெம்பர் 31 ஆம் திகதிக்கு 18 வயதுக்குக் குறையாமலும், 26 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

(ஆ) அடிப்படைக் கல்வித் தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(இ) அரசாங்க நிறுவனமொன்றில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் 03 மாதங்களுக்குக் குறையாத சான்றிதழ் கற்கைநெறியொன்றைப் பூர்த்தி செய்திருத்தல்.

(ஈ) இயந்திர காய்ச்சி ஒட்டுநர் தொழிலில் 06 மாதங்களுக்குக் குறையாத அனுபவத்தைக் கொண்டிருத்தல்.

(13) **கட்டுமான தொழில்நுட்பவியலாளர் (Construction Technician)** - இலங்கை பொறியியல் படைப் பிரிவு மற்றும் இலங்கை பொறியியல் சேவை படைப் பிரிவு:

(அ) சாதாரண சிப்பாய் (ஆண்) 2026 திசெம்பர் 31 ஆம் திகதிக்கு 18 வயதுக்குக் குறையாமலும், 26 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

(ஆ) அடிப்படைக் கல்வித் தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(ஈ) கட்டுமான தொழில்நுட்ப தொழிற் கற்கைநெறியொன்றைப் பூர்த்தி செய்திருத்தல் அல்லது கட்டுமான தொழில்நுட்பவியலாளரொருவராக 06 மாதங்களுக்குக் குறையாத அனுபவத்தைக் கொண்டிருத்தல்.

(14) **சாரதி (இயக்குநர்) [Driver (Operator)]** - இலங்கை பொறியியல் படைப் பிரிவு:

(அ) சாதாரண சிப்பாய் (ஆண்) 2026 திசெம்பர் 31 ஆம் திகதிக்கு 18 வயதுக்குக் குறையாமலும், 26 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

(ஆ) அடிப்படைக் கல்வித் தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(இ) அரசாங்க அங்கீகாரம் பெற்ற நிறுவனமொன்றில் 03 மாதங்களுக்குக் குறையாத பாடநெறியொன்றைப் பூர்த்தி செய்திருத்தல் அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றின் மூலம் 06 மாதங்களுக்குக் குறையாத அனுபவத்தைக் கொண்டிருப்பதற்கான சான்றிதழ் பெற்றிருத்தல்.

(ஈ) சாரதி இயக்குநர் தொழிலில் ஒரு வருடத்திற்குக் குறையாத அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(15) **சிற்பக் கலைஞர் (Sculptor)** - இலங்கை பொறியியல் படைப் பிரிவு:

(அ) சாதாரண சிப்பாய் (ஆண்;) 2026 திசெம்பர் 31 ஆம் திகதிக்கு 18 வயதுக்குக் குறையாமலும், 26 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

(ஆ) அடிப்படைக் கல்வித் தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(இ) அரசாங்க அங்கீகாரம் பெற்ற நிறுவனமொன்றில் 03 மாதங்களுக்குக் குறையாத பாடநெறியொன்றைப் பூர்த்தி செய்திருத்தல் அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றின் மூலம் 06 மாதங்களுக்குக் குறையாத அனுபவத்தைக் கொண்டிருப்பதற்கான சான்றிதழ் பெற்றிருத்தல்.

(ஈ) சிற்பத் தொழிலில் ஒருவருட அல்லது இரண்டு வருட அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(16) **வாகன குளிரூட்டி தொழில்நுட்பவியலாளர் (Vehicle Air Conditioning Technician)** - இலங்கை பொறியியல் படைப் பிரிவு:

(அ) சாதாரண சிப்பாய் (ஆண்) 2026 திசெம்பர் 31 ஆம் திகதிக்கு 18 வயதுக்குக் குறையாமலும், 26 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

(ஆ) அடிப்படைக் கல்வித் தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(இ) அங்கீகரிக்கப்பட்ட தொழிற் கற்கைநெறியொன்றை பூர்த்தி செய்திருத்தல்.

(ஈ) வாகன குளிரூட்டல் தொழிலில் 06 மாதங்களுக்குக் குறையாத தொழில் அனுபவத்தை கொண்டிருத்தல்.

(17) **நில அளவை உதவியாளர் (Assistant Surveyor)** - இலங்கை பொறியியல் படைப் பிரிவு மற்றும் இலங்கை பொறியியல் சேவைகள் படைப் பிரிவு:

(அ) சாதாரண சிப்பாய் (ஆண்) 2026 திசெம்பர் 31 ஆம் திகதிக்கு 18 வயதுக்குக் குறையாமலும், 26 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

(ஆ) க.பொ.த. (சா./த.) பரீட்சையில் 02 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

(இ) அரசாங்க நில அளவைத் திணைக்களத்தில் 01 வருட அனுபவத்தைக் கொண்டிருத்தல் அல்லது அதிகாரம் பெற்ற நில அளவையாளரொருவரின் கீழ் ஒருவருட தொழில் அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

(18) **நீர்க் குழாய் தொழில்நுட்பவியலாளர் (Plumber)** - இலங்கை பொறியியல் படைப் பிரிவு மற்றும் இலங்கை பொறியியல் சேவை படைப் பிரிவு:

(அ) சாதாரண சிப்பாய் (ஆண்) 2026 திசெம்பர் 31 ஆம் திகதிக்கு 18 வயதுக்குக் குறையாமலும், 26 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

(ஆ) அடிப்படைக் கல்வித் தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(இ) தொழிற்றுறை தொடர்பாக அரச நிறுவனமொன்றில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் சான்றிதழ் பாடநெறியொன்றைப் பூர்த்தி செய்திருத்தல் அல்லது சம்பந்தப்பட்ட தொழிற்றுறையில் 06 மாதங்களுக்குக் குறையாத சேவை அனுபவத்தைக் கொண்டிருத்தல்.

(19) **கம்பி வலைப்பவர் (Bar Bender)** - இலங்கை பொறியியல் சேவை படைப் பிரிவு:

(அ) சாதாரண சிப்பாய் (ஆண்) 2026 திசெம்பர் 31 ஆம் திகதிக்கு 18 வயதுக்குக் குறையாமலும், 26 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

(ஆ) அடிப்படைக் கல்வித் தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(இ) அங்கீகரிக்கப்பட்ட அரசாங்க நிறுவனமொன்றில் 03 மாதங்களுக்குக் குறையாத பாடநெறியொன்றைப் பூர்த்தி செய்திருத்தல் அல்லது 06 மாதங்களுக்குக் குறையாத அனுபவத்தைக் கொண்டிருப்பதாக அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றினால் வழங்கப்பட்ட சான்றிதழொன்றை வைத்திருத்தல்.

(ஈ) 6 மாதகால தொழில் அனுபவத்தைக் கொண்டிருத்தல்.

(20) **மின்சார தொழில்நுட்பவியலாளர் (Electrician)** - இலங்கை பொறியியல் படைப் பிரிவு, இலங்கை பொறியியல் சேவைகள் படைப் பிரிவு மற்றும் இலங்கை மின்சார எந்திர பொறியியல் படைப் பிரிவு:

(அ) சாதாரண சிப்பாய் (ஆண்) 2026 திசெம்பர் 31 ஆம் திகதிக்கு 18 வயதுக்குக் குறையாமலும், 26 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

(ஆ) அடிப்படைக் கல்வித் தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(இ) தொழிற்றுறையில் சான்றிதழ் பாடநெறியொன்றைப் பூர்த்தி செய்திருத்தல்.

(ஈ) மின்சார தொழில்நுட்பவியலாளரொருவராக 6 மாத அனுபவத்தைக் கொண்டிருத்தல்.

(21) **வரைவாளர் (Draftsman)** - இலங்கை பொறியியல் படைப் பிரிவு, இலங்கை பொறியியல் சேவைகள் படைப் பிரிவு மற்றும் இலங்கை மின்சார எந்திர பொறியியல் படைப் பிரிவு:

(அ) சாதாரண சிப்பாய் (ஆண்) 2026 திசெம்பர் 31 ஆம் திகதிக்கு 18 வயதுக்குக் குறையாமலும், 26 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

(ஆ) கா.பொ.த. (சா./த.) பரீட்சையில் இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம் அல்லது தமிழ் மொழி, கணிதம் உட்பட 04 பாடங்களில் திறமைச் சித்தியுடன் 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

(இ) அரசாங்க தொழில்நுட்பக் கல்லூரியொன்றில் திட்ட வரைவுத் துறையில் சான்றிதழ் பாடநெறியொன்றைப் பூர்த்தி செய்திருத்தலும், அரசாங்க அங்கீகாரம் பெற்ற நிறுவனமொன்றில் திட்ட வரைவுத் துறையில் சான்றிதழ் பாடநெறியொன்றைப் பூர்த்தி செய்திருத்தலும் மேலதிக தகைமையாகக் கருதப்படும்.

(22) **கொல்லன் (Blacksmith)** - இலங்கை பொறியியல் படைப் பிரிவு, இலங்கை பொறியியல் சேவைகள் படைப் பிரிவு மற்றும் இலங்கை மின்சார மற்றும் எந்திர பொறியியல் படைப் பிரிவு:

(அ) சாதாரண சிப்பாய் (ஆண்) 2026 திசெம்பர் 31 ஆம் திகதிக்கு 18 வயதுக்குக் குறையாமலும், 26 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

(ஆ) அடிப்படைக் கல்வித் தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(இ) தொழிற்றுறையுடன் தொடர்புடையதாக 03 மாதங்களுக்குக் குறையாத சான்றிதழ் பாடநெறியொன்றைப் பூர்த்தி செய்திருத்தல்.

(ஈ) கொல்லன் தொழிலில் 06 மாதங்களுக்குக் குறையாத தொழில் அனுபவத்தைக் கொண்டிருத்தல்.

(23) **பற்றவைப்பவர் (Welder)** - இலங்கை பொறியியல் படைப் பிரிவு, இலங்கை பொறியியல் சேவைகள் படைப் பிரிவு மற்றும் இலங்கை மின்சார மற்றும் எந்திர பொறியியல் படைப் பிரிவு:

(அ) சாதாரண சிப்பாய் (ஆண்) 2026 திசெம்பர் 31 ஆம் திகதிக்கு 18 வயதுக்குக் குறையாமலும், 26 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

(ஆ) அடிப்படைக் கல்வித் தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(இ) அரசாங்க நிறுவனமொன்றில் அல்லது அரசில் பதிவு செய்யப்பட்ட நிறுவனமொன்றில் 03 மாதங்களுக்குக் குறையாத தொழிற்றுறைப் பாடநெறியொன்றைப் பூர்த்தி செய்திருத்தல்.

(ஈ) NVQ LEVEL III அல்லது அதற்கு மேற்பட்ட சான்றிதழ் பாடநெறியொன்றைப் பூர்த்தி செய்திருத்தல்.

(உ) பற்றவைக்கும் தொழிலில் 06 மாதங்களுக்குக் குறையாத அனுபவத்தைக் கொண்டிருத்தல்.

(24) **உலோக தகட்டுத் தொழிலாளர் (Sheet Metal Worker)** - இலங்கை பொறியியல் படைப் பிரிவு, இலங்கை பொறியியல் சேவைகள் படைப் பிரிவு மற்றும் இலங்கை மின்சார மற்றும் எந்திர பொறியியல் படைப் பிரிவு:

(அ) சாதாரண சிப்பாய் (ஆண்) 2026 திசெம்பர் 31 ஆம் திகதிக்கு 18 வயதுக்குக் குறையாமலும், 26 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

(ஆ) அடிப்படைக் கல்வித் தகைமைகளைப்; பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(இ) அரசாங்க நிறுவனமொன்றில் அல்லது அரசில் பதிவு செய்யப்பட்ட நிறுவனமொன்றில் 06 மாதங்களுக்குக் குறையாத தொழிற்றுறைப் பாடநெறியொன்றைப் பூர்த்தி செய்திருத்தல்.

(ஈ) NVQ LEVEL III அல்லது அதற்கு மேற்பட்ட சான்றிதழ் பாடநெறியொன்றைப் பூர்த்தி செய்திருத்தல்.

(உ) உலோக தகட்டுத் தொழிலாளர் தொழிலில் 06 மாதங்களுக்குக் குறையாத அனுபவத்தைக் கொண்டிருத்தல்.

(25) **பண்டங்கள் முகாமைத்துவ உதவியாளர் (Material Management Assistant)** - இலங்கை பொறியியல் சேவைகள் படைப் பிரிவு:

(அ) சாதாரண சிப்பாய் (ஆண்) 2026 திசெம்பர் 31 ஆம் திகதிக்கு 18 வயதுக்குக் குறையாமலும், 26 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

(ஆ) க.பொ.த. (சா./த.) பரீட்சையில் சிங்களம் மொழி மற்றும் கணிதம் உட்பட 04 பாடங்களில் திறமைச் சித்தியுடன் 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

(இ) களஞ்சியக் காப்பாளர் பாடநெறியொன்றை அல்லது அதற்குச் சமமான வேறு பாடநெறியொன்றைப் பூர்த்தி செய்திருத்தல், சிங்களம் அல்லது ஆங்கிலம் தட்டச்சு பாடநெறியொன்றைப் பூர்த்தி செய்திருத்தல் மற்றும் கணினி பாடநெறியொன்றைப் பூர்த்தி செய்திருத்தல் அல்லது களஞ்சியப்படுத்தலில் 06 மாத அனுபவத்தைக் கொண்டிருத்தல்.

(26) **வாகன சாயம் பூசுதல் உதவியாளர் (Auto Painter)** - இலங்கை பொறியியல் படைப் பிரிவு மற்றும் இலங்கை மின்சார மற்றும் எந்திர பொறியியல் படைப் பிரிவு:

(அ) சாதாரண சிப்பாய் (ஆண்) 2026 திசெம்பர் 31 ஆம் திகதிக்கு 18 வயதுக்குக் குறையாமலும், 26 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

(ஆ) அடிப்படைக் கல்வித் தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(இ) அரசாங்க அங்கீகாரம் பெற்ற நிறுவனமொன்றில் 03 மாதங்களுக்குக் குறையாத பாடநெறியொன்றைப் பூர்த்தி செய்திருத்தலும், NVQ LEVEL III அல்லது அதற்குக் குறையாத சான்றிதழ் பெற்றிருத்தலும்.

(ஈ) அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றின் மூலம் வாகனம் சாயம் பூசுதல் தொழிலில் 06 மாதங்களுக்குக் குறையாத அனுபவத்தைக் கொண்டிருப்பதற்கான சான்றிதழொன்றைப் பெற்றிருத்தல்.

(27) **வாகன திருத்துநர் (Vehicle Mechanic)** - இலங்கை பொறியியல் படைப் பிரிவு மற்றும் இலங்கை மின்சார மற்றும் எந்திர பொறியியல் படைப் பிரிவு:

(அ) சாதாரண சிப்பாய் (ஆண்) 2026 திசெம்பர் 31 ஆம் திகதிக்கு 18 வயதுக்குக் குறையாமலும், 26 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

(ஆ) அடிப்படைக் கல்வித் தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(இ) அரசாங்க நிறுவனமொன்றில் அல்லது அரசாங்க அங்கீகாரம் பெற்ற தொழில்நுட்பக் கல்லூரியொன்றில் அல்லது நிறுவனமொன்றில் 06 மாதங்களுக்குக் குறையாத பாடநெறியொன்றைப் பூர்த்தி செய்திருத்தல் மற்றும் NVQ LEVEL III அல்லது அதற்குக் குறையாத சான்றிதழை பெற்றிருத்தல்.

(ஈ) வாகன திருத்துநர் தொழிலில் 06 மாதங்களுக்குக் குறையாத தொழில் அனுபவத்தைக் கொண்டிருத்தல்.

(28) **இலத்திரனியல் கருவிகள் தொழில்நுட்பவியலாளர் (Electronic Equipment Technician)** - இலங்கை மின்சார மற்றும் எந்திர பொறியியல் படைப் பிரிவு:

(அ) சாதாரண சிப்பாய் (ஆண்) 2026 திசெம்பர் 31 ஆம் திகதிக்கு 18 வயதுக்குக் குறையாமலும், 26 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

(ஆ) க.பொ.த. (சா./த.) பரீட்சையில் இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் இரண்டு பாடங்களில் திறமைச் சித்தியுடன் சிங்கள மொழி மற்றும் கணிதம் உட்பட 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

(இ) தொழிற்றுறை சம்பந்தமாக NVQ LEVEL III அல்லது அதிலும் உயர் சான்றிதழ் பெற்றிருபின் க.பொ.த. (சா./த.) பரீட்சைக்குத் தோற்றிருத்;தல் போதுமானது.

(ஈ) சம்பந்தப்பட்ட தொழிற்றுறையில் அரசாங்க அங்கீகாரம் பெற்ற தொழில்நுட்பக் கல்லூரியொன்றில் அல்லது நிறுவனமொன்றில் 06 மாதங்களுக்குக் குறையாத தொழிற்றுறைப் பாடநெறியொன்றைப் பூர்த்தி செய்திருத்தல்.

(உ) கருவிகள் தொழில்நுட்பத் துறையில் ஒரு வருடத்திற்கு மேற்பட்ட அனுபவத்தைக் கொண்டிருத்தல் அல்லது NVQ LEVEL III சான்றிதழ் பெற்றிருப்பின் 06 மாதகால அனுபவம் போதுமானது.

(29) **வாகனங்களைச் சீரமைக்கும் கைவினைஞர் (Coach Trimmer)** - இலங்கை மின்சார மற்றும் எந்திர பொறியியல் படைப் பிரிவு:

25. கிராம அலுவலர் பிரிவு: ..............................................................................................................................................
26. அண்மையிலுள்ள தபால் அலுவலகம்: ..............................................................................................................................................
27. தொலைபேசி இல.: ..............................................................................................................................................
28. சிவில் அந்தஸ்து: ..............................................................................................................................................

மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் சரியானவை என அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

திகதி:.................................................... ..........................................................................
விண்ணப்பதாரியின்/வெளிப்படுத்துபவரின் கையொப்பம்

08-28

## அரசாங்க சேவைகள் ஆணைக்குழு

## விஞ்ஞான மற்றும் தொழினுட்ப அமைச்சுக்கு திறந்த அடிப்படையில் சட்ட அலுவலர் (நிறைவேற்று அலுவலர் சேவை வகை தரம் III) பதவிக்கான ஆட்சேர்ப்பு - 2026

இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து, விஞ்ஞான மற்றும் தொழினுட்ப அமைச்சின் நிறைவேற்று அலுவலர் சேவை வகை தரம் III-இற்குட்பட்ட சட்ட அலுவலர் பதவியில் நிலவும் வெற்றிடத்தை நிரப்புவதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. **ஆட்சேர்ப்பு முறை :**

இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்த விண்ணப்பதாரர்களுள் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை சபையொன்றினால் நடாத்தப்படும் தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில், அதிகூடிய புள்ளிகளைப் பெறும் விண்ணப்பதாரர் நிலவும் வெற்றிடத்திற்கு ஆட்சேர்ப்பு செய்யப்படுவார். தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சையானது, அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட புள்ளியிடல் திட்டத்திற்கு (இல. 6 இல் குறிப்பிடப்பட்டுள்ளது) அமைவாக நடாத்தப்படும்.

நியமனம் நடைமுறைப்படுத்தப்படும் திகதியானது அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும்.

2. **தேவைப்படும் தகைமைகள் :**

i. **கல்வி /தொழில்சார் தகைமைகள் :**

இலங்கையின் உயர் நீதிமன்றத்தின் சட்டத்தரணியாகச் சத்தியப்பிரமாணம் செய்திருத்தல் வேண்டும்.

ii. **அனுபவம் :**

இலங்கையின் உயர் நீதிமன்றத்தின் சட்டத்தரணியாகச் சத்தியப்பிரமாணம் செய்ததன் பின்னர், குறைந்தது இரண்டு (02) வருடங்களுக்குக் குறையாத செயற்பாட்டு தொழில்முறை அனுபவத்தைக் கொண்டிருக்க வேண்டும். (செயற்பாட்டு தொழில்முறை அனுபவத்திற்கான சான்றாக நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பிக்கப்படும் ஆவணங்களில், அனுபவக் காலம், திகதி மற்றும் சான்றளிப்பவரின் உத்தியோகபூர்வ முத்திரை என்பன தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்.)

அல்லது

இலங்கையின் உயர் நீதிமன்றத்தின் சட்டத்தரணியாகச் சத்தியப்பிரமாணம் செய்ததன் பின்னர், கீழே குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுடன் தொடர்புடைய வகையில் குறைந்தது இரண்டு (02) வருடங்களுக்குக் குறையாத அனுபவத்தைக் கொண்டிருக்க வேண்டும்.

(இவ்விடயங்கள் செயலாளர் / திணைக்களத் தலைவர் / நிறுவனத் தலைவர் ஆகியோரால் வழங்கப்பட்ட கடிதமொன்றின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.)

- நீதிமன்ற வழக்குகளுடன் தொடர்புடைய சட்ட விடயங்களைக் கையாளுதல் மற்றும் சட்டமா அதிபர் திணைக்களத்துடன் ஒருங்கிணைந்து செயற்படுதல்.
- உடன்படிக்கைகளுடன் தொடர்புடைய சட்ட விடயங்களைக் கையாளுதல்.
- தொடர்புடைய சட்டவாக்கங்களின் (Enactments) கீழ் எழும் சட்ட விடயங்களைக் கையாளுதல்.
- சட்டமூலங்கள், சுற்றறிக்கைகள் மற்றும் ஒழுங்குவிதிகள் போன்ற சட்ட ஆவணங்களைத் தயாரித்தல்.
- பல்வேறு நியதிச்சட்ட அமைப்புக்களினால் மேற்கொள்ளப்படும் சட்ட, நீதித்துறை அல்லது விசாரணை நடவடிக்கைகளுடன் தொடர்புடைய பணிகளை மேற்கொள்ளுதல்.

குறிப்பு :

அடிப்படைத் தகைமைகளை உறுதிப்படுத்தும் ஆவணங்களாவன விண்ணப்பதாரரால் சுயசான்றிடப்பட்டு அப்பிரதிகள் விண்ணப்பத்துடன் இணைக்கப்படல் வேண்டும். சேவைக் காலத்தின் ஆரம்பம் மற்றும் நிறைவு திகதிகள் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ள சான்றிதழ்கள் இணைக்கப்படாத விண்ணப்பங்கள் முன்னறிவித்தல் இன்றியே நிராகரிக்கப்படலாம்.

iii. **உடற்தகுதி :**

ஒவ்வொரு விண்ணப்பதாரரும் இலங்கையின் எந்தவொரு பகுதியிலும் சேவையாற்றுவதற்கும், இப்பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் உடல் மற்றும் உளரீதியாகத் தகுதியுடையவராக இருத்தல் வேண்டும்.

iv. **ஏனைய தகைமைகள் :**

- இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
- சிறந்த ஒழுக்கநலன்களைக் கொண்டவராக இருக்க வேண்டும். (இது, விண்ணப்பதாரரின் வசிப்பிடத்திற்குரிய கிராம அலுவலரினால் கடந்த ஆறு (06) மாதங்களுக்குள் வழங்கப்பட்ட 'DS 04' சான்றிதழ் மற்றும் தனிப்பட்டதொரு நன்னடத்தைச் சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.)
- இப்பதவிக்கான ஆட்சேர்ப்பிற்கு தேவையான அனைத்து தகைமைகளையும் விண்ணப்பங்கள் கோரப்பட்ட இறுதித் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் எல்லா வகையிலும் விண்ணப்பதாரியினால் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

3. **நியமன நிபந்தனைகள் மற்றும் சேவை நிபந்தனைகள் :**

i. இப்பதவி நிரந்தரமும் ஓய்வூதியத்திற்கு உரித்துடையதுமாகும். நியமனம் பெறுபவர்கள் விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் / தபுதாரர்கள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு பங்களிப்பு செய்தல் வேண்டும். அதற்காக அரசாங்கத்தினால் அவ்வப்போது நிர்ணயிக்கப்படும் பங்களிப்புத் தொகையைச் செலுத்துதல் கட்டாயமாகும்.

ii. இந்நியமனம் மூன்று (03) ஆண்டுகள் கொண்ட தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டதாகும். இப்பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட தினத்திலிருந்து மூன்று (03) ஆண்டுகளுக்குள் ஆட்சேர்ப்புத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முதலாவது வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

iii. 2020.10.16 எனும் திகதியினை கொண்டதும் 18/2020 எனும் இலக்கத்தினை கொண்டதுமான பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, பரிந்துரைக்கப்பட்ட ஏனைய உத்தியோகபூர்வ மொழி(களில்) தேர்ச்சியைப் பெற்றிருக்க வேண்டும்.

iv. இந்நியமனம், அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை விதிமுறைகள், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக் கோவை, அரசாங்க நிதி ஒழுங்குவிதிகள், ஏனைய அரசாங்க ஒழுங்குவிதிகள், சுற்றறிக்கைகள் மற்றும் பணிப்புரைகள் என்பவற்றிற்கும், விஞ்ஞான மற்றும் தொழினுட்ப அமைச்சின் நிறைவேற்று அலுவலர் சேவை வகைக்குரிய (சட்ட அலுவலர் பதவி) ஆட்சேர்ப்புத் திட்டத்தின் ஏற்பாடுகளுக்கும், அவற்றில் அவ்வப்போது மேற்கொள்ளப்படும் திருத்தங்களுக்கும் உட்பட்டதாகும்.

v. விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்ட மொழிமூலத்தை பின்னர் மாற்ற முடியாது. நியமனத்திற்குத் தகுதியுடைய மொழிமூலம், விண்ணப்பத்தில் நீங்கள் குறிப்பிட்டுள்ள மொழிமூலமாகும்.

4. **வயதெல்லை :**

விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியன்று விண்ணப்பதாரர் 21 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.

5. **சம்பள அளவுத்திட்டம் :**

2025.03.25 ஆம் திகதியிடப்பட்ட பொது நிர்வாகச் சுற்றறிக்கை இல. 10/2025 இன் ஏற்பாடுகளுக்கு அமைவாக, இப்பதவிக்கு உரிய மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூ. 82,150 - 10 x 2,400 - 8 x 2,940 - 17 x 3,900 - 195,970 (SL1-2025) ஆகும்.

6. **தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சைக்கு பின்வரும் புள்ளியிடல் திட்டம் பின்பற்றப்படும்.**

| *தொடரிலக்கம்* | *விடயம்* | *புள்ளிகள்* | *அதிகபட்ச புள்ளிகள்* |
|---|---|---|---|
| 01 | **மேலதிக கல்வி தகைமைகள்**<br>அ) அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கை இல. 01/2025 இன் ஏற்பாடுகளுக்கு அமைவாக, அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றினால் சட்டத் துறையில் பெற்றுக் கொள்ளப்பட்ட பட்டப்பின்படிப்பு பட்டம் (postgraduate degree). | 25 | 25 |

<table>
<tr><th>தொடரிலக்கம்</th><th>விடயம்</th><th>புள்ளிகள்</th><th>அதிகபட்ச புள்ளிகள்</th></tr>
<tr><td></td><td>
ஆ) அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கை இல. 01/2025 இன் ஏற்பாடுகளுக்கு அமைவாக, அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றினால் சட்டத்துறையில் பெற்றுக் கொள்ளப்பட்ட பட்டப்பின் டிப்ளமா பட்டம் (Postgraduate Diploma) அல்லது இலங்கை சட்டக் கல்லூரியின் உயர் சட்டக் கல்வி நிறுவனத்தினால் சட்டத் துறையில் பெற்றுக் கொள்ளப்பட்ட பட்டப்பின் டிப்ளமா (Post attorney diploma in law).<br><br>
இ) அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கை இல. 01/2025 இன் ஏற்பாடுகளுக்கு அமைவாக, அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றினால் பெற்றுக்கொள்ளப்பட்ட சட்டப் பட்டம்.<br><br>
• முதலாம் வகுப்பு<br>
• இரண்டாம் வகுப்பு – மேல் பிரிவு<br>
• ஏதேனும் வகுப்பு ஒன்று பெறப்பட்டிருப்பின்<br>
• பொதுச் சித்தி<br><br>
ஈ) சட்டக் கல்லூரியின் இறுதி ஆண்டுப் பரீட்சையில் முதலாம் வகுப்பில் சித்தியடைந்தமை.<br><br>
சட்டக் கல்லூரியின் இறுதி ஆண்டுப் பரீட்சையில் இரண்டாம் வகுப்பில் சித்தியடைந்தமை.<br>
குறிப்பு I : சட்டக் கல்லூரியின் இறுதி ஆண்டில் சிறப்பு சித்தி பெற்ற விண்ணப்பதாரர்களுக்கு மாத்திரமே மேற்குறிப்பிட்ட 05 புள்ளிகள் வழங்கப்படும்.<br>
குறிப்பு II : அதிகூடிய தகைமைக்கு மாத்திரமே புள்ளிகள் வழங்கப் படும்.
</td><td>20<br><br><br><br><br><br><br><br><br><br><br><br><br>15<br>10<br>07<br>05<br>10<br><br>05</td><td></td></tr>
<tr><td>02</td><td>
மேலதிக அனுபவம்<br>
வழக்குகளுடன் தொடர்புடைய ஆவணங்களைத் தயாரித்தல் மற்றும் திறந்த நீதிமன்றத்தில் சமர்ப்பிப்புகளை மேற்கொள்ளுதல்.
<table>
<tr><th></th><th>வழக்குகளை தாக்கல் செய்தல் (ஒரு வழக்கிற்கு)</th><th>நீதிமன்றத்தில் ஆஜராகி சமர்ப்பிப்புகளை மேற்கொண்ட மைக்கான புள்ளிகள் (ஒரு வழக்கிற்கு)</th></tr>
<tr><td>உயர் நீதிமன்றம்</td><td>2</td><td>5</td></tr>
<tr><td>மேன்முறையீட்டு நீதிமன்றம்</td><td>2</td><td>4</td></tr>
<tr><td>மேல் நீதிமன்றம்</td><td>2</td><td>3</td></tr>
<tr><td>மாவட்ட நீதிமன்றம்</td><td>4</td><td>5</td></tr>
<tr><td>நியாய சபை</td><td>2</td><td>3</td></tr>
</table>
குறிப்பு : தொடர்புடைய வழக்குகளின் தீர்ப்புகளின் பிரதிகள் அல்லது வழக்கு இறுதியாக விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட திகதியிலிருந்து பெறப்பட்ட வழக்குப் பதிவின் சான்றளிக்கப்பட்ட பிரதியானது நேர்முகப் பரீட்சை சபைக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
</td><td></td><td>35</td></tr>
</table>

| *தொடரிலக்கம்* | *விடயம்* | *புள்ளிகள்* | *அதிகபட்ச புள்ளிகள்* |
|---|---|---|---|
| 03 | **தகவல் தொழில்நுட்பம் / தகவல் தொழில்நுட்பச் சட்டம் தொடர்பான அறிவு** | | 10 |
| | அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீ கரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றினால் வழங்கப்படும் பட்டப்படிப்பில் பிரதான பாடமாக** தகவல் தொழில்நுட்பம் அல்லது கணினி விஞ்ஞானத்தைப் பயின்றமை. | 10 | |
| | ஆ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீ கரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் அல்லது இலங்கை சட்டக் கல்லூரி அல்லது அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட வேறு தொழில்முறை நிறுவனமொன்றினால் பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பச் சட்டம் தொடர்பான டிப்ளமா பட்டம். | 08 | |
| | இ) கணினி விஞ்ஞானம் அல்லது தகவல் தொழில்நுட்பம் தொடர்பில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றினால் பெற்றுக் கொள்ளப்பட்ட டிப்ளோமா பட்டம் அல்லது அதற்கு மேற்பட்ட தகைமை, அல்லது அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட வேறு தொழில்முறை நிறுவனமொன்றினால் கணினி விஞ்ஞானம் அல்லது தகவல் தொழில்நுட்பம் தொடர்பில் NVQ நிலை 5 அல்லது அதற்கு மேற்பட்ட நிலையில் பெற்றுக்கொள்ளப்பட்ட டிப்ளோமா பட்டம். | 05 | |
| | ஈ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீ கரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் அல்லது இலங்கை சட்டக் கல்லூரி அல்லது அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட வேறு தொழில்முறை நிறுவனமொன்றினால் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பச் சட்டத்துறையில் நடாத்தப்பட்ட ஒரு பாடநெறியைப் பின்பற்றியதன் மூலம் அல்லது பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களில் பங்குபற்றியதன் மூலம் பெற்றுக்கொண்ட சான்றிதழ்கள். (அதிகபட்சமாக இரண்டு சான்றிதழ்களுக்கு மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படும் ஒவ்வொரு சான்றிதழுக்கும் 02 புள்ளிகள் வழங்கப்படும்.) | 04 | |
| | **குறிப்பு** : அதிகூடிய தகைமைக்கு மாத்திரமே புள்ளிகள் வழங்கப்படும். | | |
| 04 | **மொழித்தேர்ச்சி** | | 15 |
| | அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீ கரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றினால் பெற்றுக்கொள்ளப் பட்ட பட்டப்படிப்பில் பிரதான பாடமாக** ஆங்கில மொழியைப் பயின்றமை. | 15 | |

| *தொடரிலக்கம்* | *விடயம்* | *புள்ளிகள்* | *அதிகபட்ச புள்ளிகள்* |
|---|---|---|---|
| | ஆ) சர்வதேச அல்லது தேசிய மட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட சட்ட வாதப் போட்டிகளில் நீதிமன்றம் போன்று உருவகப்படுத்தி அத்தகைய போட்டிகளில் (Moot Court Competitions) வெளிப் படுத்தப்பட்ட ஆங்கில மொழித் தேர்ச்சி.<br><br>**தனிநபர் (Individual)**<br>i. முதலாவது இடம் / சிறந்த திறமை – 12 புள்ளிகள்<br>ii. இரண்டாவது இடம் – 10 புள்ளிகள்<br>iii. மூன்றாவது இடம் / ஏனைய திறமைகள் – 08 புள்ளிகள்<br><br>**குழுக்கள்**<br>i. முதலாவது இடம் / சிறந்த திறமை – 10 புள்ளிகள்<br>ii. இரண்டாவது இடம் – 08 புள்ளிகள்<br>iii. மூன்றாவது இடம் / ஏனைய திறமைகள் – 06 புள்ளிகள் | 12 | |
| | இ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீ கரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றினால் ஆங்கில மொழி தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட டிப்ளோமா பட்டம் அல்லது அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட வேறு நிறு வனமொன்றினால் ஆங்கில மொழி தொடர்பாக பெற்றுக் கொள்ளப்பட்ட SLQF நிலை 3 அல்லது அதற்கு மேற்பட்ட டிப்ளோமா பட்டம் அல்லது அரசாங்கப் பயிற்சி நிறுவன மொன்றில் அல்லது அரசாங்கப் பயிற்சி நிறுவனத்துடன் இணைந்த நிறுவனமொன்றில் குறைந்தபட்சம் 1,500 கற்கை மணித்தியாலங்கள் கொண்ட பாடநெறியொன்றை நிறைவு செய்ததன் பின்னர் ஆங்கில மொழி தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட டிப்ளோமா பட்டம் . | 10 | |
| | ஈ) க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் அல்லது Edexcel அல்லது Cambridge Advanced Level பரீட்சையில் ஆங்கில மொழிப் பாடத்தில் சிறப்புச் சித்தி (A தரம்) பெற்றிருத்தல் அல்லது விண்ணபங்கள் ஏற்றுக்கொள்ளபடுவதற்கான இறுதித் திகதியிலிருந்து உடனடியாக முந்திய இரண்டு (02) வருட காலப்பகுதிக்குள் IELTS பரீட்சையில் மொத்தமாக 6.5 அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றிருத்தல் (ஒவ்வொரு பாடம் / கூறிற்கும் குறைந்தபட்சம் 6.0 புள்ளிகளுடன்), அல்லது TOEFL-IBT இல் 79 அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளையும், TOEFL-CBT இல் 213 அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளையும், அல்லது TOEFL-PBT இல் 550 அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளையும் பெற்றிருத்தல். | 08 | |
| | உ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீ கரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றினால் ஆங்கில மொழி தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட உயர் சான்றிதழ் அல்லது அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட வேறு நிறு வனமொன்றினால் ஆங்கில மொழி தொடர்பாக பெற்றுக் கொள்ளப்பட்ட SLQF நிலை 2 சான்றிதழ்.<br><br>**குறிப்பு** : அதிகூடிய தகைமைக்கு மாத்திரமே புள்ளிகள் வழங்கப்படும். | 05 | |

| *தொடரிலக்கம்* | *விடயம்* | *புள்ளிகள்* | *அதிகபட்ச புள்ளிகள்* |
|---|---|---|---|
| 05 | **நேர்முகப்பரீட்சையில்நிரூபிக்கப்படும் திறமை**<br>விண்ணப்பதாரரின் திறனை மதிப்பீடு செய்து, பின்வரும் வகையான கேள்விகளுக்கு வழங்கப்படும் பதில்களின் அடிப்படையில் புள்ளிகள் வழங்கப்படும்.<br>• வலிமைகளை மதிப்பிடும் கேள்விகள் – 02 புள்ளிகள்<br>• சூழ்நிலை அடிப்படையிலான கேள்விகள் – 03 புள்ளிகள்<br>• இப்பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கான விண்ணப்பதாரரின் திறனை மதிப்பிடும் திறன்சார் கேள்விகள் – 10 புள்ளிகள் | | **15** |
| | **மொத்தம்** | | **100** |

குறிப்பு: நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பிக்கப்படும் சான்றிதழ்களில் தொடர்புடைய காலப்பகுதிகள் குறிப்பிடப்படாதிருப்பின், அவ்வாறான சான்றிதழ்களுக்குரிய காலப்பகுதிகளை உறுதிப்படுத்தும் எழுத்துமூலச் சான்றினை தொடர்புடைய நிறுவனங்களிடமிருந்து பெற்றுச் சமர்ப்பிப்பது விண்ணப்பதாரரின் பொறுப்பாகும். காலப்பகுதி குறிப்பிடப்படாத அல்லது காலப்பகுதி உறுதிப்படுத்தப்படாத சான்றிதழ்களுக்கு புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது.

** "பிரதான பாடம்" என்பது, பட்டப்படிப்பிற்காக நிர்ணயிக்கப்பட்ட மொத்த பாட அலகுகள் (Credits) எண்ணிக்கையில் குறைந்தது மூன்றில் ஒரு பங்கு (1/3) அளவிலான பாட அலகுகளை உள்ளடக்கிய வகையில் பயின்ற பாடத்தைக் குறிக்கும்.

7. **விண்ணப்பதாரர்களின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்தல் :**

எல்லா வகையிலும் முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த விண்ணப்பதாரர்கள் மாத்திரமே தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

நேர்முக பரீட்சையின் போது, அனைத்து சான்றிதழ்களினதும் மூலப் பிரதிகளுடன், விண்ணப்பதாரரால் சுயசான்றுபடுத்தப்பட்ட இரண்டு தொகுதி நகல் பிரதிகளும் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

நேர்முக பரீட்சையின் போது, விண்ணப்பதாரரின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக பின்வரும் ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்:

i. ஆட்பதிவுத் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆளடையாள அட்டை.
ii. செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.
iii. செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்

8. **விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல்:**

i. விண்ணப்பங்களாவன, "செயலாளர், விஞ்ஞான மற்றும் தொழினுட்ப அமைச்சு, 3 ஆம் மாடி, கட்டம் I, செத்சிறிபாய, பத்தரமுல்ல" என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் 2026.09.07 அன்றோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கும் வகையில் அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளபடுவதற்கான இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

ii. சமர்ப்பிக்கப்பட வேண்டிய விண்ணப்பத்தின் மாதிரிப் படிவம் இவ்வறிவித்தலின் இறுதியில் இணைக்கப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர்கள், விண்ணப்பத்தை A4 அளவிலான தாளில் தாமே தயாரிக்க வேண்டும். அதன் முதலாவது பக்கத்தில் இல. 01. முதல் 04 வரை, இரண்டாவது பக்கத்தில் இல. 05 முதல் 09 வரை, மூன்றாவது பக்கத்தில் இல. 10 முதல் 11 வரை உள்ள விடயங்கள் உள்ளடக்கப்படல் வேண்டும். விண்ணப்பம் விண்ணப்பதாரரின் சொந்தக் கையெழுத்தில் பூர்த்தி செய்யப்பட வேண்டும்.

iii. விண்ணப்பம் அடங்கிய உறையின் இடது பக்க மேல் மூலையில் "சட்ட அலுவலர் – (தரம் III) பதவிக்கான ஆட்சேர்ப்பு" எனத் தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும்.

iv. விண்ணப்பத்தில் விண்ணப்பதாரர் இடும் கையொப்பத்தை, அரசாங்கப் பாடசாலையொன்றின் அதிபர், சமாதான நீதவான், சத்திய ஆணையாளர், சட்டத்தரணி, நொத்தாரிசு, முப்படைகளில் ஆணையிடப்பட்ட அதிகாரி அல்லது அரசாங்க சேவை அல்லது மாகாண அரசாங்க சேவையில் நிரந்தரப் பதவி வகித்து மாதாந்த ஒருங்கிணைந்த சம்பளமாக 82,150.00 ரூபா அல்லது அதற்கு மேல் பெறும் அதிகாரியொருவரால் சான்றுப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

v. தற்போது அரசாங்க சேவை அல்லது மாகாண அரசாங்க சேவையில் பணியாற்றும் விண்ணப்பதாரர்கள், தாங்கள் தற்போது பணியாற்றும் நிறுவனத்தின் தலைவரின் ஊடாகத் தமது விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க வேண்டும்.

vi. இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கேற்ப இல்லாத விண்ணப்பங்கள் முன்னறிவித்தல் இன்றியே நிராகரிக்கப்படும். அஞ்சலில் காணாமற்போன அல்லது தாமதமாகக் கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்கள் தொடர்பான எந்தவொரு முறைப்பாடும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

9. **தவறான தகவல்களைச் சமர்ப்பித்தல் :**

ஆட்சேர்ப்பிற்கு முன்னர், விண்ணப்பத்தில் வழங்கப்பட்டுள்ள ஏதேனும் தகவல் பொய்யானது அல்லது தவறானது எனக் கண்டறியப்பட்டால், உங்கள் விண்ணப்பதாரர் எனும் நிலை இரத்துச் செய்யப்படும். ஆட்சேர்ப்பின் பின்னர், விண்ணப்பத்தில் வழங்கப்பட்டுள்ள ஏதேனும் தகவல் பொய்யானது அல்லது தவறானது எனக் கண்டறியப்பட்டால், அதற்குரிய நடைமுறைகளுக்கு அமைவாக உங்களைச் சேவையிலிருந்து பதவி நீக்கம் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

10. நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதற்கோ அல்லது அவற்றை நிரப்பாது இருப்பதற்கோ அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிற்கு உரிமை உள்ளது.

11. இவ்வர்த்தமானி அறிவித்தலின் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலங்களுக்கிடையில் ஏதேனும் முரண்பாடு அல்லது பொருள் வேறுபாடு ஏற்பட்டால், சிங்கள மொழி மூலம் தரப்பட்ட உரையே செல்லுபடியாகும்.

12. இவ்வறிவித்தலில் குறிப்பிடப்படாத அல்லது இவ்வாட்சேர்ப்பு நடைமுறையின் போது எழக்கூடிய ஏதேனும் விடயம் தொடர்பாகப் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் எடுக்கப்படும் தீர்மானமே இறுதியானதாகும்.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளையின்படி,

செயலாளர்,
விஞ்ஞான மற்றும் தொழினுட்ப அமைச்சு.

2026, ஓகத்து 07.

மாதிரி விண்ணப்பப் படிவம்

**விஞ்ஞான மற்றும் தொழினுட்ப அமைச்சுக்கு சட்ட அலுவலர் (நிறைவேற்று அலுவலர் சேவை வகை தரம் III) பதவிக்கான ஆட்சேர்ப்பு - 2026**

[ ]

(அலுவலக பாவனைக்கு மாத்திரம்.)

(விண்ணப்பிக்கும் மொழிமூலத்திற்குரிய இலக்கத்தை உரிய கூட்டினுள் குறிப்பிடுக.)

சிங்களம் -2/ தமிழ் -3 /ஆங்கிலம் - 4 [ ]

**குறிப்பு**: விண்ணப்பித்த மொழிமூலத்தை பின்னர் மாற்ற முடியாது.

---

1.0 1.1 முழுப் பெயர் (திரு. /திருமதி. /செல்வி) : ..........................................................

(சிங்களம் / தமிழில்) ..........................................................

1.2 முழுப் பெயர்: ..........................................................

(ஆங்கிலப் பெரிய எழுத்துக்களில்) ..........................................................

1.3 முதலெழுத்துக்களுடன் பெயர் : (திரு./திருமதி./செல்வி) ……………………………………………………………………………

(சிங்களம் / தமிழில்) ……………………………………………………………………………

உதாரணம்: எம் .ஜி .பி .எஸ் .கே . குணவர்தன

1.4 முதலெழுத்துக்களுடன் பெயர்: ……………………………………………………………………………

(ஆங்கிலப் பெரிய எழுத்துக்களில்)

2.0 2.1 நிரந்தர முகவரி: ……………………………………………………………………………………………………

(சிங்களம் / தமிழில்)

2.2 நிரந்தர முகவரி: ……………………………………………………………………………………

(ஆங்கிலப் பெரிய எழுத்துக்களில்)

3.0 3.1 பாலினம் : ஆண் 0 பெண் 1 [ ] (பொருத்தமான இலக்கத்தை உரிய கூட்டினுள் எழுதுக.)

3.2 திருமண நிலை : திருமணமானவர் 1 [ ] (பொருத்தமான இலக்கத்தை உரிய கூட்டினுள் எழுதுக.)

திருமணமாகாதவர் 2

3.3 பிறந்த திகதி :

ஆண்டு ……………………. மாதம் ……………………………… திகதி ………………………

3.4 2026 .09.07 அன்று உள்ளவாறான வயது:

| வருடங்கள் | மாதங்கள் | நாட்கள் |
|---|---|---|
| [ ][ ] | [ ][ ] | [ ][ ] |

3.5 தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் : [ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ]

4.0 4.1 தொலைபேசி இலக்கம் : நிரந்தரம் [ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ]

கையடக்க தொலைபேசி [ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ]

5.0 கல்வித் தகைமைகள் :

| 5.1 பட்டப்படிப்பு | பெற்றுக்கொண்ட நிறுவனம் | பெற்றுக்கொண்ட திகதி |
|---|---|---|
| …………………………. | ……………………………. | …………………………. |
| …………………………. | ……………………………. | …………………………. |

6.0 இலங்கை உயர் நீதிமன்றத்தின் சட்டத்தரணியாகச் சத்தியப்பிரமாணம் செய்த திகதி :……………………………………………
……………………………………………………………………………………………………………………………………

6.1 உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணியாகச் சத்தியப்பிரமாணம் செய்ததன் பின்னர் 02 வருட செயற்பாட்டு தொழில்முறை அனுபவத்தை நிறைவு செய்த திகதி :………………………………

6.2 தொடர்புடைய சட்டப் பணியனுபவத்தை குறைந்தது 02 வருடங்களாவது நிறைவு செய்த திகதி :...................

* அடிப்படைத் தகைமைகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள் / ஆவணங்கள் விண்ணப்பதாரரால் சுயசான்றுபடுத்தப்பட்டு விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

7.0 விண்ணப்பங்கள் கோருவதற்கான அறிவித்தலின் 06 ஆம் பிரிவின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு தகைமையையும் பெற்றமை தொடர்பான விபரங்கள்:

7.1 மேலதிக கல்வித்தகைமைகள் :

……………………………………………………………………………………………………………………………
……………………………………………………………………………………………………………………………

7.2 மேலதிக தொழில்முறை அனுபவம் :

……………………………………………………………………………………………………………………………
……………………………………………………………………………………………………………………………

7.3 தகவல் தொழில்நுட்பம் தொடர்பான அறிவு: ………………………………………………………………………….

7.4 மொழித் தேர்ச்சி: …………………………………………………………………………………………………………

* மேலதிக தகைமைகளை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் விண்ணப்பத்துடன் அனுப்பப்படக் கூடாது. அவ்வாறான ஆவணங்களை நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பிப்பதற்காகத் தயாராக வைத்திருப்பது விண்ணப்பதாரரின் பொறுப்பாகும்.

8.0 நீங்கள் இதற்கு முன்னர் ஏதேனும் குற்றத்திற்காக நீதிமன்றமொன்றினால் குற்றவாளியாகத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளீர்களா?

("ஆம்" எனில், அதன் விபரங்களை வழங்குக.)

……………………………………………………………………………………………………………………

9.0 விண்ணப்பதாரரின் உறுதிப்படுத்தல்

இவ்விண்ணப்பத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள அனைத்து விபரங்களும் உண்மையானவை மற்றும் சரியானவை எனவும், விண்ணப்பத்தின் அனைத்து பகுதிகளையும் முறையாகப் பூர்த்தி செய்துள்ளேன் எனவும் உறுதிப்படுத்துகின்றேன். என்னால் செய்யப்பட்டுள்ள இவ்வுறுதிப்படுத்தல் பொய்யானது எனக் கண்டறியப்பட்டால், நியமனம் வழங்கப்படுவதற்கு முன்னர் நான் தகுதியிழக்க நேரிடும் என்பதையும், நியமனத்தின் பின்னர் அவ்விடயம் கண்டறியப்பட்டால் சேவையிலிருந்து பதவி நீக்கம் செய்யப்படுவதற்கான நடவடிக்கைகளுக்கு உட்படுவேன் என்பதையும் நான் அறிவேன். மேலும், இங்கு குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து நிபந்தனைகளுக்கும் உடன்படுகின்றேன் எனவும் இதன் மூலம் உறுதியளிக்கின்றேன்.

………………………………….. ……………………………………………………………………
திகதி விண்ணப்பதாரியின் கையொப்பம்

10.0 விண்ணப்பதாரரின் கையொப்பத்தைச் சான்றுப்படுத்தல்

இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பித்த திரு./திருமதி./செல்வி ……………………………………………………… அவர்களை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் என்பதையும், அவர் எனது முன்னிலையில் ……………………………….. அன்று தனது கையொப்பத்தை இட்டார் என்பதையும் இதன் மூலம் சான்றுப்படுத்துகின்றேன்.

……………………………………………….…
சான்றுப்படுத்தும் அதிகாரியின் கையொப்பம்

முழுப் பெயர்: ……………………………………………………………………………………
பதவி: ……………………………………………………………………………………
திகதி: ……………………………………………………………………………………

(உத்தியோகபூர்வ முத்திரை)

11.0 திணைக்களத் தலைவர் / நிறுவனத் தலைவரின் பரிந்துரை (அரசாங்க துறையில் பணியாற்றும் விண்ணப்பதாரர்களுக்கு மாத்திரம்)

மேலே குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களைக் கொண்ட திரு./திருமதி./செல்வி ……………………………………………… ………… அவர்கள் இந்நிறுவனத்தில் பணியாற்றுகின்றார் என்பதையும், அவரால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் சரியானவை என்பதையும், அவரது பணித்திறன் மற்றும் வருகை திருப்திகரமானவை என்பதையும், அவருக்கு எதிராக எந்தவொரு குற்றச்சாட்டு அல்லது ஒழுக்காற்று நடவடிக்கையும் நிலுவையில் இல்லை என்பதையும் இதன் மூலம் உறுதிப்படுத்துகின்றேன். மேலும், அவர் இப்பதவிக்காகத் தெரிவு செய்யப்பட்டால், அவரை சேவையிலிருந்து விடுவிக்க முடியும் என்பதையும் சான்றுப்படுத்துகின்றேன்.

……………………………………………….
திணைக்களத் தலைவர் / நிறுவனத் தலைவரின் கையொப்பம்

பெயர்: ……………………………………………………………………………………
பதவி: ……………………………………………………………………………………..
முகவரி……………………………………………………………………………………
திகதி: ……………………………………………………………………………………

(உத்தியோகபூர்வ முத்திரை)

08-97

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சு

## மருத்துவ சேவைக்கான துணை மருத்துவ சேவையின் பயிற்சி நெறிகளுக்கு மாணவர்களை ஆட்சேர்த்தல்– 2026

சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சின் மருத்துவ சேவைக்கான துணை மருத்துவ சேவையின் பின்வரும் கற்கை நெறிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கு தகைமைகளைக் கொண்டுள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து 2026.08.07 ஆம் திகதி முதல் 2026.08.31 ஆம் திகதி வரை விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இந்த அமைச்சின் உத்தியோகபூர்வ இணையதளத்தின் (www.health.gov.lk) ஊடாக மாத்திரமே இதற்காக விண்ணப்பிக்க முடியும்.

1. **கவனிக்க வேண்டியவை:**

1.1. ஒரு விண்ணப்பதாரர் ஒரு விண்ணப்பத்தை மட்டுமே சமர்ப்பிக்க முடியும். ஒன்றுக்கும் மேற்பட்ட விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும் விண்ணப்பதாரர்களின் அனைத்து விண்ணப்பங்களும் எவ்வித அறிவிப்புகளும் இன்றி நிராகரிக்கப்படும். 2019, 2020, 2021, 2022 மற்றும் 2023 ஆகிய ஐந்து வருடங்களிலும் க.பொ.த (உ. தர) பரீட்சையில் சித்தியடைந்திருந்தாலும் ஒருவருக்கு ஒரு விண்ணப்பத்தை மட்டுமே சமர்ப்பிக்க முடியும். அத்தகைய விண்ணப்பதாரர்கள் தமது விருப்பத்திற்கு ஏற்ப தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு வருடத்திற்காக மாத்திரம் விண்ணப்பிக்கலாம். அவ்வாறின்றி ஒன்றுக்கு மேற்பட்ட வருடங்களுக்காக விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும் விண்ணப்பதாரர்களின் அனைத்து விண்ணப்பங்களும் எவ்வித அறிவிப்புகளும் இன்றி நிராகரிக்கப்படும்.

1.2. கடந்த பல ஆண்டுகளாக மேற்கொள்ளப்பட்ட ஆட்சேர்ப்பு தொடர்பாக அவதானம் செலுத்தும் போது, ஒரு மாணவர் அரசாங்கத்தின் இலவசக் கல்விச் சலுகையின் கீழ் பல்வேறு அரசாங்க நிறுவனங்களினால் நடாத்தப்படும் கற்கை நெறிகள் பலவற்றில் இணைவதால், தகுதியுடைய பல மாணவர்களுக்கு இதுபோன்ற ஒரு வாய்ப்புக்கூட கிடைப்பதில்லை என்பது அவதானிக்கப்பட்டது. இது தவிர இந்த நிலை காரணமாக அரசாங்கத்தின் பணம் வீண் விரையமாகி வருவதுடன், பாடநெறியின் இறுதியில் எதிர்பார்த்த எண்ணிக்கையில் பயிற்றுவிக்கப்பட்ட தொழில்வல்லுநர்களின் எண்ணிக்கை இல்லாத காரணத்தால் சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் திட்டமிட்ட இலக்குகளை அடைய முடியாதுள்ளது. எனவே, மேற்படி நிலைமையைக் குறைப்பதற்கு ஒவ்வொரு விண்ணப்பதாரர்களுக்கும் ஒரு சந்தர்ப்பத்தையாவது வழங்குவதற்குத் தேவையான ஏற்பாடுகள் இந்த வர்த்தமானி அறிவித்தலின் பந்தி இலக்கம் 6 இல் வெளியிடப்பட்டுள்ளன. அதன்படி, இலக்கம் 6.1 முதல் 6.5 வரையிலான துணைப் பந்திகளில் விரிவாக குறிப்பிடப்பட்டுள்ளவாறு தகுதியற்ற ஒருவர் இதற்காக விண்ணப்பித்தல் கூடாது. எவ்வாறாயினும், அத்தகைய தகுதியற்றவர்கள் இதற்கு விண்ணப்பித்து, பின்னர் கண்டறியப்பட்டால், வர்த்தமானி அறிவித்தலின் துணைப் பந்தி 7.3 இன்படி அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும்.

1.3. கடந்த ஆட்சேர்ப்புகளில், உண்மைக்குப் புறம்பான தகவல்கள் (தவறான பரீட்சை ஆண்டுகள், பாடங்கள், பெறப்பட்ட மதிப்பெண்கள் போன்றவை) உள்ளிட்டு விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளதுடன், சில விண்ணப்பதாரர்கள் பொய்யான தகவல்களை உள்ளிட்டு தயாரிக்கப்பட்ட சான்றிதழ்கள் நேர்முகப் பரீட்சைக்கு சமர்ப்பித்துள்ளமையும் அவதானிக்க முடிந்தது. இது ஒரு பாரிய தவறாகும். எனவே, எந்தவொரு விண்ணப்பதாரியும் அவர் சமர்ப்பிக்கும் இணையவழி விண்ணப்பத்தில் தவறான தகவல்களை உள்ளிடக்கூடாது. தவறான தகவல்களை உள்ளிட்டு சமர்ப்பிக்கப்படும் அனைத்து விண்ணப்பங்களும் எவ்வித அறிவிப்புகளும் இன்றி நிராகரிக்கப்படும் என்பதுடன், அத்தகைய விண்ணப்பதாரர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டு, அவர்களின் பெயர்கள் மீண்டும் அரசாங்க சேவைக்கு இணைய முடியாதவர்களின் கறுப்புப் பட்டியலில் சேர்க்கப்படும்.

1.4. ஒவ்வொரு விண்ணப்பதாரரும் முதலில் இந்த வர்த்தமானி அறிவித்தலில் மற்றும் இணையத்தளத்தில்; குறிப்பிடப்பட்டுள்ள இணையவழி விண்ணப்பத்தை பூர்த்தி செய்வதற்கான அறிவுறுத்தல் படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை நன்றாக படித்துப் புரிந்து கொண்டு, இந்த கற்கைநெறிக்கான விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கத் தகுதியானவரா என்பதை உறுதிப்படுத்தல் வேண்டும். அதன் பின்னர் வர்த்தமானி அறிவித்தலின் 8.4 பந்தியின்படி, எந்தவொரு இலங்கை வங்கிக்கிளையில் 1000.00 ரூபா பணத்தை செலுத்தி பெறப்பட்ட பற்றுச்சீற்று, 10.4, 10.5 மற்றும் 10.6 ஆகிய பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களை தயார்செய்து கொண்டு விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்வதன் மூலம் விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதற்கான செயல்முறையை வெற்றிகரமாக மேற்கொள்ள முடியும்.

02. **விண்ணப்பங்கள் கோரப்படும் கற்கை நெறிகள் பற்றிய தகவல்கள் :**

| *குறியீட்டு இல.* | *சேவை* | *பயிற்சி நெறியின் பெயர்* | *பயிற்சிக் காலம்* | *பயிற்சி நெறி வழங்கப்படும் மொழி* |
|---|---|---|---|---|
| 1 | துணை மருத்துவ சேவை | பல் தொழில்நுட்பவியலாளர் | 02 வருடங்கள் | ஆங்கிலம் |
| 2 | | பொதுச் சுகாதார பரிசோதகர் | 02 வருடங்கள் | ஆங்கிலம் |
| 3 | | செயற்கை அவயவ தொழில்நுட்பவியலாளர் | 03 வருடங்கள் | ஆங்கிலம் |
| 4 | | சுகாதார பூச்சியியல் அலுவலர் | 02 வருடங்கள் | ஆங்கிலம் |
| 5 | | பாடசாலை பற்சிகிச்சையாளர் | 02 வருடங்கள் | ஆங்கிலம் |
| 6 | | இதயத்துடிப்பு பதிவாளர் | 02 வருடங்கள் | ஆங்கிலம் |
| 7 | | மருந்து கலவையாளர் | 01 வருடம் | ஆங்கிலம் |
| 8 | | மூளை மின் இயக்கபதிவாளர் | 02 வருடங்கள் | ஆங்கிலம் |

**அட்டவணை இலக்கம் 01**

03. **பதவி தொடர்பான கல்வி மற்றும் பிற விஷேட தகைமைகள் :**

| *தொடர் இலக்கம்* | *பயிற்சி கற்கைநெறி* | *க.பொ.த.(சா.தர) தகைமை* | *க.பொ.த. (உ.தர) தகைமை* | *பயிற்சிக்கான பிற தகைமைகள் மற்றும் விஷேட தகைமைகள்* |
|---|---|---|---|---|
| 1 | பல் தொழில்நுட்ப வியலாளர் | சிங்கள மொழி / தமிழ்மொழி, கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களுடன் மேலும் ஒரு பாடத்தில் குறைந்தபட்சம் திறமைச் சித்தியுடன் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் ஆங்கில மொழி உட்பட ஆறு (06) பாடங்களில் க.பொ.த (சா.த) சித்தியடைந்திருத்தல். | 2019 ஆம் ஆண்டின் (பழைய பாடத்திட்டம்) அல்லது 2019 ஆம் ஆண்டின் (புதிய பாடத்திட்டம்) அல்லது 2020 ஆம் ஆண்டின் (பழைய பாடத்திட்டம்) அல்லது 2020 ஆம் ஆண்டின் (புதிய பாடத்திட்டம்) 2021, 2022 மற்றும் 2023 ஆகிய வருடங்களில் ஏதாவது ஒரு வருடத்தில் க.பொ.த (உ.த.) பரீட்சையில் **இரசாயனவியல்** பாடத்தில் திறமை சித்தியுடன் பௌதிகவியல், உயிரியல், விவசாய விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் ஏதாவது இரண்டு (2) பாடங்களுடன் மூன்று(3) பாடங்களிலும் ஒரே அமர்வில் சித்தியடைந் திருத்தல். | 2026.08.07 ஆம் திகதிக்கு 18 வயதிற்கு குறை யாமலும் 30 வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.<br><br>ஆண் பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க முடியும். |

| *தொடர் இலக்கம்* | *பயிற்சி கற்கைநெறி* | *க.பொ.த.(சா.தர) தகைமை* | *க.பொ.த. (உ.தர) தகைமை* | *பயிற்சிக்கான பிற தகைமைகள் மற்றும் விஷேட தகைமைகள்* |
|---|---|---|---|---|
| 2 | பொது சுகாதார பரிசோதகர் | சிங்கள மொழி / தமிழ்மொழி, கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களுடன் மேலும் ஒரு பாடத்தில் குறைந்தபட்சம் திறமைச் சித்தியுடன் இரண்டு அமர்வுகளுக்கு மேற் படாமல் ஆங்கில மொழி உட்பட ஆறு (06) பாடங் களில் க.பொ.த. (சா.த.) சித்தியடைந்திருத்தல். | 2019 ஆம் ஆண்டின் (பழைய பாடத்திட்டம்) அல்லது 2019 ஆம் ஆண்டின் (புதிய பாடத்திட்டம்) அல்லது 2020 ஆம் ஆண்டின் (பழைய பாடத்திட்டம்) அல்லது 2020 ஆம் ஆண்டின் (புதிய பாடத்திட்டம்) 2021, 2022 மற்றும் 2023 ஆகிய வருடங் களில் ஏதாவது ஒரு வருடத் தில் க.பொ.த. (உ.த.) பரீட்சை யில் **உயிரியல் விஞ்ஞானம் அல்லது இணைந்த கணிதம்** ஆகியவற்றில் ஒன்றில் திறமை சித்தியுடன் **உயிரியல்** விஞ்ஞானம், இணைந்த கணிதம், பௌதிகவியல், இரசாயனவியல், விவசாய விஞ்ஞானம் ஆகிய பாடங் களில் ஏதாவது இரண்டு(2) பாடங்களுடன் மூன்று(3) பாடங்களிலும் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல். | 2026.08.07 ஆம் திகதிக்கு 18 வயதிற்கு குறை யாமலும் 30 வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.<br><br>ஆண்களுக்கு மாத்திரமே விண்ணப்பிக்க முடியும்.<br><br>உயரம் 5 அடி 2 அங்குலம் அல்லது அதற்கு மேல் இருக்க வேண்டும். (157.46 cm) |
| 3 | செயற்கை அவயவ தொழில்நுட்பவியலாளர் | இரு தடவைகளுக்கு மேற் படாமல் விஞ்ஞானம், கணிதம், ஆங்கிலம் மற்றும் சிங்களம் / தமிழ் ஆகிய பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஆறு (06) பாடங் களில் க.பொ.த (சா.த.) இல் சித்தியடைந்திருத்தல். | 2019 ஆம் ஆண்டின் (பழைய பாடத்திட்டம்) அல்லது 2019 ஆம் ஆண்டின் (புதிய பாடத்திட்டம்) அல்லது 2020 ஆம் ஆண்டின் (பழைய பாடத்திட்டம்) அல்லது 2020 ஆம் ஆண்டின் (புதிய பாடத்திட்டம்) 2021, 2022 மற்றும் 2023 ஆகிய வருடங்களில் ஏதாவது ஒரு வருடத்தில் க.பொ.த (உ.த.) பரீட்சையில் **பௌதிகவியல் அல்லது உயிரியல்** பாடத்தில் திறமைச் சித்தியுடன் பௌதிகவியல், உயிரியல், விவசாய விஞ்ஞானம், இணைந்த கணிதம், இரசாயனவியல் ஆகிய பாடங்களில் ஏதாவது இரண்டு(2) பாடங்களுடன் மூன்று(3) பாடங்களிலும் ஒரே அமர்வில் சித்தியடைந் திருத்தல். | 2026.08.07 ஆம் திகதிக்கு 18 வயதிற்கு குறையாமலும் 35 வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.<br><br>ஆண் பெண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும். |

| தொடர் இலக்கம் | பயிற்சி கற்கைநெறி | க.பொ.த.(சா.தர) தகைமை | க.பொ.த. (உ.தர) தகைமை | பயிற்சிக்கான பிற தகைமைகள் மற்றும் விஷேட தகைமைகள் |
|---|---|---|---|---|
| 4 | சுகாதார பூச்சியியல் அலுவலர் | சிங்கள மொழி / தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம் மற்றும் மேலும் ஒரு பாடத்தில் குறைந்தபட்சம் திறமை சித்தியுடன் இரண்டு அமர் வுகளுக்கு மேற்படாமல் ஆங்கில மொழி உட்பட ஆறு (06) பாடங்களில் க.பொ.த. (சா.த.) சித்தியடைந்திருத்தல். | 2019 ஆம் ஆண்டின் (பழைய பாடத்திட்டம்) அல்லது 2019 ஆம் ஆண்டின் (புதிய பாடத்திட்டம்) அல்லது 2020 ஆம் ஆண்டின் (பழைய பாடத்திட்டம்) அல்லது 2020 ஆம் ஆண்டின் (புதிய பாடத்திட்டம்) 2021, 2022 மற்றும் 2023 ஆகிய வருடங்களில் ஏதாவது ஒரு வருடத்தில் க.பொ.த. (உ.த.) பரீட்சையில் உயிரியல் பாடத்தில் திறமை சித்தியுடன் இரசாயனவியல், பௌதீகவியல், விவசாய வியல் ஆகிய பாடங்களில் இரண்டு (02) பாடங்களுடன் மூன்று (03) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந் திருத்தல். | 2026.08.07 ஆம் திகதிக்கு 18 வயதிற்கு குறையாமலும் 30 வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.<br>ஆண்கள் மாத்திரம் விண்ணப்பிக்கலாம் |
| 5 | பாடசாலை பற் சிகிச்சையாளர் | சிங்கள மொழி / தமிழ்மொழி, கணிதம், விஞ்ஞானம் மற்றும் மேலும் ஒரு பாடத்தில் குறைந்தபட்சம் திறமை சித்தியுடன் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் ஆங்கிலம் உட்பட ஆறு (06) பாடங்களில் க.பொ.த. (சா.த.) சித்தியடைந்திருத்தல் | 2019 ஆம் ஆண்டின் (பழைய பாடத்திட்டம்) அல்லது 2019 ஆம் ஆண்டின் (புதிய பாடத்திட்டம்) அல்லது 2020 ஆம் ஆண்டின் (பழைய பாடத்திட்டம்) அல்லது 2020 ஆம் ஆண்டின் (புதிய பாடத்திட்டம்) 2021, 2022 மற்றும் 2023 ஆகிய வருடங்களில் ஏதாவது ஒரு வருடத்தில் க.பொ.த. (உ.த.) பரீட்சையில் உயிரியல் பாடத்தில் திறமைச் சித்தி யுடன் இரசாயனவியல், பௌதீகவியல், விவசாய வியல் ஆகிய பாடங்களில் ஏதாவது இரண்டு (02) பாடங்களுடன் மூன்று (03) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் | 2026.08.07 ஆம் திகதிக்கு 18 வயதிற்கு குறையாமலும் 30 வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.<br>பெண்கள் மாத்திரம் விண்ணப்பிக்கலாம்.<br>உயரம் 4 அடி 10 அங்குலம் அல்லது அதற்கு மேல் இருத்தல் வேண்டும். (147.3 cm)<br>விண்ணப்பிப்பவர்கள் விவாகம் ஆகாதவராக இருக்க வேண்டும். |

| *தொடர் இலக்கம்* | *பயிற்சி கற்கைநெறி* | *க.பொ.த.(சா.தர) தகைமை* | *க.பொ.த. (உ.தர) தகைமை* | *பயிற்சிக்கான பிற தகைமைகள் மற்றும் விஷேட தகைமைகள்* |
|---|---|---|---|---|
| 6 | இதயத்துடிப்பு பதிவாளர் | சிங்கள மொழி / தமிழ்மொழி, கணிதம், விஞ்ஞானம் மற்றும் மேலும் ஒரு பாடத்தில் குறைந்தபட்சம் திறமை சித்தியுடன் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் ஆங்கில மொழி உட்பட ஆறு (06) பாடங்களில் க.பொ.த (சா.த.) இல் சித்தியடைந்திருத்தல்; | 2019 ஆம் ஆண்டின் (பழைய பாடத்திட்டம்) அல்லது 2019 ஆம் ஆண்டின் (புதிய பாடத்திட்டம்) அல்லது 2020 ஆம் ஆண்டின் (பழைய பாடத்திட்டம்) அல்லது 2020 ஆம் ஆண்டின் (புதிய பாடத்திட்டம்) 2021, 2022 மற்றும் 2023 ஆகிய வருடங்களில் ஏதாவது ஒரு வருடத்தில் க.பொ.த. (உ.த.) பரீட்சையில் உயிரியல் பாடத்தில் திறமைச் சித்தியுடன் இரசாயனவியல், பௌதீக வியல் ஆகிய இரண்டு (02) பாடங்களில் சாதாரண சித்தியுடன் மூன்று (03) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் | 2026.08.07 ஆம் திகதிக்கு 18 வயதிற்கு குறையாமலும் 30 வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.<br><br>ஆண்/பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம். |
| 7 | மருந்து கலவையாளர் | சிங்கள மொழி / தமிழ்மொழி, கணிதம், விஞ்ஞானம் மற்றும் மேலும் ஒரு பாடத்தில் குறைந்தபட்சம் திறமைச் சித்தியுடன் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் ஆங்கில மொழி உட்பட ஆறு (06) பாடங்களில் க.பொ.த. (சா.த.) இல் சித்தியடைந் திருத்தல் | 2019 ஆம் ஆண்டின் (பழைய பாடத்திட்டம்) அல்லது 2019 ஆம் ஆண்டின் (புதிய பாடத்திட்டம்) அல்லது 2020 ஆம் ஆண்டின் (பழைய பாடத்திட்டம்) அல்லது 2020 ஆம் ஆண்டின் (புதிய பாடத்திட்டம்) 2021, 2022 மற்றும் 2023 ஆகிய வருடங்களில் ஏதாவது ஒரு வருடத்தில் க.பொ.த. (உ.த.) பரீட்சையில் இரசாயன வியல் பாடத்தில் திறமைச் சித்தியுடன் பௌதீகவியல், உயிரியல், இணைந்த கணிதம் ஆகிய பாடங்களில் இரண்டு (02) பாடங்களுடன் மூன்று (03) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந் திருத்தல் | 2026.08.07 ஆம் திகதிக்கு 18 வயதிற்கு குறையாமலும் 30 வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.<br><br>ஆண்/பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம் |

| தொடர் இலக்கம் | பயிற்சி கற்கைநெறி | க.பொ.த.(சா.தர) தகைமை | க.பொ.த. (உ.தர) தகைமை | பயிற்சிக்கான பிற தகைமைகள் மற்றும் விஷேட தகைமைகள் |
|---|---|---|---|---|
| 8 | மூளை மின் இயக்கபதிவாளர் | சிங்கள மொழி / தமிழ்மொழி, கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களுடன் மேலும் ஒரு பாடத்தில் குறைந்தபட்சம் திறமைச் சித்தியுடன் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் ஆங்கில மொழி உட்பட ஆறு (06) பாடங்களில் க.பொ.த (சா.த.) இல் சித்தியடைந்திருத்தல் | 2019 ஆம் ஆண்டின் (பழைய பாடத்திட்டம்) அல்லது 2019 ஆம் ஆண்டின் (புதிய பாடத்திட்டம்) அல்லது 2020 ஆம் ஆண்டின் (பழைய பாடத்திட்டம்) அல்லது 2020 ஆம் ஆண்டின் (புதிய பாடத்திட்டம்) 2021, 2022 மற்றும் 2023 ஆகிய வருடங்களில் ஏதாவது ஒரு வருடத்தில் க.பொ.த. (உ.த.) பரீட்சையில் உயிரியல் பாடத்தில் திறமைச் சித்தியுடன் பௌதீகவியல், இரசாயனவியல் ஆகிய இரண்டு (02) பாடங்களுடன் மூன்று (03) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தி யடைந்திருத்தல் | 2026.08.07 ஆம் திகதிக்கு 18 வயதிற்கு குறையாமலும் 30 வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.<br><br>ஆண்/பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம். |

**அட்டவணை இலக்கம் 02**

04. **கற்கை நெறிக்கு தெரிவு செய்யும் முறை :**

4.1. துணை மருத்துவ சேவையின் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான நடைமுறைகள் மற்றும் அதனுடன் தொடர்பாக காலத்திற்குக் காலம் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களுக்கு அமைய தகைமைகளைக் கொண்டுள்ள விண்ணப்பதாரிகளிடமிருந்து ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும் என்பதுடன், விண்ணப்பதாரர்களின் க.பொ.த (உ.தர.) Z புள்ளிகளின் அடிப்படையில், அடையாளமிட்ட கற்கை நெறிகளின் முன்னுரிமை வரிசையைக் கருத்தில் கொண்டு ஒரு பயிற்சி கற்கை நெறிக்கு மட்டுமே தெரிவு செய்யப்படும்.

4.2. கணிக்கப்பட்ட வெற்றிடங்களின் எண்ணிக்கை மற்றும் பயிற்சி திறன், பயிற்சி கல்லூரிகளில் காணப்படும் வசதிகள், நாட்டின் தற்போதைய நிதி நிலைமை மற்றும் பிற விஷேட நிலைமைகள் ஆகியவற்றை கருத்தில் கொண்டு பயிற்சிக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட வேண்டிய எண்ணிக்கை தீர்மானிக்கப்படும் என்பதுடன், நாடளாவிய ரீதியில் ஆட்சேர்ப்பு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ள மொத்த எண்ணிக்கை ஒவ்வொரு மாகாணத்தின் சனத்தொகையின் அடிப்படையில், சனத்தொகை விகிதாசாரத்திற்கு ஏற்ப பிரிக்கப்பட்டு ஒவ்வொரு மாகாணத்திலுமிருந்தும் ஆட்சேர்ப்பு செய்ய வேண்டிய எண்ணிக்கை தீர்மானிக்கப்படும்.

4.3. அதன்பின்னர் ஒவ்வொரு மாகாணத்திலுமிருந்து ஆட்சேர்ப்பு செய்ய வேண்டிய எண்ணிக்கை உரிய மாகாணத்திலிருந்து ஒவ்வொரு பரீட்சைக்கும் விண்ணப்பித்து தேவையான குறைந்தபட்ச தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணபதாரர்களின் எண்ணிக்கையின் விகிதாசாரத்திற்கு பிரிக்கப்பட்டு உரிய மாகாணத்திலிருந்து ஒவ்வொரு பரீட்சையிலும் ஆட்சேர்ப்பு செய்ய வேண்டிய எண்ணிக்கை தீர்மானிக்கப்படும்.

4.4. பின்னர் அந்த ஒவ்வொரு பரீட்சைகளில் இருந்தும் ஆட்சேர்ப்பு செய்யவேண்டிய எண்ணிக்கை அந்த பரீட்சையில் உயிரியல் விஞ்ஞான பாடத்துறையில் அல்லது பௌதீக விஞ்ஞான பாடத்துறையில் விண்ணப்பித்த, குறைந்தபட்ச தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கைக்கு விகிதாசாரமாக பிரிக்கப்பட்டு உரிய மாகாணத்திலிருந்து ஒவ்வொரு பரீட்சைக்கும் ஒவ்வொரு விடயத்துறைகளின் கீழ் அதிகூடிய Z புள்ளிகளைப் பெற்ற விண்ணபதாரர்களில் இருந்து அடையாளமிட்ட கற்கை நெறிகளின் முன்னுரிமை வரிசையையும் கருத்தில் கொண்டு மாகாண அடிப்படையில் தெரிவு செய்யப்படும்.

4.5. ஒரு குறிப்பிட்ட மாகாணத்திற்கு மேற்குறிப்பிடப்பட்டவாறு ஒதுக்கப்பட்டுள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கையை அந்த மாகாணத்திற்கான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்களால் நிரப்ப முடியாத பட்சத்தில் அந்த வெற்றிடங்களின் எண்ணிக்கை நாட்டின் ஏனைய மாகாணங்களுக்கிடையில் அந்த மாகாணங்களின் சனத்தொகை விகிதத்தில் மீள்பகிர்வு செய்யப்படும்.

குறிப்பு :

(அ) ஒவ்வொரு விண்ணப்பதாரரும் மேலே 4.1 பந்தியின்படி தெரிவு செய்யப்பட்ட கற்கை நெறிக்கு இணைதல் வேண்டும் என்பதுடன், வேறு கற்கை நெறிகளுக்கு இணைவதற்கோ அல்லது மாறுவதற்கோ சந்தர்ப்பம் வழங்கப்பட மாட்டாது.

(ஆ) மேலும், கற்கை நெறியில் பதிவு செய்யப்படாத மாணவர்களுக்காக மீண்டும் ஒருமுறை மாணவர்களை தெரிவு செய்வதன் மூலம் அவர்கள் ஒவ்வொரு கற்கை நெறிகளுக்கிடையே மாறிக்கொள்வதன் மூலம் ஏற்படும் நெருக்கடி நிலையை தவிர்ப்பதற்கு ஒருமுறை மாத்திரம் மாணவர்கள் தெரிவு செய்யப்படுவதுடன், எந்த கற்கை நெறிக்கும் மீண்டுமொரு முறை மாணவர்கள் இணைக்கப்பட மாட்டார்கள்.

(இ) கடந்த முறை வெளியிடப்பட்ட (இல. 2200 மற்றும் 2020.10.29) வர்த்தமானி அறிவிப்பின் தகுதிப் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள திருத்தத்தின்படி

* ஒவ்வொரு விண்ணப்பதாரரும் இலங்கையின் எந்தவொரு பகுதியிலும் சேவையாற்ற உறுதிபூண்டிருக்க வேண்டும்.

* பயிற்சிக்குப் பிறகு மத்திய அரசாங்கத்திலோ அல்லது மாகாண பொது சேவையிலோ நிரந்தர நியமனம் பெற்றால் குறைந்தது 10 ஆண்டுகள் சேவையாற்ற விருப்பம் கொண்டிருக்க வேண்டும்.

05. **தகுதிகள் :** அனைத்து விண்ணப்பதாரர்களும்

5.1. இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்.

5.2. விண்ணப்பதாரர்கள் நன்நடத்தை உடையவராகவும், சிறந்த உடல் மற்றும் உள ஆரோக்கியத்தைக் கொண்டவராகவும் இருத்தல் வேண்டும்.

5.3. தாம் விண்ணப்பிக்கும் மாவட்டம் வதிவிட மாவட்டமாகக் கருதப்படுவதற்கு, விண்ணப்பதாரர் விண்ணப்ப முடிவுத் திகதியான 2026.08.31 ஆம் திகதிக்கு கிட்டிய 03 வருடங்கள் தொடர்ந்து அந்த மாவட்டத்தில் வசித்திருக்க வேண்டும். அதனை உறுதிப்படுத்துவதற்காக கிராம அலுவலர் சான்றிதழை சமர்ப்பிக்க வேண்டும். எவ்வாறாயினும், தொடர்ந்து 03 வருடங்களாக வதிவிட காலத்தை நிரூபிக்க முடியாத விண்ணப்பதாரர்களுக்கு அவர்களின் வதிவிட மாவட்டமாக அவர்கள் விண்ணப்பித்த மாவட்டத்தை வழங்க முடியாது என்பதுடன், அத்தகைய விண்ணப்பதாரர்களின் முந்தைய வதிவிட காலங்களை கருத்தில் கொண்டு, விண்ணப்பதாரர் அடுத்ததாக நீண்ட காலங்கள் வசித்த மாவட்டம் விண்ணப்பதாரருக்கான வதிவிட மாவட்டமாக நேர்முகப் பரீட்சை சபையினால் தீர்மானிக்கப்படும். இதற்குத் தேவையான ஆவணங்களை நேர்முக சபையிடம் விண்ணப்பதாரர்கள் உடனடியாக சமர்ப்பித்தல் வேண்டும்.

குறிப்பு :

விண்ணப்பதாரர் ஒருவரின் தகப்பன் அல்லது தாய் அரசாங்க, மாகாண அரசாங்க சேவையில் அல்லது அரச கூட்டுத்தாபனமொன்றில் இடமாற்றம் பெறக்கூடிய சேவையிலுள்ள காரணத்தால் அல்லது வேறு தவிர்க்க முடியாத காரணங்களினால் கிட்டிய 03 வருட வதிவை அவரினால் உறுதி செய்ய முடியாத சந்தர்ப்பங்களில் ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்கள் சமர்ப்பிக்கப்பட்டால் அது தொடர்பான இறுதித்தீர்மானம் சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் செயலாளரினால் எடுக்கப்படும்.

06. **கற்கை நெறிக்கு விண்ணப்பிப்பதற்கு அல்லது இணைவதற்கு தகுதியற்றவர்கள் :**

6.1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழுள்ள அரசாங்க பல்கலைக்கழகம் ஒன்றில்/ அரசாங்க பல்கலைக்கழக கல்லூரியொன்றில் க.பொ.த. (உ.தர) தகைமைகளுடன் ஆட்சேர்ப்பு செய்யப்படும் பட்டப் படிப்பைத் தொடர்வதற்காக "**அரசாங்க இலவசக் கல்விச் சலுகைகள்**" இன் கீழ், உள்ளக மாணவராகப் பதிவு செய்தவர்கள்/ கற்றுக்கொண்டிருப்பவர்கள்.

6.2. தேசிய கல்வியல் கல்லூரியொன்றில் க.பொ.த. (உ.தர) தகைமைகளுடன் ஆட்சேர்ப்பு செய்யப்படும் கற்கைக்காக பதிவு செய்தவர்கள்/ கற்றுக்கொண்டிருப்பவர்கள்.

6.3. சுகாதார அமைச்சின் கீழ் அல்லது வேறு ஏதாவது அரசாங்க நிறுவனம் அல்லது க.பொ.த. (உ.தர) தகைமைகளுடன் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட முழுநேர கற்கைக்காக பதிவு செய்தவர்கள்/ கற்கையை தொடர்பவர்கள்.

6.4 மேலே 6.1, 6.2 மற்றும் 6.3 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனமொன்றில் கற்கைக்காக பதிவு செய்துள்ள மாணவர்கள் இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியான பிறகு, அவர்கள் தங்கள் பதிவை இரத்து செய்தாலும், அவர்கள் இதற்காக விண்ணப்பிக்க/ இணைவதற்கு தகுதி பெற மாட்டார்கள். மேலும் வர்த்தமானி அறிவித்தல் வெளியான

பிறகும்/ நேர்முகப்பரீட்சை நடாத்திய பிறகும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனங்களுக்குரிய கற்கைகளுக்கு பதிவு செய்து பின்னர் அந்த பதிவை இரத்து செய்தாலும், அவர்களும் இந்த கற்கை நெறியில் இணைவதற்கு தகுதி பெற மாட்டார்கள்.

6.5 **திருமணம் பதிவு செய்தவர்கள் அல்லது விவாகரத்து செய்தவர்கள் (இது பாடசாலை பற்சிகிச்சையாளர் கற்கை நெறிக்கு மாத்திரம் பொருந்தும்)**

07. **ஏனைய விடயங்கள் :**

7.1 நீங்கள் ஏதாவது பல்கலைக்கழகம் ஒன்றில் பட்டப்படிப்பை பூர்த்தி செய்தவராக இருந்தால், அந்தப் பட்டம் நடைமுறைப்படுத்திய திகதியானது (Effective Date) இந்த கற்கைநெறிக்கான விண்ணப்பத் திகதிக்கு அதாவது 2026.08.07 இற்கு முந்திய திகதியாக இருக்க வேண்டும்.

7.2. மேற்படி சகல நிபந்தனைகளையும் பூர்த்தி செய்திருந்தாலும் கட்டாயமாக நீங்கள் விண்ணப்பிக்கும் இந்த கற்கை நெறி / நெறிகளுக்கு அனுமதிக்கப்படுவீர்கள் என இந்த வர்த்தமானி அறிவித்தலில் எந்தவொரு இடத்திலும் அல்லது பந்தியிலும் **குறிப்பிப்படவில்லை** என்பதை கவனத்திற் கொள்ளல் வேண்டும். குறிப்பிடப்பட்டுள்ள சகல நிபந்தனைகளைப் பூர்த்தி செய்திருந்தாலும் தகுதியைப் பெற போதுமான Z புள்ளியை பெறாத விடத்து அல்லது இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யவில்லை என்றால், அவர்கள் எவ்விதத்திலும் இப்பயிற்சிக்கு தகுதியற்றவர்களாகவே கருதப்படுவார்கள்.

7.3 மேலே 6.1, 6.2 மற்றும் 6.3 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனமொன்றில் முழு நேர கற்கைக்காக பதிவு செய்துள்ள மாணவர்கள்/ கற்கை நெறிகளை தொடர்பவர்கள் அல்லது 6.4 மற்றும் 6.5 பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதியற்றவர்கள் இதற்காக விண்ணப்பித்து, பின்னர் கண்டறியப்பட்டால் உரிய கற்கையிலிருந்து/ பதவியிலிருந்து நீக்கப்படுவதுடன் அதுவரை அரசாங்கத்தினால் அவருக்காக செலவிடப்பட்ட சகல கொடுப்பனவுகளும் அவரிட மிருந்து அறவிடப்படும். அத்துடன் அவர்களின் பெயர்கள் மீண்டும் அரசாங்க சேவையில் இணைய முடியாதவர்களின் பட்டியலில் உள்வாங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.

7.4 கல்வித் தகைமைகள் மற்றும் ஏனைய சகல அனைத்து தகைமைகளும் விண்ணப்ப இறுதித்தினமான 2026.08.31 ஆம் திகதிக்கு சகல விதத்திலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

7.5 மேலும், ஏதாவது கற்கை நெறிக்கு வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் இன்றி விண்ணப்பித்தால், அதனால் விண்ணப்பதாரர்களுக்கு பின்னர் ஏற்படக்கூடிய அசௌகரியங்களுக்கு இந்த அமைச்சு எந்த பொறுப்பையும் ஏற்காது.

08. **விண்ணப்பிக்கும் முறை :**

8.1 மேற்படி பயிற்சி நெறிக்கு சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தின் (www. health.gov.lk) ஊடாக விண்ணப்பிக்க முடியும். அதற்காக இந்த அமைச்சின் இணையத்தளத்தில் உரிய பகுதியில் உள்ள விண்ணப்பத்தை பூர்த்தி செய்து அனுப்ப வேண்டும். விண்ணப்பத்தை நிரப்புவதற்கு எமது இணையத்தளத்தின் இந்த வர்த்தமானி அறிவுறுத்தலுடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல் படிவத்தைப் பார்க்கவும்.

8.2 ஆங்கிலத்தில் மட்டுமே விண்ணப்பம் பூர்த்தி செய்யப்பட வேண்டும்.

8.3 மேற்படி கற்கைகளுக்கான அடிப்படைத் தகுதிகளை நீங்கள் பூர்த்தி செய்திருந்தால், நீங்கள் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட கற்கை நெறிகளுக்காக விண்ணப்பிக்கலாம். அவ்வாறு நீங்கள் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட கற்கை நெறிகளுக்கு விண்ணப்பிப்பதாயின், இணைத்தளத்தில் காட்டப்பட்டுள்ள விண்ணப்பப் படிவத்தில் உங்கள் விருப்பத் தெரிவின்படி முன்னுரிமை வரிசையில் அந்தந்த கற்கை நெறிகளை தேர்ந்தெடுக்க வேண்டும். அவ்வாறு பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தை பதிவேற்றிய பிறகு, அதில் உங்கள் விருப்பத் தெரிவுக்கு ஏற்ப தெரிவு செய்து அடையாளமிட்ட கற்கை நெறிகளின் வரிசை கிரமத்தை மாற்றவோ அல்லது தேர்ந்தெடுக்கப்பட்ட கற்கை நெறிகளில் ஒன்றை அல்லது அதற்கு மேற்பட்ட கற்கை நெறிகளை திரும்பப் பெறவோ அல்லது புதிய ஒரு கற்கை நெறியை அல்லது பல கற்கை நெறிகளை சேர்க்கவோ எந்த சந்தர்ப்பத்திலும் எதற்காகவும் அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

8.4 விண்ணப்பதாரிகள் ரூபா 1,000.00 பணத்தை இலங்கை வங்கி, தப்ரோபேன் கிளையின் இலக்கம் 7041318 எனும் சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சின் செயலாளரின் பரீட்சைக் கட்டணம் அறவிடல் கணக்கிற்கு செலுத்தப்பட வேண்டும். ஒவ்வொரு விண்ணப்பதாரரும் விண்ணப்பத்தை சமர்ப்பிக்க முன் ஏதேனும் இலங்கை வங்கிக் கிளையில் இந்த தொகையை செலுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதுடன், அதற்காக பெறப்பட்ட பற்றுச்சீட்டின்

அச்சிடப்பட்ட இலக்கத்தை விண்ணப்பத்தின் உரிய இடத்தில் உள்ளிட்ட பிறகே தங்கள் விண்ணப்பத்தை இணையவழி ஊடாக சமர்ப்பித்தல் வேண்டும். இப்பணத்தை பணம் வைப்புச் செய்யும் இயந்திரம் ஊடாக அல்லது இணைய வங்கி சேவை மூலம் செலுத்தக்கூடாது. இக்கட்டணம் எக்காரணத்தைக் கொண்டும் மீண்டும் திருப்பித்தர மாட்டாது என்பதுடன் பிரிதொரு பரீட்சையொன்றுக்காக மாற்றம் செய்வதற்கும் இடமளிக்கப்பட மாட்டாது. நீங்கள் மேற்படி கட்டணம் செலுத்தியதற்கான ஆதாரத்தை (பற்றுச்சீட்டு) பாதுகாப்பாக தம்வசம் வைத்திருத்தல் வேண்டும் என்பதுடன், நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டால் அதன் போது அதனை கட்டாயமாக சமர்ப்பித்தல் வேண்டும். அதன்படி, விண்ணப்பத்தை சமர்ப்பித்த பிறகு பணம் செலுத்தப்பட்டமை கண்டறியப்பட்டால் அந்த விண்ணப்பதாரர்களும் பற்றுச்சீட்டை சமர்ப்பிக்கத் தவறிய விண்ணப்பதாரர்களும் ஆட்சேர்ப்புக்குத் தகுதியற்றவர்களாக கருதப்படுவார்கள்.

8.5. **சமர்ப்பிக்கப்பட்ட இணையவழி விண்ணப்பத்தின் பிரதி மற்றும் 05 இலக்கக் குறியீட்டைப் பெறல்**

(அ) இந்த வர்த்தமானி அறிவிப்பில் மற்றும் அதனுடன் இணைந்ததாக இணையவழி விண்ணப்பம் பூர்த்தி செய்வதற்கு இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ள அறிவுறுத்தல் படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து விடயங்களுக்கும் ஏற்ப விண்ணப்பத்தை வெற்றிகரமாகச் சமர்ப்பிக்கும் ஒவ்வொரு விண்ணப்பதாரருக்கும் விண்ணப்பம் முறையாக அனுப்பிய உடனேயே அதன் பிரதி மற்றும் தனித்துவமான 05 இலக்க குறியீடு பெறப்படும்.

(ஆ) ஒவ்வொரு விண்ணப்பதாரரும் கணினித் திரையில் தோன்றும் தமது விண்ணப்பத்தின் அச்சுப் பிரதியொன்றை (Print - out) எடுக்க வேண்டும். அதனை தபால் மூலம் அனுப்ப வேண்டிய அவசியமில்லை. விண்ணப்பத்தை சமர்ப்பித்த ஒவ்வொரு விண்ணப்பதாரரும் தான் இதற்காக விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டதற்கான முறையான மற்றும் சரியான ஒரே ஆதாரமாக இருப்பதால் அதனை பாதுகாப்பாக வைத்திருப்பது உங்கள் பொறுப்பாகும். அதுமட்டுமன்றி, 05 இலக்கங்களைக் கொண்ட குறியீட்டையும் பாதுகாப்பாக வைத்திருப்பதன் மூலம் நீங்கள் சமர்ப்பித்த விண்ணப்பத்தின் பிரதியை பின்னர் பெறலாம்.

(இ) ஏதாவது சந்தர்ப்பத்தில் விண்ணப்பம் சமர்ப்பித்த பிறகு அதன் நகல் அல்லது 05 இலக்கங்களைக் கொண்ட குறியீடு கிடைக்காத விண்ணப்பதாரர்கள் தங்கள் விண்ணப்பங்கள் முறையாக பதிவேற்றம் செய்யப்படவில்லை/ சமர்ப்பிக்கப்படவில்லை என்பதை புரிந்து கொள்ள வேண்டும். அத்தகைய நபர்கள் அனைவரும் விண்ணப்பம் சமர்ப்பிக்காத மாணவர்களாகவே கருதப்படுவார்கள். அதன்படி, அத்தகைய விண்ணப்பதாரர்கள் உடனடியாக கீழே பந்தி 8.6(அ) இல் குறிப்பிடப்பட்டுள்ள தொலைபேசி அல்லது /மற்றும் மின்னஞ்சல் ஊடாக மனித வள முகாமைத்துவம் மற்றும் ஒருங்கிணைப்புப் பிரிவைத் தொடர்பு கொண்டு 2026.08.31 ஆம் திகதிக்கு முன் தமது விண்ணப்பம் தொடர்பான சிக்கல்களைத் தீர்த்து, தமக்குரிய குறியீடு மற்றும் விண்ணப்பத்தின் நகல்களைப் பெற ஏற்பாடு செய்தல் வேண்டும். இது விண்ணப்பதாரியின் பொறுப்பாகும் என்பதை அவதானத்திற்கு உட்படுத்துகிறேன். எவ்வாறாயினும், இந்த அமைச்சிற்கு முறையாக அனுப்பப்படாத இணையவழி விண்ணப்பங்கள் தொடர்பாக 2026.08.31 ஆம் திகதிக்குப் பின்னர் சமர்ப்பிக்கப்படும் எவ்வித கோரிக்கைகளும் கருத்தில் கொள்ளப்பட மாட்டாது.

(ஈ) மேலும், விண்ணப்பதாரர் ஒருவரினால் இந்த ஆட்சேர்ப்பு தொடர்பான எந்தவொரு விடயம் தொடர்பாகவும் செய்யப்படும் கோரிக்கைகள் தமது விண்ணப்பத்தின் பிரதியுடன் அனுப்பப்படல் வேண்டும் என்பதுடன், அதற்கு மாறாக சமர்ப்பிக்கும் எந்தவொரு கோரிக்கையும் கருத்தில் கொள்ளப்பட மாட்டாது என்பதை மேலும் அவதானத்திற்கு உட்படுத்துகிறேன்.

8.6 **அத்தியவசிய தகவல்களுக்காக விசாரித்தல்**

(அ) இக்கற்கைக்கு விண்ணப்பிப்பதற்கான அனைத்து தகைமைகளையும் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்கள் விண்ணப்பத்தை பூர்த்தி செய்வதில் ஏதேனும் சிக்கல்கள் எழுந்தால் அது தொடர்பாக தொழில்நுட்ப உதவிகளுக்கு அல்லது மேலே பந்தி 8.5 (இ) இல் குறிப்பிடப்பட்ட சிக்கல்களைத் தீர்ப்பதற்காக மட்டும் வாரத்தின் வேலை நாட்களில் மு.ப 9.00 தொடக்கம் 4.00 வரை சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் மனித வள முகாமைத்துவம் மற்றும் ஒருங்கிணைப்புப் பிரிவின் 0112 340 007 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். hrcodmoh@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரியிலும் தொடர்பு கொள்ளலாம். (மின்னஞ்சல் ஊடாக தொடர்பு கொள்ளும்போது எப்போதும் உங்கள் தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் மற்றும் தொலைபேசி இலக்கத்தை குறிப்பிடுவது கட்டாயமாகும்.)

(ஆ) சம்பந்தப்பட்ட அனைத்து விபரங்களும் இந்த வர்த்தமானி அறிவித்தலில் மற்றும் சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் இணையத்தளத்தில் (www.health.gov.lk) விரிவாக குறிப்பிடப்பட்டுள்ளதுடன், ஏனைய விடயங்கள் தொடர்பாக விசாரிப்பதை தவிர்க்கவும்.

09. **விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்:**

9.1 இலங்கை நிருவாக சேவையில் உள்ள உத்தியோகத்தர்/ இலங்கை கல்விச் சேவையிலுள்ள உத்தியோகத்தர்/ இலங்கை கணக்காளர் சேவையில் உள்ள உத்தியோகத்தர்/அரசாங்க பாடசாலையொன்றின் அதிபர்/ சமாதான நீதவான்/ சட்டத்தரணி அல்லது வருடாந்த சம்பளம் 8,54,840 ரூபாவிற்கு குறையாத சம்பளம் பெறும் நிரந்தர ஓய்வூதியம் பெறக்கூடிய பதவியில் உள்ள அரசாங்க உத்தியோகத்தர் ஒருவரினால் விண்ணப்பதாரியின் கையொப்பம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

9.2 இந்த வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நியதிகளுக்கு இணங்காத மற்றும் பூரணமற்ற விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தல்களும் இன்றி நிராகரிக்காப்படும்.

10. **நேர்முகப்பரீட்சைக்கு நீங்கள் அழைக்கப்பட்டால் சமர்ப்பிக்க வேண்டிய விபரங்கள் :**

10.1 நீங்கள் வெற்றிகரமாக பதிவேற்றிய இணையவழி விண்ணப்பங்களுக்கு அமைய குறைந்தபட்ச கல்வித் தகைமையை பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்களுள் Z பெறுமதிக்கு அமைய தயாரிக்கப்பட்ட முதன்மை பட்டியலொன்றை அடிப்படையாகக் கொண்டு தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் மாத்திரம் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள். சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் செயலாளரினால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சை சபையினால் ஒவ்வொரு பதவிக்குரித்தான ஆட்சேர்ப்புத் திட்டத்தில் மற்றும் இந்த வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் மற்றும் உடற்தகைமைகள் என்பன பரிசீலிக்கப்படும். நேர்முகப் பரீட்சையின் போது விண்ணப்பதாரர்கள் பின்வரும் ஆவணங்களின் மூலப்பிரதிகளை சமர்ப்பித்தல் வேண்டும்.

தவிர்க்க முடியாத காரணத்தினால் (நேர்முக பரீட்சை சபையினால் ஏற்றுக்கொள்ளக்கூடிய) விண்ணப்பதாரர் ஒருவருக்கு ஏதாவது சான்றிதழ்/ ஆவணத்தை அன்றைய தினத்தில் சமர்ப்பிக்க முடியாதவிடத்து நேர்முகப்பரீட்சை சபையின் அறிவுறுத்தல்களுக்கு அமைய அந்த சான்றிதழ்/ஆவணத்தை நேர்முகப்பரீட்சை நடைபெற்ற தினத்திலிருந்து 07 நாட்களுக்குள் இந்த அமைச்சின் மனித வள முகாமைத்துவம் மற்றும் ஒருங்கிணைப்புப் பிரிவிற்கு நேரில் கொண்டு வந்து கையளிக்க வேண்டும் என்பதுடன், அவ்வாறு செய்வதற்கு தவறும் அனைத்து விண்ணப்பதாரர்களும் இந்த தேர்வுக்குத் தகுதியற்றவர்களாகக் கருதப்படுவார்கள்.

10.2. இணையத்தளத்தின் ஊடாக பதிவேற்றம் (UPLOAD) செய்யப்பட்ட விண்ணப்பத்தின் அச்சுப்பிரதி (9.1 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள உத்தியோகத்தர் ஒருவரினால் சான்றுறுதி செய்யப்பட்ட)

10.3 பிறப்பு அத்தாட்சிப் பத்திரம்.

10.4 க.பொ.த. (உ.தர) பரீட்சைப் பெறுபேறு மற்றும் Z பெறுமானத்தைக் குறிக்கும் சான்றிதழ் (பரீட்சை திணைக்களத்தினால் வழங்கப்பட்ட)

10.5 க.பொ.த. (ச.தர) பரீட்சை பெறுபேறு (பரீட்சை திணைக்களத்தினால் வழங்கப்பட்ட)

10.6 ஆட்பதிவு திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆளடையாள அட்டை அல்லது கடவுச்சீட்டு அல்லது செல்லுபடியாகும் உள்நாட்டு சாரதி அனுமதிப்பத்திரம்

10.7 1000.00 ரூபா பணத்தை வங்கிக்கு செலுத்தியமைக்கான ரசீது.

10.8 வதிவிடத்தை உறுதிப்படுத்துவதற்கான கிராம சேவை அலுவலரினால் வழங்கப்பட்ட வதிவு தொடர்பான சான்றிதழ்

10.9 மாணவர் பணி காட்டி (பாடசாலை விடுகைப் பத்திரம் - கல்வி B 59 பொது படிவம்)

10.10 மேலே 6.5 துணைப் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு திருமணம் ஆகவில்லை அல்லது விவாகரத்து செய்யவில்லை என்பதை நிரூபிக்க சமாதான நீதவான் முன்னிலையில் 50.00 ரூபா முத்திரையில் கையெழுத்திட்ட உறுதிமொழி. (இது பாடசாலை பற்சிகிச்சையாளர் கற்கை நெறிக்கு மட்டுமே பொருந்தும்)

10.11 மேலே 6 ஆவது பந்தியின் 6.1 முதல் 6.4 வரையான துணைப் பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளபடி தகுதியற்ற ஒருவர் அல்ல என்பதை உறுதிப்படுத்துவதற்கான உறுதிமொழி.

குறிப்பு :

(அ) மேலே 10.2 தொடக்கம் 10.11 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களின் தம்மால் சான்றுறுதி செய்யப்பட்ட நிழற்பிரதிகள் நேர்முகப்பரீட்சைக்கு வரும் போது கொண்டு வர வேண்டும்.

(ஆ) பயிற்சிக் கல்லூரிகளில் காணப்படும் இடவசதிகள் மற்றும் சேவை அவசியம் உட்பட பயிற்சிக்கு இணைக்கப்படும் எண்ணிக்கை மற்றும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை என்பன சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் செயலாளரினால் தீர்மானிக்கப்படும்.

(இ) நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் அனைவரும் பயிற்சிக்கு இணைக்கப்படுவதாக இந்த வர்த்தமானி அறிவித்தலில் எந்த இடத்திலும் அல்லது பந்தியிலும் குறிப்பிப்படவில்லை என்பதை கவனத்திற் கொள்ளல் வேண்டும்.

(ஈ) நேர்முகப் பரீட்சையின் பின்னர் தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் தொடர்பான விபரங்கள் http://www.health.gov.lk எனும் அமைச்சின் இணையத்தளத்தில் வெளியிடப்படுவதுடன், எவருக்கும் தனிப்பட்ட முறையில் அறிவிக்கப்படமாட்டாது. எவ்வாறாயினும், அவ்வப்போது எழும் குறிப்பிட்ட தகவல்களைப் பற்றி தெரிவிக்க நேரிட்டால், நீங்கள் சமர்ப்பித்த விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தொலைபேசி இலக்கம் மற்றும் /அல்லது மின்னஞ்சல் முகவரியின் ஊடாக அறிவிக்கப்படும். எனவே, விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்கப்பட்ட தொலைபேசி இலக்கம் மற்றும் மின்னஞ்சல் முகவரியை மாற்றாமல், செயலில் வைத்திருப்பது உங்களின் பொறுப்பாகும். மேலும் மாற்றங்கள் அல்லது செயலற்று இருப்பதால் உரிய தகவல்கள் சரியான நேரத்தில் தெரிவிக்க முடியாமையினால் ஏற்படக்கூடிய பிரச்சனைகளுக்கு இந்த அமைச்சு பொறுப்பல்ல.

(உ) வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்களுள் உரிய காலத்தில் நடாத்தப்படும் நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளிக்காதவர்கள் அல்லது நேர்முகப் பரீட்சைக்கு உரிய தினத்தில் சமுகமளித்து உரிய தினத்தில் பதிவு செய்யாத விண்ணப்பதாரிகளினால் கல்வி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்ட பிறகு கற்கை நெறியில் இணைவதற்காக சமர்ப்பிக்கப்படும் மேன்முறையீடுகள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

11. **பயிற்சித் திட்டம் :**

11.1. நேர்முகப் பரீட்சையின் பின்னர் தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் இந்த கற்கை நெறியை தொடர்வதற்கு பயிற்சி கல்லூரிகளுக்கு உள்வாங்கப்படுவார்கள். கற்கை நெறிக்கான காலம் மற்றும் கற்க வேண்டிய மொழி என்பன இலக்கம் I அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

11.2 பயிற்சிக் கல்லூரிகளுக்கு இணைக்கப்படும் மாணவர்கள் பயிற்சிக் கல்லூரியில் வலுவில் உள்ள விதிமுறைகளுக்கும் மற்றும் சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சினால் காலத்திற்குக் காலம் விதிக்கப்படும் ஏனைய விதிமுறைகளுக்கும் கட்டுப்படல் வேண்டும்.

11.3 பயிற்சிக்காலத்தில் நடாத்தப்படும் பரீட்சைகளில் சித்திபெறத் தவறும் அல்லது அவர்களின் வேலை மற்றும் நடத்தை என்பன திருத்திகரமாக இல்லாவிட்டால் அல்லது பரீட்சை மற்றும் லீவு நிபந்தனைகளை மீறும் அல்லது பயிற்சிக்கு இணைத்துக் கொள்வதற்காக சமர்ப்பிக்கப்பட்ட கல்வி மற்றும் ஏனைய தகைமைகளில் ஏதாவது உண்மைக்கு புறம்பானவை அல்லது பிழையானவையென தெரியவருமிடத்து பயிற்சியின் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் எவ்வித நட்டஈடுகளும் இன்றி பயிற்சியிலிருந்து நீக்கப்படுவார்கள்.

11.4 பயிற்சிக் காலத்தில் மாணவர்களுக்கு அரசாங்க நிருவாக சுற்றறிக்கை 10/2025 இன் உப அட்டவணை VI இன் நியதிகளுக்கு அமைய மாதாந்த கொடுப்பனவொன்று வழங்கப்படும்.

11.5 பயிற்சிக் கல்லூரிக்கு பயிற்சிக்காக உள்வாங்கப்படும் போது பயிற்சியை சிறப்பாக நிறைவு செய்வதாகவும், அப்பயிற்சியை இடைநடுவில் கைவிடுவதில்லை எனவும், அந்த பயிற்சியை முழுமையாக நிறைவு செய்த பின்னர் உரிய பதவிக்கு நியமனம் வழங்கப்பட்டால் குறைந்தபட்சம் பத்து வருடங்கள் (10) மத்திய / மாகாண அரசாங்க சேவையின் கீழ் உரிய பதவியில் சேவையாற்றுவதாகவும், சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் செயலாளரினால் பரிந்துரைக்கப்படும் அதிகாரியுடன் ஒரு ஒப்பந்தத்திற்கு வர வேண்டும் என்பதுடன், உங்கள் பயிற்சி மற்றும் கட்டாய சேவைக் காலம் தொடர்பாக சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சினால் சமர்ப்பிக்கப்படும் பிணைக்கு இரண்டு பிணையாளிகளுடன் உடன்பட வேண்டும். மேலே 11.3 இன் படி, பயிற்சியின் போது பயிற்சியிலிருந்து விலகினால், பயிற்சியை இடைநடுவில் கைவிட்டால், பயிற்சியிலிருந்து நீக்கப்பட்டால் அல்லது நியமனம் பெற்று பத்து (10) வருட காலம் மேற்படி உரிய பதவியில் சேவையாற்றுவதற்கு தவறினால் அவ்வாறான மாணவர்கள் பயிற்சியிலிருந்து/ பதவியிலிருந்து நீக்கப்பட்டு இந்த காலத்தினுள் அவருக்கு அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட கொடுப்பனவுகள், அரசினால் செலவிடப்பட்ட செலவுகள் மற்றும் பிணைத் தொகை என்பவற்றை அவர் சுகாதார அமைச்சிற்கு செலுத்த வேண்டும். அவ்வாறு செய்யத்தவறினால் அப்பணத்தை அறவிடுவதற்கு ஒப்பந்தத்தின் பிரகாரம் சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்படும்.

11.6 பாடசாலை பற்சிகிச்சையாளர் கற்கை நெறிக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் விண்ணப்ப திகதியில் திருமணமாகாதவராக இருத்தல் வேண்டும் என்பதுடன், பயிற்சிக் காலத்திலும் திருமணம் புரியாமல் இருத்தல் கட்டாயமானதாகும்.

12. **சேவையில் ஈடுபடுத்தப்படும் நியதிகள் :**

12.1 பயிற்சியின் பின்னர் நிரந்தர நியமனம் வழங்குவதற்கு அரசாங்கம் கடமைப்பட்டிருக்காது. எனினும், பயிற்சியை நிறைவு செய்யும் தினமாகும் போது நிலவுகின்ற வெற்றிடங்களுக்கு அமைய தயாரிக்கப்படும் முன்னுரிமை வெற்றிட பட்டியலுக்கு அமைய சிரேஷ்ட உத்தியோகத்தர்களுக்கு இடமாற்றங்கள் வழங்கிய பின்னர் எஞ்சிய வெற்றிடங்களுக்கு பயிற்சியை சிறப்பாக நிறைவு செய்து இறுதிப்பரீட்சையில் சித்தியடையும் பயிலுனர்களின் பயிற்சி நெறியின் இறுதிப்பரீட்சை திறமையை கருத்திற்கொண்டு உரிய பதவியின் III ஆம் தரத்தின் பதவிக்கு நியமிப்பது குறித்து பரிசீலிக்கப்படும். அவ்வாறு தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் நிலவுகின்ற வெற்றிடங்களுக்கு அமைய இலங்கையில் எப்பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கு கட்டுப்படல் வேண்டும்.

12.2 நியமனம் பெற்றவர்களுக்கு அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 10/2025 இன் விதிமுறைகளுக்கு அமைய சம்பளம் வழங்கப்படும்.

12.3 விண்ணப்பத்தை நிரப்பும் போது கல்வி மற்றும் ஏனைய தகைமைகளை சரியாக உள்ளிட வேண்டும். பயிற்சிக்காக இணைத்துக் கொள்ளும் போது அல்லது நியமனம் பெற்ற பின்னர் மேற்படி சான்றிதழ்கள் பொய்யானவை என கண்டறியப்பட்டால், சட்டரீதியாக நடவடிக்கை எடுப்பதற்காக குற்றப்புலனாய்வு திணைக்களத்திற்கு சமர்ப்பிப்பதற்கும், வழங்கப்பட்ட நியமனம் இரத்து செய்யப்பட்டு பயிற்சியிலிருந்து/ பதவியிலிருந்து நீக்கப்படுவதோடு அது தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதுடன், மீண்டும் அரசாங்க சேவையில் இணைய முடியாதவாறு கறுப்பு பட்டியலில் அவருடைய பெயர் உள்வாங்கப்படும். மேலும், பயிற்சிக் காலத்தில் அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட கொடுப்பனவுகள், அரசினால் செலவிட்ட செலவினங்கள் மற்றும் ஒப்பந்த பணம் அவரிடமிருந்து அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

12.4 தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் பயிற்சியை தொடர்வதற்கு மற்றும் நாட்டின் எப்பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கு போதியளவு உடல் மற்றும் உள ஆரோக்கியம் கொண்டவராக இருப்பதை உறுதிப்படுத்தும் பொருட்டு பயிற்சியின் முதல் மாதத்திற்குள் மருத்துவ பரிசோதனை மேற்கொள்ளப்படல் வேண்டும் என்பதுடன், மருத்துவ பரிசோதனையில் தகுதியற்றவர் என காணப்படும் விண்ணப்பதாரிகள் பயிற்சியை தொடர தகுதியற்றவராக கருதப்படுவார்கள்.

12.5 மேற்படி இணைக்கப்படும் சகல உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் சட்ட திட்டங்களுக்கும், அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் அரசாங்க சேவைகள் தொடர்பாக விதிக்கப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் கட்டளைகளுக்கும், சேவைப் பிரமாணக்குறிப்பின் விதிமுறைகளுக்கும், அரசாங்க நிதி ஒழுங்கு விதிகளுக்கும், அரசாங்க சுற்றறிக்கைகள் மற்றும் அறிவுறுத்தல்களுக்கும் மற்றும் அவை தொடர்பாக காலத்திற்குக்காலம் விதிக்கப்படும் கட்டளைகள் மற்றும் திருத்தங்களுக்கும் கட்டுப்படல் வேண்டும்.

12.6 பயிற்சிக்கு இணைக்கப்படும் விண்ணப்பதாரிகளுக்கு பயிற்சி கல்லூரிகளில் தங்குமிட வசதிகள் வழங்குவதற்கு இந்த அமைச்சு கட்டுப்பட்டில்லை. அவ்வாறு வழங்கப்பட்டால் அதற்காக மதிப்பீடு செய்யப்பட்ட தங்குமிட அறைக்கான வாடகை, நீர் மற்றும் மின்சார கட்டணம் அறவிடப்படும்.

12.7 இப்பயிற்சிக் காலத்தினுள் தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடுதல் அல்லது தனியார் சேவையில் ஈடுபடுவதற்கான எவ்வித உரிமைகளும் இல்லை.

12.8 பயிற்சிக்கான ஆட்சேர்ப்பு தொடர்பாக இந்த வர்த்தமானி அறிவித்தல் மூலம் உள்வாங்கப்பட்ட அல்லது உள்வாங்கப்படாத ஏதேனுமோர் விடயம் தொடர்பாக சிக்கல்கள் தோன்றினால், அது தொடர்பாக சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் செயலாளரினால் எடுக்கப்படும் தீர்மானமே இறுதித்தீர்மானமாகும். இந்த வர்த்தமானி அறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் முரண்பாடுகள் ஏற்படுமிடத்து, சிங்கள மொழியே வலுவில் இருக்கும்.

டாக்டர் அனில் ஜாசிங்க,
செயலாளர்,
சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சு.

"சுவசிறிபாய",
385, சங்கைக்குரிய பத்தேகம விமலவங்ச தேரோ மாவத்தை,
கொழும்பு – 10,
2026.07.30.

08-59

## திருத்தம்

### அரசாங்க தகவல் திணைக்களம்

### இணையத்தள எழுத்தாளர் MN 2-2025 (முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பம் அல்லாத - பல்நோக்கு வகுதி 1 சேவை வகை) ஆட்சேர்ப்புக்கான விண்ணப்பங்கள் கோருதல் திருத்தம் செய்தல்

2026.03.20 ஆந் திகதிய 2481 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட அரசாங்க தகவல் திணைக்களத்தின் இணையத்தள எழுத்தாளர் பதவிக்கான ஆட்சேர்ப்பு அறிவித்தலின் இலக்கம் 4 இல் குறிப்பிடப்பட்ட தொழில் தகைமை கீழ்வருமாறு மீள திருத்தம் செய்யப்படுகின்றது.

**தொழில் தகைமை :**

மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திலிருந்து தகவல் தொழில்நுட்பத்தில் டிப்ளோமா பெற்றிருத்தல் அல்லது தகவல் தொழில்நுட்பத் துறையில் அதற்கு கூடிய தகைமை பெற்றிருத்தல்.

அல்லது

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தினால் பெற்றுக் கொள்ளப்பட்ட வெகுசன ஊடகம் தொடர்பிலான டிப்ளோமாவை பெற்றிருத்தல் அல்லது வெகுசன ஊடக துறையில் அதற்கு கூடிய தகைமையை பெற்றிருத்தல்.

02. உரிய விண்ணப்பப்படிவத்தினை அரசாங்க தகவல் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் www.dgi.gov.lk பதிவிறக்கம் செய்ய முடியும். அதில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி படிவத்திற்கேற்ப தயரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்களை உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டினை உரிய இடத்தில் ஒட்டி, கல்வி மற்றும் தொழில் தகைமை தொடர்பான பிரதிகளுடன் 2026, ஓகத்து மாதம் 24 ஆந் திகதியோ அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அரசாங்க தகவல் பணிப்பாளர் நாயகம், அரசாங்க தகவல் திணைக்களம், 163, கிருலப்பனை அவனியூ, கொழும்பு 05 எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பிக்கும் பதவியை தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிட வேண்டும்.

03. 2026.03.20 ஆந் திகதிய 2481 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தொழில் தகைமையுடன் விண்ணப்பப்படிவங்களை அனுப்பிய விண்ணப்பதாரிகள் மீள விண்ணப்பித்தல் அவசியமற்றது.

எச்.எஸ்.கே.ஜே. பண்டார,
அரசாங்க தகவல் பணிப்பாளர் நாயகம்,
அரசாங்க தகவல் திணைக்களம்.

அரசாங்க தகவல் திணைக்களம்,
163, கிருலப்பன மாவத்தை,
கொழும்பு 05,
2026, யூலை 28.

08-04

## திருத்தம்

### பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

### இலங்கை அரசாங்க நூலகர் சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை

2025, நவெம்பர் மாதம் 07 ஆந் திகதிய 2462 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட "இலங்கை அரசாங்க நூலகர் சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2025" என்ற பரீட்சை அறிவித்தலில், 7.0 தகைமைகள் பந்தியில் (இ) பகுதி பின்வருமாறு திருத்தியமைக்கப்படுகின்றது.

7.0 **தகைமைகள் :**

(இ) 2025.12.08 ஆந் திகதியில் 18 வயதுக்கு குறையாமலும் 35 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

(அதற்கமைய 2007.12.08 ஆந் திகதிக்கு அல்லது அதறகு முன்னர் மற்றும் 1990.12.08 ஆந் திகதிக்கு அல்லது அதன் பின்னர் பிறந்த திகதி காணப்படுபவர்களுக்க மாத்திரம் இதற்காக விண்ணப்பிப்பதற்கு தகைமை காணப்படுகின்றது)

02. மேற்படி திருத்தம் இப்பரீட்சை சந்தர்ப்பத்திற்கு மாத்திரம் உரியது என்பதனை கவனத்திற் கொள்ள வேண்டும். அவ்வாறே விண்ணப்பதாரிகள் பதவிக்குரித்தான அனைத்து தகைமைகளையும் 2025.12.08 அந் திகதிக்கு முழுமைப்படுத்தியிருத்தல் வேண்டும்.

03. அவ்வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய ஏற்பாடுகள் அவ்வாறே வலுவிலிருக்கும் என்பதோடு இத்திருத்தங்கள் காரணமாக விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி 2026.08.28 வரை நீடிப்புச் செய்யப்பட்டுள்ளது. ஏற்கனவே விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரிகள் இத்திருத்தம் காரணமாக மீண்டும் விண்ணப்பிக்கத் தேவையில்லை என அறியத்தரப்படுகின்றது.

என். யூ. நிஷான் மெண்டிஸ்,
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்,
பொது நிர்வாக, மாகாண சபைகள்
மற்றும் உள்ளூராட்சி அமைச்சு.

பொது நிர்வாக, மாகாண சபைகள்
மற்றும் உள்ளூராட்சி அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07,
2026, யூலை 22.

08-19

## கமத்தொழில் அமைச்சு

## விவசாயத் திணைக்களம்

## விவசாயத் திணைக்களத்தின் இலங்கை தொழிநுட்பவியல் சேவையின் விவசாயப் போதனாசிரியர் / ஆராய்ச்சி உதவியாளர் /மண் ஆய்வாளர் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2026

விவசாயத் திணைக்களத்தின் இலங்கை தொழிநுட்பவியல் சேவையின் விவசாயப் போதனாசிரியர் / ஆராய்ச்சி உதவியாளர்/ மண் ஆய்வாளர் பதவிகளின் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காக நடாத்தப்படும் திறந்த போட்டிப் பரீட்சைக்குப் பின்வரும் தகைமைகளைக் கொண்ட இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2026.09.04 ஆகும் என்பதுடன், குறித்த தினத்தில் விண்ணப்பதாரிகளின் வயது 18 வருடங்களுக்குக் குறையாமலும், 35 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

அதற்கு அமைய 2008.09.04 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் மற்றும் 1991.09.04 ஆம் திகதியன்று அல்லது அதற்குப் பின்னர் பிறந்த திகதியினைக் கொண்டுள்ளவர்கள் மாத்திரம் இதற்காக விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்களாவர்.

(மேலும் மேற்படி காலப்பகுதியினை கீழுள்ள உதாரணத்திற்கு அமைய கணிப்பிடுதல் வேண்டும்.

உதா : 2025.03.31 ஆம் திகதியன்று வயது 18 வருடங்களுக்குக் குறையாமலும் மற்றும் 35 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும் எனின், விண்ணப்பிக்க தகுதியுடையவர்கள் 2007.03.31 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் மற்றும் 1990.03.31 ஆம் திகதி அல்லது அதற்குப் பின்னர் பிறந்த தினத்தைக் கொண்டுள்ளவர்கள் மாத்திரமே ஆகும்.)

| *வகை* | *பதவிப் பெயர்* | *வெற்றிடங்களின் எண்ணிக்கை* |
|---|---|---|
| வகை I | விவசாயப் போதனாசிரியர் | 257 |
| | ஆராய்ச்சி உதவியாளர் | 70 |
| வகை II | மண் ஆய்வாளர் | 02 |

- ஏற்கனவே அரசாங்க / மாகாண அரசாங்க சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்கள் விண்ணப்பப்படிவத்தின் பிரதி ஒன்றினை தமது பிரத்தியேக கோப்பிற்குள் உள்ளடக்குவதற்காக தாபனத் தலைவர்களிடம் ஒப்படைத்தல் வேண்டும் என்பதுடன், நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படும் சந்தர்ப்பத்தில் தாபனத் தலைவரினால் உறுதிப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் பிரதி ஒன்றினையும் மற்றும் உறுதிப்படுத்தும் கடிதம் ஒன்றினையும் முன்வைத்தல் வேண்டும்.

- விண்ணப்பப்படிவம் இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் www.doenets.lk வலைத் தளத்தில் “Our Services” இன் கீழ் உள்ள "Online Applications – Recruitment Exams / E.B Exams “ ஊடாக பிரசுரிக்கப்பட்டு உள்ளதுடன் நிகழ்நிலை (Online ) முறையில் மாத்திரமே விண்ணப்பப்படிவங்களை முன்வைக்க முடியும். நிகழ்நிலை விண்ணப்பப்படிவங்களைப் பொறுப்பேற்றல் 2026.08.10 ஆம் திகதி மு.ப. 9.00 மணிக்கு திறந்து வைக்கப்படுவதுடன் 2026.09.04 ஆம் திகதி பி.ப. 9.00 மணிக்கு முடிவடையும்.

- விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும் நடவடிக்கையினை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி வரை தாமதிக்கச் செய்வதன் மூலம் ஏற்படும் எந்தவொரு பாதகமான நிலைமை தொடர்பிலும் விண்ணப்பதாரியே பொறுப்பேற்றல் வேண்டும்.

02.1 **திறந்த அடிப்படையிலான ஆட்சேர்ப்பு**

02.01.1

| *பதவி* | *02.01.2 கல்வித் தகைமைகள்*<br>*கல்விப் பொதுத் தராதர (சாதாரண தரம்)* | *02.01.3 தொழிற் தகைமைகள்* | *அனுபவங்கள்* |
|---|---|---|---|
| 1. விவசாயப் போதனாசிரியர்<br>2. ஆராய்ச்சி உதவியாளர்<br>3. மண் ஆய்வாளர் | க.பொ.த. (சா./தரம்) பரீட்சையில் சிங்களம்/ தமிழ்/ ஆங்கில மொழி, கணிதம் மற்றும் விஞ்ஞானம் ஆகிய பாடங்களுடன் மேலும் ஒரு பாடத்தில் திறமைச் சித்தியுடன் ஒரே தடவையில் (06) பாடங்களில் சித்தி அடைந்திருத்தல்.<br><br>கல்விப் பொதுத் தராதர (உயர் தர) பரீட்சையில் விவசாய விஞ்ஞானம், உயிரியல், இரசாயனவியல், தாவர வியல், பௌதிகவியல், விலங் கியல், உயிர்முறைமைகள் தொழில் நுட்பவியல், தொழில்நுட்பவியலுக் கான விஞ்ஞானம் ஆகிய பாடங் களுள் இரண்டு பாடங்கள் உள்ளடங் கலாக, விஞ்ஞான அல்லது தொழில் நுட்பவியல் பாடத்துறையில் மூன்று (03) பாடங்களில் ஒரே தடவையில் சித்தி அடைந்திருத்தல். (பொது ஆங்கிலம் மற்றும் பொது உளச்சார்புப் பரீட்சை தவிர) | மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக் குழு வினால் அங்கீகரிக்கப்பட்ட நிறு வனம் ஒன்றினால் வழங்கப்படும் இரு வருட விவசாய டிப்ளோமா<br><br>அல்லது<br><br>தொழிற்துறைக்கு உரிய வகையில் தேசிய தொழில் தகைமை (NVQ) மட்டம் 6 தகைமையினைப் பூர்த்திசெய்திருத்தல்.<br><br>அல்லது<br><br>உயர் கல்வி அமைச்சு மற்றும் மேற்கூறிய தொழில்நுட்பச் சான்றிதழ்களை வழங்கும் நிறுவனங்கள் என்பவற்றிடம் கேட்டு கருத்துக்களைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் மேற்கூறிய தொழில்நுட்பத் தகைமைகளுக்கு சகல விதத்திலும் சமமானதென மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவால் ஏற்றுக்கொள்ளப்படும் தொழில் நுட்பத் தகைமைகளைப் பெற்றி ருத்தல். | ஏற்புடையதல்ல |

02.2.4 **ஏனைய தகைமைகள் :**

- இலங்கை பிரசையாக இருத்தல்
- மிகச் சிறந்த நடத்தையுடையவராக இருத்தல்
- நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவை புரிவதற்கும் பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்கும் பொருத்தமான சிறந்த உடல் மற்றும் உள ஆரோக்கியத்தை உடையவராக இருத்தல்
- யாதேனும் ஒரு மதப்பிரிவில் துறவறம் பூண்டுள்ள எவரும் இதற்கு விண்ணப்பிக்க முடியாது.

03. சேவையில் ஆட்சேர்த்துக் கொள்வதற்கான எழுத்து மூலப் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தேவையான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளதாக ஏற்றுக்கொள்ளப்படுவது விண்ணப்பதாரி, விண்ணப்பங்கள் கோரும் அறிவித்தலில் குறிப்பிடப்படும் திகதியன்று சகல தகைமைகளையும் எல்லா வகையிலும் பூர்த்தி செய்திருந்தால் மாத்திரமே ஆகும்.

04. ஏதேனும் வெற்றிட எண்ணிக்கையினையோ அல்லது சகல வெற்றிடங்களையுமோ பூர்த்தி செய்வதற்கு அல்லது பூர்த்தி செய்யாமல் இருப்பதற்கு நியமன அதிகாரிக்கு அதிகாரம் உள்ளது.

சம்பளங்கள் மற்றும் வினைத்திறன் காண் தடைதாண்டல் பரீட்சை

சம்பளக் குறியீட்டு இலக்கம் - MN 03/2025

சம்பள அளவுத்திட்டம் - ரூ. .52250 - 800x10 - 1190x11 - 1320x10 - 1350x10 – 100,040.00

தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டு 3 ஆண்டுகளுக்குள் முதலாவது வினைத்திறன் காண் தடைப்பரீட்சையிலும், தரம் II இற்குத் தரம் உயர்த்தப்பட்டு 3 ஆண்டுகளுக்குள் இரண்டாவது வினைத்திறன் காண் தடைதாண்டல் பரீட்சையிலும் தரம் I இற்குத் தரம் உயர்த்தப்பட்டு 05 ஆண்டுகள் நிறைவடைவதற்கு முன்னர் முகாமை தொடர்பான மூன்று மாதகாலப் பயிற்சி நெறியிலும் சித்தியடைதல் வேண்டும். நியமனம் பெறுவோர் அரசாங்க நிருவாகச் சுற்றுநிரூபம் 18/2020 மற்றும் அதற்கு இடைநேர் விளைவான சுற்றுநிரூபங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளுக்கு இணங்க குறித்த காலப்பகுதிக்குள் உரிய மட்டத்திலான அரச கரும மொழித் தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். இந்த அரச கரும மொழித் தேர்ச்சியைப் பெற்றுக் கொள்ளாமை மற்றும் குறித்த காலப்பகுதிக்குள் வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சைகளில் சித்தியடையாமை என்பன எதிர்வரும் சம்பள ஏற்றத்தை இடைநிறுத்துவதற்கு காரணமாக அமையும்.

05. **சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள்**

I. நீங்கள் விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு / தபுதாரர் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உறுப்புரிமை பெற்றிருப்பின் மீண்டும் அதற்காக உறுப்புரிமை பெறத்தேவை இல்லை. அரசினால் அவ்வப்போது குறித்துரைக்கப்படும் விதத்தில் நீங்கள் அதற்கான பங்களிப்புத் தொகையினைச் செலுத்துதல் வேண்டும்.

II. குறித்துரைக்கப்படும் நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் பணி புரிவதற்கு கட்டுப்பட்டு இருத்தல் வேண்டும்.

III. 1930/12 ஆம் இலக்க மற்றும் 2015.09.01 ஆம் திகதிய இலங்கைச் சனநாயக சோஷலிசக் குடியரசின் அதி விஷேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டு உள்ள ஏற்கனவே நடைமுறையில் உள்ள இலங்கை தொழிநுட்ப சேவைப் பிரமாணக் குறிப்பு மற்றும் ஆட்சேர்ப்பு நடைமுறை என்பவற்றின் திருத்தங்களுக்கும் நீங்கள் கட்டுப்படுதல் வேண்டும்.

06. **விண்ணப்பிக்க வேண்டிய முறை :**

(அ) நிகழ்நிலை (Online) மூலமான விண்ணப்பப் படிவம் ஆங்கில மொழியில் மாத்திரம் பூர்த்தி செய்யப்படுதல் வேண்டும். விண்ணப்பதாரரால் நிகழ்நிலை மூலம் சமர்ப்பிக்கப்பட்ட மென் பிரதி செல்லுபடியாகும் விண்ணப்பமாகத் திணைக்களத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டதா / இல்லையா என்பது, நிகழ்நிலை அமைப்புக்குள் பிரவேசிப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட கையடக்கத் தொலைபேசி இலக்கத்திற்கு குறுஞ்செய்தி (SMS) மூலமாகவோ அல்லது மின்னஞ்சல் (E-Mail) முகவரிக்கோ அறிவிக்கப்படும். நிகழ்நிலை விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்வதற்கு முன்னர், பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல் பத்திரத்தை (Instructions) பதிவிறக்கம் செய்துகொள்ளவும். விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்யும் போது அந்த அறிவுறுத்தல்களைக் கண்டிப்பாகப் பின்பற்றவும். விண்ணப்பப் படிவத்தின் அச்சுப் பிரதியைப் பெற்றுக் கொண்ட பின்னர் அதில் செய்யப்படும் எந்தவொரு திருத்தமும் செல்லுபடியாகும் திருத்தமாகக் கருதப்படமாட்டாது. முழுமையாகப் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் மற்றும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் அறிவித்தல் ஏதுமின்றி நிராகரிக்கப்படும்.

(ஆ) இந்தப் பதவிகள் கீழே குறிப்பிடப்பட்டு உள்ளவாறு வகைப்படுத்தப்படும்.

வகை I – விவசாயப் போதனாசிரியர் / ஆராய்ச்சி உதவியாளர்

வகை II – மண் ஆய்வாளர்

பல பதவிகளுக்கு விண்ணப்பிக்கும் போது, முன்னுரிமை ஒழுங்குமுறை விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

(இ) பரீட்சைக் கட்டணம் ரூபா 1200.00 ஆகும். பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தும் போது நிகழ்நிலை அமைப்பினூடாக வழங்கப்படும் பின்வரும் கட்டணம் செலுத்தும் முறைகளின் கீழ் மாத்திரமே கொடுப்பனவுகள் செய்யப்பட வேண்டும்.

I. ஏதேனும் ஒரு வங்கியின் கடன் அட்டை மூலம் (Any Bank Credit Card)

II. இணையப் பணப்பரிமாற்ற வசதி கொண்ட ஏதேனும் ஒரு வங்கியின் வரவு அட்டை ஒன்றின் மூலம் (Any Bank Debit Card with the Facility of Internet Transactions)

III. இலங்கை வங்கியின் நிகழ்நிலை வங்கி முறையினூடாக ("Flex" விண்ணப்பத்தின் மூலம் Online Banking Method/ "Flex"App of Bank of Ceylon )

IV. இலங்கை வங்கியின் ஏதேனும் ஒரு கிளையினூடாக ( Any Branch of the Bank of Ceylon )

குறிப்பு:

(அ) மேற்கூறிய முறைகளின் மூலம் பணம் செலுத்தும் விதம் தொடர்பான அறிவுறுத்தல்கள் இணையத்தளத்தில் பரீட்சை தொடர்பான தொழில்நுட்ப அறிவுறுத்தல்களின் கீழ் பதிவிடப்பட்டுள்ளன.

(ஆ) கட்டணம் கிடைக்கப்பெற்றமை குறித்து ஒரு குறுஞ்செய்தி (SMS) மூலம் அல்லது மின்னஞ்சல் மூலம் அறிவிக்கப்படும். பரீட்சைக் கட்டணத்திற்கான முழுத் தொகையும் செலுத்தப்பட வேண்டும் என்பதோடு, பரீட்சைக் கட்டணத்தை குறைவாகவோ அல்லது அதிகமாகவோ செலுத்திய விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மேற்கூறப்பட்ட கட்டணம் செலுத்தும் முறைகளின் போது ஏற்படும் தவறுகள் தொடர்பில் இலங்கை பரீட்சைத் திணைக்களம் பொறுப்பேற்கமாட்டாது.

(இ) பரீட்சைக்காகச் செலுத்தப்பட்ட பணம் எக்காரணம் கொண்டும் மீள வழங்கப்படவோ அல்லது வேறு பரீட்சைகளுக்காக மாற்றப்படவோமாட்டாது.

07. **பரீட்சை நடைமுறை :**

(அ) அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமை பெற்றவர்கள் மாத்திரம் விண்ணபித்திருப்பார்கள் என்ற முன்கணிப்பின் அடிப்படையில், விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி அல்லது அதற்கு முன்னதாக உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி, அதற்கான பற்றுச்சீட்டுடன் சரியாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரர்களுக்கு பரீட்சை அனுமதி அட்டைகள் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நிகழ்நிலை மூலம் மாத்திரம் வழங்கப்படும். அனுமதி அட்டைகள் வெளியிடப்பட்டவுடன் உடனடியாக இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தினால் அது குறித்து இணையத்தள அறிவித்தல் ஒன்றின் மூலம் / குறுஞ்செய்தி மூலம் விண்ணப்பதாரர்களுக்கு அறிவிக்கப்படும். தமது அனுமதி அட்டை கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரர் எவரேனும் இருப்பின், இணையத்தள அறிவித்தலில் குறிப்பிட்டுள்ளவாறு இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தின் தாபனப் பரீட்சை ஒழுங்கமைப்புக் கிளைக்கு அறிவித்தல் வேண்டும். அவ்வாறு வினவும் போது விண்ணப்பதாரி தான் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப்பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரி என்பவற்றை சரியான முறையில் குறிப்பிட்டு கோரிக்கைக் கடிதம் ஒன்றினை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைத்து வினவுதல் மிகவும் பயனுள்ளதாக அமையும். அவ்வாறு வினவும் போது பரீட்சைகள் திணைக்களத்தினால் வினவப்படும் ஏதேனும் தகவல் ஒன்றினை உறுதிப்படுத்துவதற்காக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தின் நிழற் பிரதி மற்றும் பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டதன் பின்னர் கிடைக்கப்பெற்ற பற்றுச்சீட்டின் பிரதி என்பவற்றினைத் தம்வசம் வைத்துக்கொள்ளல் பயனுள்ளதாக அமையும். அனுமதிப்பத்திரத்தைப் பரீட்சித்துப் பார்த்து திருத்தங்கள் இருப்பின் நேரகாலத்துடன் பரீட்சைகள் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு விண்ணப்பத்திற்கு அமைய உரிய திருத்தங்களை மேற்கொள்ளல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் / நேர்முகப் பரீட்சையின் போது திருத்தங்களுக்காக முன்வைக்கப்படும் கோரிக்கைகள் தொடர்பில் கவனம் செலுத்தப்படமாட்டாது.

(ஆ) விண்ணபதாரிக்கு பரீட்சை அனுமதிப்பத்திரம் ஒன்றினை வழங்குதல், அவர் பரீட்சையில் தோற்றுவதற்கு அல்லது பதவிக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளார் என்பதனை ஏற்றுக்கொள்ளல் ஒன்றாக அமையமாட்டாது.

(இ) பரீட்சைக்கான அனுமதி அட்டையில் விண்ணப்பதாரரின் கையொப்பம் ஒரு சட்டத்தரணி, பகிரங்க நொத்தாரிசு, முப்படைகளின் அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர், அரச அல்லது அரச சேவையின் நிரந்தர பதவிநிலை உத்தியோகத்தர் ஒருவரினால் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். அனுமதி அட்டையைச் சமர்ப்பிக்காத விண்ணப்பதாரர் எவரும் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள்.

(ஈ) பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தில் தாம் பரீட்சைக்குத் தோற்றும் சகல பாடங்கள் தொடர்பாகவும் பரீட்சை நிலையப் பொறுப்பதிகாரி திருப்தியுரும் வகையில் தமது சுய ஆளடையாளத்தினை உறுதிப்படுத்தல் வேண்டும். அதற்காக கீழ் வரும் ஆவணங்களில் யாதேனுமொன்று மாத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும்.

I. தேசிய அடையாள அட்டை

II. செல்லுபடியாகும் கடவுச் சீட்டு

III. செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதி பத்திரம்

அவ்வாறே பரீட்சார்த்திகள் ஆளடையாளத்தினை மற்றும் இலத்திரனியல் தொடர்பாடல் சாதனங்களை அணியவில்லை என்பது தொடர்பில் உறுதிப்படுத்திக் கொள்ளக்கூடிய வகையில் முகம் மற்றும் இரண்டு காதுகள் என்பவற்றினை மறைக்காது பரீட்சை மண்டபத்திற்குள் பிரவேசித்தல் வேண்டும். அவ்வாறு தமது ஆளடையாளத்தினை உறுதிப்படுத்துவதனை நிராகரிக்கும் விண்ணப்பதாரிகள் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்படமாட்டார்கள். மேலும் பரீட்சை மண்டபத்திற்குள் நுழைந்த நேரம் தொடக்கம் பரீட்சை நிறைவுபெற்று வெளியேறும் வரை முகம் மற்றும் இரண்டு காதுகளை மறைக்காது இருத்தல் வேண்டும்.

(உ) இந்தப் பரீட்சைக்குத் தோற்றுவதற்காக பரீட்சார்த்திகள் ஏற்கவேண்டி ஏற்படும் பிரயாணச் செலவுகளோ அல்லது வேறு எந்தவொரு கொடுப்பனவுகளோ வழங்கப்படமாட்டாது.

(ஊ) பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தில் தாம் பரீட்சைக்குத் தோற்றும் சகல பாடங்கள் தொடர்பாகவும் பரீட்சை நிலையப் பொறுப்பதிகாரி திருப்தியுறும் வகையில் தமது சுய ஆளடையாளத்தினை நிரூபித்தல் வேண்டும். அதற்காக கீழ் வரும் ஆவணங்களில் யாதேனுமொன்று ஏற்றுக் கொள்ளப்படும்.

(எ) பாடப் பரப்பு :

1. நுண்ணறிவுப் பரீட்சை (நேரம் 1 மணித்தியாலம், மொத்தப் புள்ளிகள் 100)

பரீட்சார்த்தியின் தர்க்க ரீதியாக சிந்திக்கும் ஆற்றல், அவரது சிந்திக்கும் பகுப்பாய்வுத் திறன், தீர்மானமெடுக்கும் ஆற்றல் என்பவற்றை மதிப்பிடுவதற்கான பல்தேர்வு மற்றும் சுருக்க விடைகளை வழங்கும் மாதிரியில் அமைந்த 50 வினாக்களைக் கொண்ட வினாத்தாள் ஒன்றாகும். சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

2. விடயம் தொடர்பான அறிவு (நேரம் 2 மணித்தியாலம், மொத்தப் புள்ளிகள் 100)

பரீட்சார்த்தியின் விடய அறிவை மதிப்பிடுவதற்கான கட்டமைக்கப்பட்ட வினாக்கள் மற்றும் பல்தேர்வு வினாக்கள் என்பவற்றினை உள்ளடக்கிய வினாத்தாள் ஒன்றாகும்.

| *தொடர் இலக்கம்* | *பதவி* | *விடயம் தொடர்பான அறிவு பற்றிய வினாத்தாளின் பாடப்பரப்பு* |
|---|---|---|
| 1 | விவசாயப் போதனாசிரியர்<br><br>ஆராய்ச்சி உதவியாளர் | இலங்கை பொருளாதார அபிவிருத்திக்கான விவசாயத்தின் பங்களிப்பு/ இலங்கைக் காலநிலை வலயங்கள் பற்றிய அறிவு / மண் மற்றும் தாவரப் போசணை/ நெல் உற்பத்தி / ஏனைய களப் பயிர்கள் உற்பத்தி/ காய்கறி உற்பத்தி/ பழ உற்பத்தி / பயிர்ப் பாதுகாப்பு /நீர் வடிந்தோடல் மற்றும் அதன் முக்கியத்துவம் / மண் பாதுகாப்பின் முக்கியத்துவம் மற்றும் பல்வேறு மண் பாதுகாப்பு முறைகள்/ நீர்ப்பாசனம் மற்றும் நீர் முகாமைத்துவம்/ பண்ணை இயந்திரமயமாக்கல்/ தேனீ வளர்ப்பு / மலர் வளர்ப்பு மற்றும் நில வடிவமைப்பு/ பாதுகாக்கப்பட்ட பயிர்ச் செய்கைகள் /கால்நடை வளர்ப்பு/ விவசாயத் தொழிநுட்ப விரிவாக்கல்/ இழைய வளர்ப்பு/ தாவரத் தடுப்புக்காப்பு/ தாவரப் பாதுகாப்பும் அதன் முக்கியத்துவமும் /உயிரியல் தொழில்நுட்பம் / விவசாய அபிவிருத்தி |
| 2 | மண் ஆய்வாளர் | i. இலங்கையின் மண் வகைகள் மற்றும் அவற்றின் பரவல்<br>ii. மண் உருவாக்கத்தில் பாதிப்புச் செலுத்தும் காரணிகள், மண் தோற்ற வடிவங்களை அடையாளம் காணல்<br>iii. வரைபடங்களை வாசித்தல்<br>iv. இலங்கையின் தற்கால காணிப் பயன்பாட்டுக் கோலம்<br>v. காடழிப்பின் தாக்கம் மற்றும் சுற்றாடல் பிரச்சினைகள்<br>vi. உரப் பாவனை<br>vii. தாவரங்களின் பல்வகைமை<br>viii. மண் நீர் பாதுகாப்பு முறைகள் |

(ஏ) **மொழி மூலம் :**

இப்பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழி மூலங்களில் நடாத்தப்படும். பரீட்சார்த்திகள் தாம் தோற்றும் சகல வினாத்தாள்களுக்கும் ஒரே மொழி மூலத்தில் விடையளிக்க வேண்டும். விண்ணப்பிக்கும் மொழி மூலத்தை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

(ஒ) பரீட்சையினை நடாத்துதல் தொடர்பாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டவிதிகளுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்படுவர். மேற்படி சட்டவிதிகளை மீறினால் அவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு கட்டுப்படுவதற்கு நேரிடும். பரீட்சைப் பெறுபேறுகள் தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அவர்களின் தீர்மானம் இறுதித் தீர்மானமாக அமையும்.

(ஓ) **பரீட்சை நடைபெறும் இடமும் திகதியும் :**

இப்பரீட்சை 2026 நவெம்பர் மாதம் கொழும்பிலும் கண்டியிலும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும். சில வேளை போதியளவான பரீட்சார்த்திகள் இல்லாதவிடத்து கொழும்பில் மாத்திரம் பரீட்சையை நடாத்துவதற்கு உரிய நடவடிக்கை கள் எடுக்கப்படும். (விண்ணப்பித்த நகரத்தை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.) பரீட்சார்த்திகள் தனக்கு குறித்துரைக்கப்படும் பரீட்சை நிலையத்தில் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும்.

| பரீட்சை நிலையம் | குறியீட்டு இலக்கம் |
|---|---|
| கொழும்பு | 1 |
| கண்டி | 2 |

08. **ஆட்சேர்ப்பு முறை**

I. எழுத்து மூலப் பரீட்சையின் மொத்தப் புள்ளிகளின் திறமை அடிப்படையில் தயாரிக்கப்பட்ட பெறுபேற்று ஆவணம் விவசாயப் பணிப்பாளர் நாயகம் அவர்களிடம் கையளிக்கப்பட்டதன் பின்னர் பரீட்சைக்குத் தோற்றிய சகல விண்ணப்பதாரிகளுக்கும் தனிப்பட்ட முறையில் பெறுபேறுகளை தபாலில் அனுப்பி வைப்பதற்கு அல்லது இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தின் www.results.exams.gov.lk இணையத்தளத்தில் வெளியிடுவதற்கு இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

II. மேற்கூறிய பரீட்சையில் ஒவ்வொரு வினாத்தாளிற்கும் 40% அல்லது அதற்கு அதிகமான புள்ளிகளைப் பெற்றுக் கொண்ட விண்ணப்பதாரிகளின் மொத்தப்புள்ளிகளின் அடிப்படையில் தயாரிக்கப்படும் முன்னுரிமைப் பட்டியலின் அடிப்படையில் ஆட்சேர்ப்பிற்காக கவனம் செலுத்தப்படும்.

III. விவசாயப் பணிப்பாளர் நாயகத்தினால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சை சபை ஒன்றின் மூலம் இப்பரீட்சையின் புள்ளிகளின் திறமை அடிப்படையில் விண்ணப்பதாரிகளின் தகைமைகளைப் பரீட்சித்துப் பார்த்து தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளவர்கள் மாத்திரம் வெற்றிடங்களுக்காகத் தெரிவுசெய்யப்படுவர். (நேர்முகப் பரீட்சையின் போது புள்ளிகள் வழங்கப்படமாட்டாது)

IV. எழுத்து மூலப் பரீட்சையில் சித்தியடைந்த விண்ணப்பதாரிகளின் மொத்தப் புள்ளிகளின் திறமை ஒழுங்குமுறைக்கு அமைய இணைத்துக் கொள்வதற்காக எதிர்பார்க்கப்படும் எண்ணிக்கையினை ஒத்த எண்ணிக்கையானோர் பொதுவான நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

V. பதவிகளுக்கான விண்ணப்பங்களைப் பொறுப்பேற்கும் இறுதித் தினத்தன்று தேவையான தகைமைகள் பூர்த்தி செய்யப்படாமை தொடர்பில், நேர்முகப் பரீட்சையின் போது தெரியவரும் பட்சத்தில் அவரது பரீட்சார்த்தத் தன்மை இரத்துச் செய்யப்படும்.

VI. விண்ணப்பப்பத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதியன்று வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் பூரணப்படுத்தப்படாமலேயே பரீட்சைக்குத் தோற்றி பரீட்சையில் சித்தியடைந்தாலும் நேர்முகப் பரீட்சைக்காகக் கவனத்திற் கொள்ளப்படமாட்டாது என்பதுடன் எவ்வித அறிவித்தலுமின்றி அவரது விண்ணப்பப்படிவம் நிராகரிக்கப்படும்.

VII. போலியான தகவல்கள் மற்றும் பிழையான ஆவணங்களை முன்வைத்து நபரொருவர் நியமனம் பெற்றுள்ளாராயினும் அது பற்றி அறியவரும் சந்தர்ப்பத்தில் உடனடியாக அவரின் நியமனத்தை செல்லுபடியற்றதாக்குவதற்கும் அவருக்கு எதிராக சட்டரீதியாக நடவடிக்கையினை மேற்கொள்வதற்கும் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

09. இவ்வறிவித்தலில் குறிப்பிடப்படாத ஏதேனும் விடயம் ஒன்று இருப்பின் அது தொடர்பாக நியமன அதிகாரியினால் தீர்மானம் மேற்கொள்ளப்படும். அனைத்து விண்ணப்பதாரிகளும் இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள பொதுவான பரீட்சைச் சட்டவிதிகளுக்கேற்ப செயற்படுவதற்கு கட்டுப்பட்டு உள்ளனர்.

10. சிங்களம்,தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் பிரசுரிக்கப்படும் மேற்படி அறிவித்தலில் மொழிகளிலான உரைகளில் ஏதேனும் பொருத்தமின்மையோ அல்லது ஒத்தியங்காத தன்மையோ காணப்படின் அவ்வாறான சந்தர்ப்பம் ஒன்றில் சிங்கள மொழி மூலத்திலான அறிவித்தலிற்கு ஏற்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

விவசாயப் பணிப்பாளர் நாயகம்

விவசாயத் திணைக்களம்,
பேராதெனிய,
2026 ஆம் ஆண்டு.

| |
|---|
| |

(அலுவலக உபயோகத்திற்கு)

மாதிரி விண்ணப்பப்படிவம்

**விவசாயத் திணைக்களம்**

**விவசாயத் திணைக்களத்தின் இலங்கை தொழிநுட்ப சேவையின் விவசாயப் போதனாசிரியர் / ஆராய்ச்சி உதவியாளர் / மண் ஆய்வாளர் பதவிகளின் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான**

**திறந்த போட்டிப் பரீட்சை – 2026**

Department of Agriculture

Application for Open Competitive Examination for Recruitment to Posts of Agriculture Instructor/ Research Assistant/Soil surveyor in the Grade III of the Sri Lanka Technological Service –2026

01. பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம்:

சிங்களம் - 1
தமிழ் - 2
ஆங்கிலம் - 3

(உரிய இலக்கத்தினை கூட்டினுள் எழுதவும்)

02. பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சை நிலையம் :

கொழும்பு - 1 கண்டி - 2

(உரிய இலக்கத்தினை கூட்டினுள் எழுதவும்)

03. விண்ணப்பிக்கும் பதவி

விவசாயப் போதனாசிரியர் - 1
ஆராய்ச்சி உதவியாளர் - 2
மண் ஆய்வாளர் - 3

| *பதவி* | *இலக்கம்* |
|---|---|
| | |
| | |

(உரிய இலக்கத்தினை கூட்டினுள் எழுதவும்)

04. பெயர் :

4.1 முழுப் பெயர் (ஆங்கில கெப்பிற்றல் எழுத்துக்களில்) :......................................................................

(உதா : HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)

4.2 இறுதியில் வரும் பெயர் முதலிலும் ஏனைய பெயர்களின் முதலெழுத்துக்கள் இறுதியிலும் அமையும் வகையில் பெயர் (ஆங்கில கெப்பிற்றல் எழுத்துக்களில்)

(உதா : GUNAWARDHANA, H.M.S.K) ..............................................................

4.3 முழுப் பெயர் : ........................................................................................................................

(சிங்களத்தில் / தமிழில்)

4.4 தேசிய அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

05. நிரந்தர முகவரி

5.1 ஆங்கில கெப்பிற்றல் எழுத்துக்களில் :...........................................................................................

5.2 சிங்களத்தில் / தமிழில் : ...........................................................................................................

5.3 அனுமதிப்பத்திரம் அனுப்பப்பட வேண்டிய முகவரி : ...................................................................

(ஆங்கில கெப்பிற்றல் எழுத்துக்களில்) ...................................................................................

5.4 வதிவிட மாவட்டம் : ..........................................................................................................

5.5 பிரதேச செயலாளர் பிரிவு : ........................................................................................................

06. பெண் / ஆண் பால் தன்மை

ஆண் - 0

பெண் - 1

(உரிய இலக்கத்தினை கூட்டினுள் எழுதவும்)

07. தொலைபேசி இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

08. 8.1 பிறந்த திகதி :

ஆண்டு மாதம் திகதி

8.2 விண்ணப்பத்தினைப் பொறுப்பேற்கும் இறுதித் திகதியன்று வயது (2026.09.04)

வருடங்கள் மாதங்கள் நாட்கள்

8.3 திருமணமானவரா / திருமணமாகாதவரா

திருமணமாகாதவர் - 1

திருமணமானவர் - 2

(உரிய இலக்கத்தினை கூட்டினுள் எழுதவும்)

09. கல்வித் தகைமைகள் (மொழி மூலத்துடன்)

முதலாவது தடவை

(அ) க.பொ.த. (சா/தரம்) பரீட்சை

I. வருடம் மற்றும் மாதம் :.........................

II. பரீட்சை எண் :...........................

III. மொழி மூலம் : ............................

IV. பெறுபேறு : ...........................

| | *பாடங்கள்* | *சித்தி* |
|---|---|---|
| 1 | | |
| 2 | | |
| 3 | | |
| 4 | | |
| 5 | | |
| 6 | | |
| 7 | | |
| 8 | | |
| 9 | | |
| 10 | | |

(ஆ) க.பொ.த. (உ/தரம்) பரீட்சை

I. வருடம் மற்றும் மாதம் :.........................

II. பரீட்சை எண் :...........................

III. மொழி மூலம் : ............................

IV. பெறுபேறு : ...........................

| | *பாடங்கள்* | *சித்தி* |
|---|---|---|
| 1 | | |
| 2 | | |
| 3 | | |
| 4 | | |

10. தொழிற் தகைமைகள் :

| *NVQ 6/ டிப்ளோமா* | *டிப்ளோமா/ NVQ 6 இனை வழங்கிய நிறுவனத்தின் பெயர்* | *சித்தியடைந்த ஆண்டு* | *மொழி மூலம்* | *பரீட்சை எண்* | *டிப்ளோமா / NVQ 6 செல்லுபடியாகும் திகதி* |
|---|---|---|---|---|---|
| | | | | | |

11. விண்ணப்பதாரியின் சான்றுரை :

மேற்படி விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள சகல தகவல்களும் சரியானது எனவும் மற்றும் உண்மையானது எனவும் உறுதிமொழிகின்றேன். இங்கு உள்ளடக்கப்பட்டு உள்ள எந்தவொன்றும் தவறானது என்றோ அல்லது பொய்யானது என்றோ என்னைத் தெரிவு செய்வதற்கு முன்னர் அறிய வருமிடத்து, நான் தகைமையற்றவராகுவதற்குக் கட்டுப்படுவதுடன் நியமனம் பெற்றதன் பின்னர் அது தொடர்பில் அறிய வருமிடத்து எனக்கு எதுவித நஷ்டஈடுகளும் செலுத்தாது சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கும் கட்டுப்படுகின்றேன் என்பதனையும் நான் அறிந்து உள்ளேன். மேலும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சையினை நடாத்துதல் தொடர்பில் விதிக்கப்படும் சட்டவிதிகளுக்கும் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பாக விதிக்கப்படும் சட்ட விதிகளுக்கும் நான் கட்டுப்படுவேன் என்பதனையும் நான் தெரிவித்துக்கொள்கின்றேன். அவ்வாறே நான் விண்ணப்பிக்கும் பதவிக்காக ஒரு விண்ணப்பத்தினை மாத்திரம் சமர்ப்பிக்கின்றேன் என்பதனையும் உறுதிப்படுத்துகின்றேன்.

................................ ............................................
திகதி விண்ணப்பதாரியின் கையொப்பம்

12. விண்ணப்பதாரியின் கையொப்பத்தினை உறுதிப்படுத்தல்.

மேற்படி விண்ணப்பப்படிவத்தினைச் சமர்ப்பிக்கும் .................................................................... என்பவரை நான் தனிப்பட்ட ரீதியில் அறிவேன் என்பதனையும் அவர் என் முன்னிலையில் .................................... ஆம் திகதி அவருடைய கையொப்பத்தினை இட்டார் என்பதனையும் உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தியுள்ளார் என்பதனையும் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி ............................................ ..................................................................................

விண்ணப்பத்தினை உறுதிப்படுத்தும்
உத்தியோகத்தரின் கையொப்பம்.

உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரின் முழுப் பெயர் :
பதவி :
முகவரி :
(பதவி முத்திரையிட்டு உறுதிப்படுத்தவும்.)

குறிப்பு :

ஏற்கனவே அரச சேவையில் பதவி ஒன்றினை வகிக்கும் விண்ணப்பதாரி ஒருவர் பரீட்சைக்காக விண்ணப்பிக்கும் போது தனது கையொப்பத்தினை தாபனத் தலைவர் அல்லது அவரினால் அதிகாரம் ஒப்படைக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர் ஒருவரினாலும், அவ்வாறல்லாத விண்ணப்பதாரி ஒருவர் தனது கையொப்பத்தினை அரச பாடசாலை ஒன்றின் அதிபர் ஒருவர், பிரதேசத்தின் கிராம அலுவலர், சமாதான நீதவான் ஒருவர்,சத்தியப் பிரமாணம் செய்த ஆணையாளர் ஒருவர், சட்டதரணி ஒருவர், பிரபல நொத்தாரிஸ் ஒருவர், முப்படைகளின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் ஒருவர், அரச அல்லது மாகாண அரச சேவையில் நிரந்தரப் பதவிநிலை தரம் ஒன்றில் உள்ள உத்தியோகத்தர் ஒருவரினால் உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

13. மேலே விபரிக்கப்பட்டுள்ள விண்ணப்பதாரிக்கு இப்பரீட்சையில் தோற்றுவதற்காக வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் உள்ளன / இல்லை என்பதனையும் குறித்த பரீட்சைக் கட்டணத்தை செலுத்தியுள்ளார் என்பதனையும் அவர் இப்பதவிக்காகத் தெரிவு செய்யப்படும் பட்சத்தில் இத்திணைக்களத்தில் தற்போது வகிக்கும் பதவியிலிருந்து விடுவிக்கப்பட முடியும் / முடியாது என்பதனையும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.

................................................ .........................................................
திகதி திணைக்களத் தலைவரின் கையொப்பம்

திணைக்களத் தலைவரின் முழுப் பெயர் :
பதவி :
முகவரி :
(பதவி முத்திரையினால் உறுதிப்படுத்தவும்.)

08-14

## நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சு

## சிறைச்சாலைகள் திணைக்களம்

## சிறைச்சாலைகள் திணைக்களத்தின் முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்ப பிரிவு - 3 சேவை வகையின் தரம் III துணை வேலைப் பரீட்சகர் பதவிக்கு ஆட்சேர்ப்புச்செய்து கொள்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2026

இலங்கைச் சிறைச்சாலைகள் திணைக்களத்தில் வெற்றிடமாகவுள்ள முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்ப பிரிவு - 3 சேவை வகையின் தரம் III துணை வேலைப் பரீட்சகர் பதவியின் ஐந்து (05) வெற்றிடங்களை நிரப்புவதற்காக நடாத்தப்படும் திறந்த போட்டிப் பரீட்சைக்குத் தகுதியுள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இந்தப் பரீட்சை பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நவெம்பர் மாதத்தில் கொழும்பில் மாத்திரம் நடாத்தப்படும்.

1. **சேவைக்கு ஆட்சேர்ப்புச்செய்து கொள்ளும் முறை:**

   i. பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படும் எழுத்துப் போட்டிப் பரீட்சையின் தேர்ச்சி தொடரொழுங்கிற்கு அமைவாக நேர்முகப் பரீட்சையொன்றின் மூலம் தகைமைகளைப் பரிசீலித்துப் பார்த்து வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்புச்செய்து கொள்ளப்படும். இந்த நேர்முகப் பரீட்சையானது ஒரு சாதாரண நேர்முகப் பரீட்சையாகும் என்பதோடு, அதில் தகைமைகளைப் பரிசீலித்தல் மாத்திரம் இடம்பெறும்.

   ii. எழுத்துப் பரீட்சையானது இரண்டு (02) வினாத்தாள்களைக் கொண்டதாகும். இந்தப் பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழி மூலங்களில் நடாத்தப்படும். விண்ணப்பிக்கும் மொழி மூலத்தைப் பின்னர் மாற்றுவதற்கு அனுமதிக்கப்படமாட்டாது. பரீட்சைப் பாடங்களும் அப்பாடங்களுக்கு குறித்தொதுக்கப்பட்டுள்ள புள்ளிகளும் மற்றும் நேரமும் பின்வருமாறு:

| *தொ. இல.* | *பாடங்கள்* | *காலம்* | *அதிகபட்சப் புள்ளிகள்* | *சித்திக்கான புள்ளிகள்* |
|---|---|---|---|---|
| 01 | நுண்ணறிவுப் பரீட்சை | 01 மணித்தியாலம் | 100 | 40% |
| 02 | தொழில்நுட்ப அறிவு | 03 மணித்தியாலங்கள் | 100 | 40% |

   **நுண்ணறிவுப் பரீட்சை:** இந்த வினாத்தாள் பல்தேர்வு வினாக்களைக் கொண்டதாகும். விண்ணப்பதாரியின் சிந்திக்கும் தர்க்கரீதியான திறனையும், அவரது சிந்திக்கும் பகுப்பாய்வு நிலையையும், தீர்மானிக்கும் ஆற்றலையும் தீர்மானிப்பதற்கான வினாக்களைக் கொண்டிருக்கும்.

   **தொழில்நுட்ப அறிவு:** கட்டிட நிர்மாணக் கோட்பாடுகள், நிர்மாணப் பணிகளுக்கான வரைபடங்களைத் தயாரிக்கும் ஆற்றலைப் புரிந்துகொள்ளல், நீர் வழங்கல், நீர் விநியோக நடவடிக்கைகள் மற்றும் கழிவகற்றல் செயல்முறைகள் தொடர்பான அறிவைப் பரிசோதிப்பதற்காகத் தயாரிக்கப்பட்ட வினாத்தாளாகும். அனைத்து வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

2. **சேவையில் ஈடுபடுத்துவதற்கான நிபந்தனைகள்:**

   I. இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய சம்பளத்திற்கு உரித்துடையதுமாகும். விதவைகள் மற்றும் அநாதைப் பிள்ளைகள் / தபுதாரர் மற்றும் அநாதைப் பிள்ளைகள் ஓய்வூதியத் திட்டத்திற்குப் பங்களிப்புச் செய்தல் வேண்டும்.

   II. இப்பதவிக்கு நியமனம் பெறும் உத்தியோகத்தர்கள் மூன்று (03) வருட தகுதிகூர் நிலைக் காலத்திற்கு உட்படுவதோடு, அந்த மூன்று (03) வருடங்களுக்குள் முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

   III. அரச நிருவாக சுற்றறிக்கை 18/2020 இன் பிரகாரம் அரச கரும மொழித்தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

   IV. அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை, அரசாங்க நிதி ஒழுங்கு விதிகள், சிறைச்சாலைகள் திணைக்கள நிலையியல் கட்டளைகள் மற்றும் ஏனைய கட்டளைகளுக்கும் இந்த நியமனம் உட்பட்டதாகும்.

3. **சம்பள அளவுத்திட்டம்:**

இந்தப் பதவிக்கு அரச நிருவாக சுற்றறிக்கை 10/2025 ஆம் இலக்க சம்பளச் சுற்றறிக்கைக்கு அமைவாக MT 1 – 2025 சம்பளக் குறியீட்டு இலக்கத்தின் கீழ் ரூபா 50,090 - 10 x 540 - 11 x 630 - 10 x 1,010 - 10 x 1,190 - ரூபா 84,420.00 (மாதாந்த) சம்பள அளவுத்திட்டம் உரித்துடையதாகும். (2025.03.25 ஆம் திகதிய அரச நிருவாக சுற்றறிக்கை இலக்கம்: 10/2025 இன் ஏற்பாடுகளுக்கமைய அதன் அட்டவணை II இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு சம்பளம் உரித்துடையதாகும்.)

4. **தகைமைகள்:**

4.1 **கல்வித் தகைமைகள்:**

சிங்களம் / தமிழ் / ஆங்கில மொழி, கணிதம் மற்றும் மேலும் இரு பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

4.2 **உடற்தகைமை:**

I. ஒவ்வொரு விண்ணப்பதாரரும் இலங்கையின் எந்தவொரு பகுதியிலும் சேவையாற்றுவதற்கும்,

II. பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் பொருத்தமான உடலியல் மற்றும் உளவியல் தகுதியைக் கொண்டிருத்தல் வேண்டும்.

4.3 **தொழிற்தகைமை:**

தொடர்புடைய துறையில் தேசிய தொழிற்தகைமை (NVQ) மட்டம் 05 அல்லது அதற்குச் சமனானதென மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஏனைய தொழில்நுட்பத் தகைமைகளைப் பெற்றிருத்தல்.

4.4 **ஏனைய தகைமைகள்:**

I. இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

II. சிறந்த ஆரோக்கியமுடையவராகவும் மற்றும் நன்னடத்தையுடையவராகவும் இருத்தல் வேண்டும்.

III. ஒழுங்கீனமான குற்றமொன்று தொடர்பாக யாதேனுமொரு நீதிமன்றத்தினால் குற்றவாளியாகத் தீர்ப்பளிக்கப்பட்டிருப்பது மேற்படி பதவிக்கு நியமிக்கப்படுவதற்கு முழுமையான தகைமையீனமொன்றாகக் கருதப்படும்.

IV. பதவிக்குச் சேர்த்துக்கொள்வதற்குத் தேவையான அனைத்துத் தகைமைகளும் விண்ணப்பங்கள் கோரப்படும் அறிவித்தலில் குறிப்பிடப்படும் முடிவுத் திகதியான 2026.09.04 ஆம் திகதிக்கு அனைத்து விதத்திலும் பூர்த்தியடைந்திருத்தல் வேண்டும்.

5. **வயது எல்லை:**

குறைந்தபட்ச வயது 18 ஆகவும், ஆகக்கூடிய வயது 35 ஆகவும் இருத்தல் வேண்டும். அதற்கமைய, விண்ணப்பதாரரின் பிறந்த திகதி 2008.09.04 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னதாகவும் மற்றும் 1991.09.04 ஆம் திகதி அல்லது அதற்குப் பின்னதாகவும் அமைந்திருந்தால் மாத்திரம் வயது தொடர்பான தகுதி பூர்த்தியாகும்.

6. **விண்ணப்பிக்கும் முறை:**

6.1 பரீட்சைக் கட்டணம் ரூபா 600.00 ஆகும். பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தும் போது நிகழ்நிலை அமைப்பினால் வழங்கப்படுகின்ற பின்வரும் கட்டணம் செலுத்தும் முறைகளின் கீழ் மாத்திரம் செலுத்துதல் வேண்டும்:

1. ஏதேனுமொரு வங்கியின் கடன் அட்டை மூலம்
2. இணையம் மூலம் கொடுப்பனவு செய்ய முடியுமான வசதியைக் கொண்டுள்ள ஏதேனுமொரு வங்கி வரவு அட்டை மூலம்
3. இலங்கை வங்கியின் நிகழ்நிலை வங்கி முறைமை / Flex செயலி மூலம்
4. ஏதேனுமோர் இலங்கை வங்கி கிளையின் மூலம்

குறிப்பு:

(அ) மேலே குறிப்பிடப்பட்டுள்ள முறைகளின் மூலம் கட்டணம் செலுத்துகின்ற முறை பற்றிய அறிவுறுத்தல்கள் இணையத்தளத்தில் பரீட்சைக்குரிய தொழில்நுட்ப அறிவுறுத்தல்களின் கீழ் பிரசுரிக்கப் பட்டுள்ளன.

(ஆ) கட்டணம் கிடைக்கப்பெற்றமை குறுஞ்செய்தி (SMS) மூலமாகவோ அல்லது மின்னஞ்சல் (E-mail) செய்தி மூலமாகவோ அறியத்தரப் படும். பரீட்சைக் கட்டணத்திற்கான முழுத் தொகையும் செலுத்தப்படல் வேண்டும் என்பதோடு, பரீட்சைக் கட்டணத்தை விடக் குறைவாகவோ அல்லது அதிகமாகவோ செலுத்தப்பட்டுள்ள விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மேற்படி கட்டண முறைகள் மூலம் பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தும்போது ஏற்படுகின்ற தவறுகளுக்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் பொறுப் பேற்கமாட்டாது.

(இ) பரீட்சைக்காகச் செலுத்தப்பட்ட தொகை எந்தவொரு காரணத்திற்காகவும் மீளளிக்கப் படமாட்டாது அல்லது வேறு பரீட்சைக்காக மாற்றப்படவும் மாட்டாது.

6.2 விண்ணப்பப்படிவம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் www.doenets.lk என்ற இணையத் தளத்தின் “Our Services” என்பதன் கீழ் உள்ள “Online Applications – Recruitment Exams/E.B. Exams” என்பதன் கீழ் வெளியிடப்பட்டுள்ளதோடு, விண்ணப்பங்களை நிகழ்நிலை (Online) முறையில் மாத்திரமே சமர்ப்பிக்க முடியும். நிகழ்நிலை விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளல் 2026 ஓகத்து மாதம் 10 ஆம் திகதி மு.ப. 09.00 மணிக்கு ஆரம்ப மாவதுடன் 2026 செத்தெம்பர் மாதம் 04 ஆம் திகதி பி.ப. 09.00 மணிக்கு முடிவடையும்.

6.3 தற்போது அரசு / மாகாண அரச சேவையிலுள்ள உத்தியோகத்தர்கள் விண்ணப்பத்தின் பிரதியொன் றைத் தமது தனிப்பட்ட பெயர் வழிக்கோப்பில் உட்சேர்ப்பதற்காக நிறுவனத் தலைவர்களிடம் ஒப்படைத்தல் வேண்டும் என்பதோடு, நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுகின்ற சந்தர்ப்பத்தில் நிறுவனத் தலைவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட விண்ணப்பத்தின் பிரதி மற்றும் சேவை உறுதிப் படுத்தல் கடிதம் என்பவற்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

6.4 விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதை கடைசித் திகதி வரை தாமதிப்பதால் ஏற்படுகின்ற எந்தவொரு பாதகமான விளைவுகளையும் விண்ணப்பதாரியே பொறுப்பேற்றுக்கொள்ளல் வேண்டும்.

6.5 நிகழ்நிலை (Online) பரீட்சை விண்ணப்பப்படிவம் ஆங்கில மொழியில் மாத்திரம் பூர்த்தி செய்யப் படுதல் வேண்டும். விண்ணப்பதாரரினால் நிகழ் நிலையாக அனுப்பப்பட்ட மென் பிரதி செல்லுபடியாகும் விண்ணப்பமாக திணைக் களத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது / ஏற்றுக் கொள்ளப்படவில்லை என்பது முறைமைக்குள் நுழைவதற்காகப் பயன்படுத்தப்பட்ட கையடக்கத் தொலைபேசி இலக்கத்திற்கு குறுஞ்செய்தி (SMS) மூலமாகவோ அல்லது மின்னஞ்சல் (E-mail) முகவரிக்கோ அறியத்தரப்படும். நிகழ்நிலை விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்வதற்கு முன்னர் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல் பத்திரத்தைப் (Instructions) பதிவிறக்கம் செய்து கொள்ளவும். விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்யும்போது அந்த அறிவுறுத்தல்களைச் சரியாகப் பின்பற்றவும். விண்ணப்பத்தின் அச்சுப்பிரதியைப் பெற்றுக் கொண்ட பின்னர் அதில் செய்யப்படுகின்ற எந்தவொரு திருத்தமும் செல்லுபடியாகும் திருத்த மொன்றாகக் கருதப்படமாட்டாது. முழுமையாகப் பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்கள் அறிவித் தலின்றி நிராகரிக்கப்படும்.

6.6 வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டுள்ளவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளனர் என்ற கணிப்பின் அடிப் படையில், விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதிக்கு அல்லது அத்திகதிக்கு முன்னர் விதிக்கப்பட்ட பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி, அதற்குரிய சரியாகப் பூர்த்தி செய்யப் பட்ட விண்ணப்பங்களை அனுப்பியுள்ள விண் ணப்பதாரர்களுக்குப் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை அனுமதி அட்டைகள் நிகழ்நிலையில் மாத்திரம் வழங்கப்படும். பரீட்சை அனுமதி அட்டைகள் வெளியிடப்பட்டவுடன் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் அது பற்றிய விபரம் இணையதள அறிவித்தல் மூலம் / விண்ணப்பதாரர்களுக்குக் குறுஞ்செய்தி மூலம் அறியத்தரப்படும். தமது அனுமதி அட்டையைப் பெறாத விண்ணப்பதாரர் எவரேனுமிருப்பின் இணையதள அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அது பற்றி இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் தாபனப் பரீட்சைகள் ஒழுங்கமைப்புக் கிளையிடம் உசாவுதல் வேண்டும். அவ்வாறு விசாரிக்கும் போது விண்ணப்பதாரி தான் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரரின் முழுப் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரி என்பவற்றைச் சரியாகக் குறிப்பிட்டுத் தயாரிக்கப்பட்ட கோரிக்கைக் கடிதத்தை இணையதள அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி உசாவுவது மிகவும் பயனுள்ளதாகும். அவ்வாறு விசாரிக்கும் போது பரீட்சைத் திணைக்களத்தினால் கேட்கப்படும் யாதேனுமொரு தகவலை உறுதிப்படுத்துவதற்காகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தின் அச்சுப்பிரதியைத் தயார் நிலையில் வைத்திருப்பது பயனுடையதாக இருக்கும். அனுமதி அட்டையைப் பரிசீலித்துப் பார்த்துத் திருத்தங்கள் இருப்பின் காலதாமதமின்றி பரீட்சைத் திணைக்களத்தைத் தொடர்புகொண்டு விண்ணப்பத்திற்கு அமைய உரிய திருத்தங்களை மேற்கொள்வது அவசியமாகும். பரீட்சை மண்ட பத்தில்/நேர்முகப் பரீட்சையின் போது திருத்தங் களுக்காகச் செய்யப்படுகின்ற கோரிக்கைகள் பரிசீலித்துப் பார்க்கப்படமாட்டாது.

6.7 பரீட்சைக்கான அனுமதி அட்டையில் விண் ணப்பதாரரின் கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப் பட்டிருத்தல் வேண்டும். யாதேனுமோர் அரச நிறுவனத்திலிருந்து பரீட்சைக்கு விண்ணப்பிக்கின்ற விண்ணப்பதாரியொருவர் தனது கையொப்பத்தை நிறுவனத் தலைவர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் மூலமும், அவ்வாறில்லாத விண்ணப்பதாரியொருவர் தனது கையொப்பத்தை பிரிவின் கிராம அலுவலர், அரச பாடசாலையொன்றின் அதிபர், சமாதான நீதவான், சத்தியப் பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு அல்லது பௌத்த விகாரையொன்றின் விகாராதிபதி அல்லது தலைமைத் தேரர் அல்லது ஏனைய சமய வழிபாட்டுத் தலத்திற்குப் பொறுப்பான சமயத் தலைவர்கள் அல்லது மதகுருமார்களில் குறிப்பிடத்தக்க அந்தஸ்தைக் கொண்டுள்ள ஒருவர் மூலம் அத்தாட்சிப்படுத்திக்கொள்ளல் வேண்டும்.

7. **பரீட்சைக்குச் சமுகமளித்தல்:**

(அ) விண்ணப்பதாரர் ஒருவர் தனக்கு ஒதுக்கப்பட்ட பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்குத் தோற்றல் வேண்டும். ஒவ்வொரு விண்ணப்பதாரரும் பரீட்சை

அனுமதி அட்டையில் தனது கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்தி முதன் முதலில் அந்த மண்டபத்தில் தோற்றும் நாளில், அதனைப் பரீட்சை மேற்பார்வையாளரிடம் ஒப்படைத்தல் வேண்டும். அனுமதி அட்டையின்றி பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது. ஒவ்வொரு விண்ணப்பதாரரும் பின்பற்ற வேண்டிய விதிமுறைகள் இந்த வர்த்தமானப் பத்திரிகையின் ஆரம்பத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளன. பரீட்சையை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பாகப் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் விதிகளுக்குப் பரீட்சார்த்திகள் கட்டுப்படுதல் வேண்டும். அந்த விதிகளை மீறினால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படுகின்ற தண்டனைக்கு அவர் உள்ளாகுவதற்கு நேரிடும்.

(ஆ) விண்ணப்பதாரர் ஒருவருக்குப் பரீட்சை அனுமதி அட்டை வழங்கப்படுவது, அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகைமை பெற்றுள்ளார் அல்லது பதவிக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளார் என ஏற்றுக் கொள்ளப்பட்டதாகக் கருதப்படக் கூடாது.

8. **பரீட்சார்த்திகளின் ஆளடையாளம்:**

பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தினுள் தாம் தோற்றுகின்ற ஒவ்வொரு பாடத்திற்கும் பரீட்சை மேற்பார்வையாளர் திருப்தியடைகின்ற வகையில் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தல் வேண்டும். அதற்காகப் பின்வரும் ஆவணங்கள் மாத்திரம் செல்லுபடியானதாகும்:

I. தேசிய ஆளடையாள அட்டை
II. செல்லுபடியாகும் கடவுச் சீட்டு
III. செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப் பத்திரம்

மேலும், பரீட்சார்த்திகள் ஆளடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளக் கூடிய வகையில் முகத்தை மூடாமலும் மற்றும் இலத்திரனியல் தொடர்பாடல் சாதனங்களை அணிந்திருக்கவில்லை என்பதை உறுதிப்படுத்தக் கூடிய வகையிலும் இரு காதுகளை மூடாமல் பரீட்சை மண்டபத்தினுள் நுழைதல் வேண்டும். இதற்கு இணங்காத எவரும் பரீட்சை மண்டபத்தினுள் அனுமதிக்கப்படமாட்டார்கள். அத்துடன் பரீட்சை மண்டபத்தினுள் நுழைந்த நேரத்திலிருந்து பரீட்சை முடிவடைந்து அங்கிருந்து வெளியேறும் வரை முகத்தையும் இரு காதுகளையும் மூடாமல் இருத்தல் வேண்டும்.

9. **தவறான தகவல்களை வழங்குவதற்கான தண்டனை:**

விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்யும்போது மிகவும் கவனமாகச் சரியான தகவல்களை வழங்குதல் வேண்டும். இந்தப் பரீட்சையின் விதிகளுக்கமைய எவரேனுமொரு பரீட்சார்த்தி தகுதியற்றவர் என வெளிப்பட்டால், பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடைபெறும்போது அல்லது பரீட்சையின் பின்னரோ எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரது பரீட்சார்த்தித் தன்மை இரத்துச் செய்யப்படலாம். விண்ணப்பதாரரினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஏதேனுமொரு விடயம் தவறானது எனத் தெரிந்துகொண்டே சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என வெளிப்பட்டால், அல்லது ஏதேனுமொரு முக்கியமான விடயத்தை அவர் வேண்டுமென்றே மறைத்திருப்பின், அவரது நியமனத்தை இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

10. **பெறுபேறுகளை வெளியிடுதல்:**

நியமன அதிகாரியினால் பெறுபேறுகளை வெளியிடுவதற்குப் பொருத்தமான திகதி அறிவிக்கப்பட்ட பின்னர், எழுத்துப் பரீட்சையில் ஒவ்வொரு பாடத்திற்கும் பெற்றுக்கொண்ட புள்ளிகள் / மொத்தப் புள்ளிகள் குறிப்பிடப்பட்ட பெறுபேற்றுப் பத்திரமொன்றைப் பரீட்சைக்குத் தோற்றிய அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும் அஞ்சல் மூலம் அனுப்பிவைப்பதற்கு அல்லது www.results.exams.gov.lk என்ற இணையத்தளத்தின் ஊடாகப் பெறுபேறுகளை வெளியிடுவதற்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடவடிக்கை எடுக்கப்படும். பரீட்சைப் பெறுபேறுகள் தொடர்பாகப் பரீட்சை ஆணையாளர் நாயகம் அவர்களின் தீர்மானமே இறுதியான தீர்மானமாகும்.

**முக்கிய குறிப்பு:** பரீட்சைக்குத் தோற்றுவது அல்லது நேர்முகப் பரீட்சையில் பங்குபற்றுவது நியமனத்தை வழங்குவதற்கான தகைமையைப் பூர்த்தி செய்துள்ளதாகக் கருதப்படமாட்டாது.

- ❖ குறிப்பிட்ட எண்ணிக்கையிலான வெற்றிடங்களை அல்லது அனைத்து வெற்றிடங்களையும் நிரப்பாமல் இருப்பதற்கு நியமன அதிகாரிக்கு அதிகாரமுள்ளது.
- ❖ இங்கு குறிப்பிடப்படாத ஏதேனுமொரு விடயம் இருப்பின், அது தொடர்பாகச் சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் அவர்களால் தீர்மானம் எடுக்கப்படும். அனைத்து விண்ணப்பதாரர்களும் இந்த வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள பொதுப் பரீட்சை விதிகளுக்கமையச் செயற்படுவதற்குக் கட்டுப்பட்டுள்ளனர்.
- ❖ இந்த அறிவித்தலின் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளுக்கிடையில் ஏதேனும் முரண்பாடு அல்லது பொருத்தமின்மை காணப்படும் பட்சத்தில், சிங்கள மொழு மூல அறிவித்தலே சரியானது எனக் கருதிச் செயற்படுதல் வேண்டும்.

ஆர். பிரசாத் ஹேமந்த குமார
சிறைச்சாலைகள் ஆணையாளர்
நாயகம் (க/நிறை)

சிறைச்சாலைகள் தலைமையகம்,
இல. 150,
பேஸ்லைன் வீதி,
கொழும்பு 09,
2026, யூலை 30.

08-39

## ஆரம்ப தர வைத்திய உத்தியோகத்தர்களுக்கும் பல் சத்திரசிகிச்சை வைத்திய உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை – 2026 (முதலாவது தடவை)

2014.10.11ஆம் திகதிய 1883/17 ஆம் இலக்கமுடைய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விஷேட வர்த்தமானிப் பத்திரிகையில் வெளியிடப்பட்டுள்ள சுகாதார சேவையின் வைத்திய உத்தியோகத்தர்கள் தொடர்பான நியதிச் சட்டக் கோவையின் 08 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள வகையில் ஆரம்ப தர வைத்திய உத்தியோகத்தர்கள் II ஆம் தரத்திற்கு உயர்த்தப்படுவதற்கு முன்பாகவும் தரம் II க்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட அனைத்து பல் சத்திர சிகிச்சை வைத்திய உத்தியோகத்தர்களும் அந்நியமனம் கிடைக்கப்பெற்ற திகதியிலிருந்து மூன்று வருட காலத்தினுள் சித்தியடையவேண்டியதுமான விணைத்திறமைகாண் தடைப்பரீட்சை 2026.09.06 ஆம் திகதி சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும் மொழிகளிலும் நடாத்தப்படும் என்பதை இத்தால் அறிவிக்கப்படுகின்றது. பரீட்சை நடாத்தப்படும் இடமும் கால அட்டவணையும் அனுமதி அட்டையில் குறிப்பிட்டு அனுப்பி வைக்கப்படும்.

02. **தகைமைகள் :**

உரிய பரீட்சையினைப் பூரணப்படுத்தியிராத ஆரம்ப தர வைத்திய உத்தியோகத்தர்களும், நியமனத்தில் உறுதிப்படுத்தப்படாத பல்சத்திர சிகிச்சை நிபுணர்களும் இந்தப் பரீட்சையின் பொருட்டு விண்ணப்பிக்க முடியும். மேலும் இத் திணைக்களப் பரீட்சையினை பூரணப்படுத்தியிராத நிர்வாக தரத்தை சேர்ந்த வைத்திய உத்தியோகத்தர் தரத்தைச் சேர்ந்தவர்களும், விசேட வைத்திய நிபுணர் தரத்தைச் சேர்ந்தவர்களும் இப் பரீட்சையின் பொருட்டு விண்ணப்பிக்க முடியும்.

03. **விண்ணப்பங்கள் :**

இங்கே தரப்பட்டுள்ள QR குறியீட்டினை ஸ்கேன் செய்து அல்லது https://forms.gle/cKmkCAc61dRQJX5X6 என்ற இணைய முகவரியை பயன்படுத்தி நிகழ்நிலை வழியான கூகிள் படிவத்தினை (Google Form) பூர்த்தி செய்து சமர்ப்பிப்பதுடன் இச்சுற்று நிருபக் கடிதத்தின் இறுதியில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்தினை பூர்த்திசெய்து தாபன தலைவர் ஊடாக "பணிப்பாளர் (பரீட்சைகள்), பரீட்சைகள் கிளை, சுகாதாரம் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சு, இல. 106 டட்லி சேனாநாயக மாவத்தை, கொழும்பு.08 என்ற முகவரிக்கு 2026.08.14 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பதிவுத்தபாலில் அனுப்பிவைக்க வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பரீட்சையின் பெயர் "ஆரம்பதர வைத்திய உத்தியோகத்தர்களுக்கும் பல் சத்திரசிகிச்சை வைத்திய உத்தியோகத்தர்களுக்குமான விணைத்திறமைகாண் தடைப்பரீட்சை – 2026 (முதலாவது தடவை)'' எனக் குறிப்பிடுதல் வேண்டும். இவ்வினைத்திறமைகாண் தடைப்பரீட்சைக்கு தோற்றுவதற்கு விண்ணப்பதாரி சகல தகைமைகளையும் பூர்த்திசெய்துள்ளார் என்பதை தனிநபர் கோவைகளை பேணும் உத்தியோகத்தரும், விண்ணப்பத்தில் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் அனைத்தும் சரியானவை என்பதை நிறுவன தலைவரும் அத்தாட்சிப்படுத்த வேண்டியது கட்டாயமாகும்.

[கவனிக்குக:]

நிகழ்நிலை (online) மூலம் பூர்த்திசெய்த கூகிள் படிவத்தினை 2026.08.14 ஆம் திகதி அல்லது அதற்கு சமர்ப்பிக்காதவர்களது விண்ணப்பங்கள், 2026.08.14 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னதாக கிடைப்பெறாத அச்சு வடிவ விண்ணப்பங்கள், முழுமையற்ற அல்லது தவறாக பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் எதுவித முன்னறிவித்தல்களும் இன்றி நிராகரிக்கப்படும்.

**கவனிக்கவும்** :

மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு அமைய விண்ணப்பம் A4 தாளின் இரண்டு பக்கங்களையும் உபயோகித்து தாயரிக்கப்படவேண்டும். முதற் பக்கத்தில் இலக்கம் 01 - 04 தொடக்கமும் இரண்டாம் பக்கத்தில் 05 - 10 தொடக்கமும் அமையும் வண்ணம் விண்ணப்பம் தயாரிக்கப்படல் வேண்டும். மேற்படி தகவல்களுக்கு அமைய தயாரிக்கப்படாத விண்ணப்பங்கள் எதுவித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும் என்பதை கவனத்தில் கொள்ளவும்.

04. **பரீட்சைக் கட்டணம் :**

(i) பரீட்சைக்கு முதன் முறையாகத் தோற்றும் பரீட்சார்த்திகள் பரீட்சைக் கட்டணத்திலிருந்து விதிவிலக்கப்படுவர். இதற்கு முன்னர் விண்ணப்பித்து பரீட்சைக்குத் தோற்றாத ஏனைய விண்ணப்பதாரர்கள் ரூபா 25.00 பெறுமதியுடைய முத்திரையினை ஒட்டி அதன் மீது கையொப்பத்தினையும், திகதியினையும் இட்டு உரிய முறையில் மதிப்பு நீக்கம் செய்தல் வேண்டும்.

(ii) இவ்வாறு செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணமானது எக் காரணத்தினைக் கொண்டும் வேறு பரீட்சையொன்றிற்கு மாற்றுதலோ, மீள வழங்கப்படுதலோ மேற்கொள்ளப்பட மாட்டாது.

05. **பரீட்சைக்கான அனுமதி :**

i. நிகழ்நிலை (online) மூலம் பூர்த்திசெய்த கூகிள் படிவத்தினை சமர்ப்பித்து சுற்றுநிருபக் கடித்தின் இறுதியில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்தினை உரியவாறு பூரணப்படுத்திய விண்ணப்பதாரிகளுக்கு மாத்திரம் இச்சுற்றுநிரூபத்தின் 09 ஆம் வாசகத்தில் விளக்கப்பட்டுள்ளவாறு அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படும்.

ii. அவ்வாறு பெறப்படும் அனுமதிப்பத்திரத்தினை பதவிநிலை அலுவலர் ஒருவர் மூலம் உரியவாறு பூரணப்படுத்தி பரீட்சை ஆரம்பிக்கும் தினத்தில் பரீட்சை நிலைய தலைவரிடம் முன்னளிக்க வேண்டும். பரீட்சை அனுமதிப்பத்திரம் இன்றி பரீட்சை எழுத அனுமதிக்கப்பட மாட்டாது.

iii. பரீட்சார்த்திகளினால் பரீட்சை நிலையத்தினுள் பரீட்சை மேற்பார்வையாளருக்கு தனது அடையாளத்தினை உறுதிப்படுத்தல் வேண்டும். அதன் பொருட்டு பின்வரும் ஆவணங்களில் ஒன்றினைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(அ) தேசிய அடையாள அட்டை

(ஆ) சுகாதார அமைச்சு மற்றும் அதனுடன் ஏற்புடைய நிறுவனங்களினால் வழங்கப்பட்ட அடையாள அட்டை

(இ) செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்

(ஈ) செல்லுபடியாகும் கடவுச் சீட்டு

06. **பரீட்சைத்திட்டம் :**

இப்பரீட்சை மூன்று எழுத்து மூல கட்டுரை வினாப்பத்திரங்களையும் சிங்கள/தமிழ் வாய்மொழிப் பரீட்சை ஆகிய 04 பிரிவுகளைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு பிரிவிற்கும் 100 புள்ளிகள் வீதம் ஒதுக்கப்பட்டுள்ளது. தேர்ச்சியடைவதன் பொருட்டு ஒரு விடயத்திற்கு குறைந்தபட்சம் 50 புள்ளிகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும். ஒரு அமர்வில் அல்லது பல அமர்வில் பிரிவுகளுக்குத் தோற்றி பரீட்சையைப் பூரணப்படுத்திக் கொள்ளலாம். முதற் தடவையாக விண்ணப்பிக்கும் பரீட்சார்த்திகள் அனைத்து விடயங்களுக்கும் கட்டாயம் விண்ணப்பிக்க வேண்டும்.

07. **பரீட்சைப் பாடத்திட்டம் :**

7.1 **எழுத்துப் பரீட்சை :**

7.1.1 **தாபனவிதிக்கோவை வினாத்தாள்**

நேரம் 02 மணித்தியாலம். 08 வினாக்களில் 05 வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும்.

பாடவிதானம்

i. சுகாதார அமைச்சின் சுகாதாரத் திணைக்களத்தின் பொதுவான ஒழுங்குவிதிகள்.

ii. அரசாங்க சேவை ஆணைக்குழுவின் ஒழுங்குவிதிகள்.

iii. தாபனவிதிக்கோவை

I ஆம் பிரிவு : VI, VII, VIII, IX, XII, XIII, XIV, XV, XVI, XVII, XVIII, XXIII, XXIV, XXV, XXVI, XXVII, XXVIII, XXX, XXXI, XXXIIஅத்தியாயங்கள்.

II ஆம் பிரிவு : XLVII, XLVIII ஆகிய அத்தியாயங்கள்.

7.1.2 **வைத்தியசாலைகள், மருந்துச்சாலைகள் என்பவற்றின் நிர்வாகம் வினாத்தாள்**

நேரம் 1½ மணித்தியாலம். 07 வினாக்களில் 04 வினாக்களுக்கு வியைளிக்க வேண்டும்.

பாடவிதானம்

சுகாதாரக் கைநூல்

I வைத்தியசாலைகள், பொதுச் சுகாதார நிர்வாகம்

II ஆய்வுகூட சேவை முகாமைத்துவம்

III மருந்து முகாமைத்துவம்.

7.1.3 **கணக்கியல்**

நேரம் 02 மணித்தியாலம். 07 வினாக்களில் 04 வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும்.

**பாடவிதானம்**

i. சுகாதாரத் திணைக்களத்தில் களஞ்சியக் கணக்கு வைத்தல் தொடர்பான ஒழுங்குவிதிகள்

ii. சுகாதாரத் திணைக்களத்தில் வழிகாட்டிக் கைநூலில் நிதி தொடர்பான பந்தி.

iii. சுகாதார வைத்திய உத்தியோகத்தர் ஒருவரின் நாளாந்த கடமைகளுக்கு ஏற்புடைய

**நிதிப்பிரமானம்**

I ஆம் அத்தியாயம் - நிதிப்பிரமாணம் 1, 2, 78

II ஆம் அத்தியாயம் - நிதிப்பிரமாணம் 90, 91, 101, 102, 103, 104, 105, 106, 107, 108, 109, 110, 113, 115, 118, 119

III ஆம் அத்தியாயம் - நிதிப்பிரமாணம் 124, 125, 126, 127, 128, 131, 133, 134, 135, 136, 137, 138, 139, 140, 142, 143, 151, 152, 154, 155, 156, 189

V ஆம் அத்தியாயம் - நிதிப்பிரமாணம் 200, 201, 215, 225, 238, 245, 255, 257, 260
VI ஆம் அத்தியாயம் - நிதிப்பிரமாணம் 380, 381, 382, 383, 384, 385, 386, 388, 389, 390, 391, 392, 393, 394
VII ஆம் அத்தியாயம் - நிதிப்பிரமாணம் 488, 493
XIII ஆம் அத்தியாயம் - நிதிப்பிரமாணம் 715, 716, 756, 757, 758

பெறுகை வழிகாட்டிக் கோவை

1 ஆம் அத்தியாயம் - அனைத்து பிரிவுகளும்.

2 ஆம் அத்தியாயம் - 2.3, 2.4, 2.5, 2.6, 2.7, 2.8

3 ஆம் அத்தியாயம் - 3.1, 3.2, 3.3, 3.4, 3.5, 3.6, 3.7, 3.8, 3.9

7.2 **சிங்களம்/தமிழ் வாய்மொழிப் பரீட்சை**

சிங்களம்/ தமிழ் ஆற்றலை அளப்பதன் பொருட்டு திணைக்களத்தின் பதவிநிலை உத்தியோகத்தர்களினால் நடாத்தப் படும் வாய்மொழிப் பரீட்சையாகும். தனது நாளாந்த கடமைகளில் ஈடுபடும்பொழுது மேலோங்கும் நிகழ்வுகள் தொடர்பாக சிங்கள மொழி மூல உத்தியோகத்தர்களுக்கு தமிழ் மொழியிலும், தமிழ் மொழிமூல உத்தியோகத்தர்களுக்கு சிங்கள மொழியிலும் கலந்துரையாடுவதற்கு உத்தியோகத்தருக்கு உள்ள ஆற்றலைப் பரீட்சித்தல் (நேரம் 10 நிமிடம்)

08. **பரீட்சை தொடர்பான ஒழுங்கு விதிகளைக் கடைப்பிடித்தல் :**

பரீட்சார்த்திகள் குறிப்புக்களை தன்னிடத்தில் வைத்து பார்த்து எழுதுதல் தடை செய்யப்பட்டுள்ளது. ஏனைய பரீட்சார்த்திகளின் விடைத்தாளினை பார்த்து எழுதுதலும் தடைசெய்யப்பட்டுள்ளது. ஒருவருக்கொருவர் உதவிசெய்தலை தவிர்த்துக்கொள்ளல் வேண்டும். மேலும் கையடக்கத் தொலைபேசி மற்றும் அதனுடன் தொடர்புடைய தொடர்பாடல், இலத்திரணியல் உபகரணங்களை பயன்படுத்தாதிருத்தல் வேண்டும். இவ்விதிகளை மீறும் எந்தவொரு பரீட்சார்த்தி மீதும் நடவடிக்கை எடுக்கப்படும்.

09. **பரீட்சை தொடர்பான ஒழுங்கு விதிகளைக் கடைப்பிடித்தல் :**

வினைத்திறமைகாண் தடைப்பரீட்சையின் பொருட்டு தகைமை பெறும் விண்ணப்பதாரர்களின் பெயர் விபரங்கள் சுகாதார அமைச்சின் உத்தியோகப்பூர்வ இணையதளத்தில் பிரசுரிக்கப்பட்ட தினத்திலிருந்து பரீட்சை அனுமதி அட்டைகளைப் பதிவிறக்கம் (Download) செய்ய முடியும். இந்த PDF கோப்பில், தேடல் (Search) முறையின் மூலம் தமது தேசிய அடையாள அட்டை இலக்கத்தை பயன்படுத்தி தமக்குரிய அனுமதி அட்டை காணப்படும் பக்கத்தையும் அதனுடன் தொடர்புடைய இரண்டாவது பக்கத்தையும் ஒரே A4 தாளின் இரு பக்கங்களிலும் அச்சிட்டு கொள்ள வேண்டும். அதன் பின்னர், தமது கையொப்பத்தை நிறுவனத் தலைவரால் உறுதிப்படுத்திக் கொண்டு தொடர்புடைய பரீட்சை நிலையத்திற்கு சமுகமளிக்க வேண்டும்.

Web Path : - www.health.gov.lk_ → More → Resources → Examination → Exam Notice

10. தயவுசெய்து இச்சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களினை தங்களின் நிறுவனத்தில் கடமையாற்றும் சகல உத்தியோகத்தர்களிற்கும் தெரியப்படுத்துவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள். இந்ததகவல்களை www.health.gov.lk எனும் இணையத் தளத்திலும் பெற்றுக்கொள்லாம்.

Web Path :- www.health.gov.lk → More → Resources → Examination → Circulars → Medical Officer/Dental Surgeon

**கவனிக்கவும்:**

சிங்களம், தமிழ், ஆங்கில மொழியிலான சுற்றுநிருபங்களுக்கிடையே ஏதாவது ஒவ்வாமை காணப்படுமாயின் சிங்கள மொழிமூல சுற்றுநிருபமே வலுவுடையதாகும்.

வைத்தியர் அணில் ஜாசிங்க,
செயலாளர்,
சுகாதாரம் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சு.

சுகாதாரம் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சு,
'சுவசிரிபாய',
385, வண.பத்தேகம விமலவங்ச தேரர் மாவத்தை,
கொழும்பு – 10,
2026, யூலை 30.

EXL - (Doctors' EB - 2026) மாதிரி விண்ணப்பப்படிவம்

| அலுவலக பாவனையின் பொருட்டு | |
|---|---|

**ஆரம்பதர வைத்திய உத்தியோகத்தர்களுக்கும் பல் சத்திரசிகிச்சை வைத்திய உத்தியோகத்தர்களுக்கான விணைத்திறமைகாண் தடைப்பரீட்சை – 2026 (முதலாவது தடவை)**

01. (அ) (i) விண்ணப்பதாரியின் முழுப் பெயர் (தமிழில் எழுதவும்) …………………………………………………

……………………………………………………………………………………………………………………

(ii) விண்ணப்பதாரியின் முழுப் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்)

| | | | | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | | | | | | | | | |

(iii) முதலெழுத்துக்களுடன் பெயர் (தமிழில்) …………………………………………………………………..

……………………………………………………………………………………………………………………

(iv) முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில கப்பிட்டல் எழுத்துக்களில்)

| | | | | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | | | | | | | | | |

தரப்பட்டுள்ள QR குறியீட்டினை ஸ்கேன் செய்து அல்லது https://forms.gle/cKmkCAc61dRQJX5X6 என்ற இணைய முகவரியை பயன்படுத்தி நிகழ்நிலை வழியான கூகிள் படிவத்தினை (Google Form) பூர்த்தி செய்து சமர்ப்பிக்கவும்.

நிகழ்நிலை வழியில் கூகிள் படிவத்தினை சமர்ப்பித்த திகதி :……/………/………..

(ஆ) (i) பதவி (உரிய கூண்டினுள் "✓" அடையாளமிடுக.

வைத்திய உத்தியோகத்தர் ☐ பல் சத்திரசிகிச்சை வைத்திய உத்தியோகத்தர் ☐

(ii) தகதிகூர் நிலைக்கால நியமனம் பெற்ற திகதி :.........................................................................

(iii) ஆரம்ப தரத்திற்கு நியமிக்கப்பட்ட திகதி / தரம் II :……..……………………………………..

(v) கையடக்கத் தொலைபேசி இல :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

(vi) தேசிய அடையாள அட்டை இல :

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|

(vii) மின்னஞ்சல் முகவரி : ……………………………..……………………………………..

02. தாங்கள் இம்முறை தோற்றுவதன் பொருட்டு எதிர்பார்த்துள்ள விடயத்தின் எதிரேயுள்ள கூண்டினுள் "✓" அடையாளத்தினை இடுக. தோற்ற வில்லையாயின் "X" அடையாளமிடுக.

வைத்தியசாலைகள் மருந்துச்சாலைகள் என்பவற்றின் நிர்வாகம் ☐ தாபனவிதிக்கோவை ☐ கணக்கியல் ☐

சிங்களம் வாய்மொழி ☐ தமிழ் வாய்மொழி ☐

03. பரீட்சைக்குத் தோற்றும் மொழி (உரிய கூண்டினுள் "✓" அடையாளத்தை இடவும்)

சிங்களம் : ☐ ஆங்கிலம் : ☐ தமிழ் : ☐

04. (அ) தற்போது சேவை புரியும் நிலையம் (ஆங்கிலத்தில்): ..........................................................................

(ஆ) அதற்குரிய மாவட்டம் ..........................................................................................................

(இ) இந்த நிறுவனம் நிர்வகிக்கப்படுவது : மத்திய அரசினால் ☐ மாகாண சபையினால் ☐

(ஈ) மாகாண சபையாயின் அதற்குரிய மாகாணம் : ..........................................................................

(உ) பரீட்சைக்கு தோற்றுவதற்கு விருப்பத்திற்குரிய மாவட்டம் :

01.......................................... 02.......................................... 03..........................................

(இம் மாவட்டங்களில் பரீட்சை நிலையம் அமையப் பெறாதவிடத்து / விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை பரீட்சை நிலையத்தின் கொள்ளளவை மீறியிருந்தாலோ அருகில் உள்ள பரீட்சை நிலையத்திற்கு இணைத்துக் கொள்ளப்படுவீர்கள்)

05. (அ) இதற்கு முன்னர் இப்பரீட்சைக்கு தோற்றியுள்ளீரா? ..........................................................................

(ஆ) தாங்கள் விண்ணப்பிப்பது முதற் தடவையில்லையாயின் முத்திரை ஒட்டப்பட்டுள்ளதா? ......................................

| முத்திரை |
|---|
| |

06. விண்ணப்பதாரியின் சான்றிதழ்

எனது அறிவு, விசுவாசத்தின் அடிப்படையில்

I. இவ்விண்ணப்பத்தில் என்னால் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் யாவும் உண்மையானவைகளெனவும், இப் பரீட்சைக்கு நான் தோற்றுவது முதன்முறையானபடியால் பரீட்சைக் கட்டணம் செலுத்த வேண்டிய அவசியமில்லை எனவும் / முதன் முறை அல்லாதபடியால் ரூபா...... பெறுமதியான முத்திரைகள் ஒட்டப்பட்டுள்ளதெனவும், இவ் விண்ணபத்தில் என்னால் ஒட்டப்பட்டுள்ள முத்திரைகள் மதிப்பு நீக்கம் புரியப்படுவதற்கு முன்பு வலுவிலுள்ள பாவிக்கப்படாத முத்திரைகள் எனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

II. சுகாதார அமைச்சினால் பரீட்சை தொடர்பாக விதிக்கப்பட்டுள்ள சட்டதிட்டங்களுக்கு கட்டுப்பட்டு நடப்பேன் எனவும், இப்பரீட்சை தொடர்பான நியதிச் சட்டத்தின் படி நான் தகைமையற்றவன் எனக் காணப்படின் எனது பரீட்சார்த்தித் தன்மையினை இரத்துச் செய்வதற்கு மேற்கொள்ளப்படும் எதுவிதத் தீர்மானத்திற்கும் நான் உடன்படுவேன் என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி :.......................................... ..........................................................

விண்ணப்பதாரரின் கையொப்பம்

07. சுயவிபரக் கோவையினை கையாளும் உத்தியோகத்தரின் சிபாரிசு

இந்தவிண்ணப்பம் பொறுப்பேற்கப்படும் தினத்திற்கு முன்னர்/ பின்னர் என்னிடம் கிடைக்கப் பெற்றதென்றும், தனிநபர் கோவையில் உள்ள தகவல்களுக்கு அமைய விண்ணப்பதாரி இந்தவிண்ணப்பத்தை சரியாக பூரணப்படுத்தியுள்ள தாகவும், இந்தவிண்ணப்பத்தில் பிரதி தனிநபர் கோவையில் கோவையிடப்பட்டுள்ளதென்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி .......................................... ..........................................................

பெயரும், கையொப்பமும்.

08. நிறுவனத் தலைவரின் சான்றிதழ்

திரு./திருமதி/செல்வி ……………………………………………………….……… என்பவர் எனது நிறுவனத்தில் சேவை புரியும் வைத்திய உத்தியோகத்தர் / பல் வைத்தியர் என்றும், இப்பரீட்சைக்குத் தோற்றுவது முதன் முறை/அல்லாத படியால் ரூபா............... பெறுமதியான முத்திரைகள் இவ்விண்ணப்பத்தில் ஒட்டியுள்ளதாகவும்/முத்திரை ஒட்ட வேண்டியதில்லை எனவும் விண்ணபத்தில் கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் விண்ணபதாரரின் பெயர்வழிக் கோவையிலுள்ள விபரங்களின் படி பிழையற்றவைகளெனவும் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அவனுக்கு/அவளுக்கு தகைமைகள் உண்டு எனவும் எனது முன்னிலையில் கையொப்பம் இட்டார் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி …………………………………

………………………………………………..
நிறுவனத் தலைவரின் கையொப்பம்
பதவி முத்திரையுடன்

09. பன்முகப்படுத்தப்பட்ட பகுதி / விசேட திட்டத் தலைவரின் சான்றிதழ்

திருவாளர் / திருமதி / செல்வி …………………………………………… என்பவர் ஆரம்ப தர வைத்திய உத்தி யோகத்தர் ஒருவராக/ பல் சத்திர சிகிச்சை வைத்தியர் ஒருவராக எனது நிறுவனத்தில் சேவையாற்றுகின்றார். எனவும் விண்ணபத்தில் கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் விண்ணபதாரரின் பெயர்வழிக்கோவையிலுள்ள விபரங்களின் படி பிழையற்றவைகளெனவும் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அவனுக்கு / அவளுக்குத் தகைமைகள் உண்டு எனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி …………………………………

………………………………………………
பன்முகப்படுத்தப்பட்ட பகுதி /
விசேட திட்டத் தலைவரின் கையொப்பம்
இறப்பர் முத்திரை இடப்படவேண்டும்.

(*தேவையற்றவற்றை வெட்டிவிடவும்)

08-50

---

## கட்டிடங்கள் திணைக்களம்

(i) இலங்கை தொழில்நுட்ப சேவையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்), III ஆம் தரம்

(ii) இலங்கை தொழில்நுட்ப சேவையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் (மின்னியல்), III ஆம் தரம்

(iii) இலங்கை தொழில்நுட்ப சேவையின் வடிவமைப்பாளர் - பயிலுனர் தரம்

01. கட்டிடங்கள் திணைக்களத்திலுள்ள மேலே குறிப்பிடப்பட்டுள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்காக, இந்த அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகளைப் பூர்த்திசெய்துள்ள, அத்திணைக்களத்தில் சேவையாற்றுகின்ற உத்தியோகத்தர்களிடமிருந்து கட்டிடங்கள் பணிப்பாளர் நாயகத்தினால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கட்டிடங்கள் திணைக்களம் தனது கடமைப் பணிகளை மேற்கொள்ளும் கட்டுமானத் தளங்கள் தீவு முழுவதும் பரவிக் காணப்படுவதுடன் இலங்கை தொழில்நுட்ப சேவையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்) – III ஆம் தரம் 13 வெற்றிடங்களுக்காவும், இலங்கை தொழில்நுட்ப சேவையின் (மின்னியல்), III ஆம் தரத்திலுள்ள 02 வெற்றிடங்களுக்காவும் இலங்கை தொழில்நுட்ப சேவையின் வடிவமைப்பாளர் –பயிலுனர் தரத்திலுள்ள 07 வெற்றிடங்களுக்காவும் திறந்த அடிப்படையில் தகுதி வாய்ந்த விண்ணபதாரர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

குறிப்பு:1 இலங்கை தொழிலநுட்ப சேவையின் (சிவில்), III ஆம் தரத்திற்கு தகுதி பெறும் விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கையானது வெற்றிடமாக உள்ள எண்ணிக்கைக்கு போதியதாக இல்லாதவிடத்து, பயிலுனர் தரத்திற்கு தகுதி பெறும் விண்ணபதாரர்களிருந்து எஞ்சிய வெற்றிடங்களுக்காக பயிலுனர் தரத்திற்கு உள்வாங்கப்படுவர்.

குறிப்பு:2 மட்டுப்படுத்திய அடிப்படையில் வெற்றிடமாக உள்ள பணியிடங்களை நிரப்புவதற்கு தகுதியான விண்ணபதாரர்கள் இல்லாதபட்சத்தில், அந்த வெற்றிடங்களுக்கும் திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

02. இந்த அறிவித்தலின் இறுதியில் கொடுக்கப்பட்டுள்ள மாதிரியின்படி A4 தாளின் இரு பக்கங்களையும் பயன்படுத்தித் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தை, “கட்டிடங்கள் பணிப்பாளர் நாயகம்,கட்டிடங்கள்; திணைக்களம், 2 ஆம் தளம், செத்சிறிப்பாய, பத்தரமுல்ல" என்ற முகவரிக்கு 2026.09.04 அன்றோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கக் கூடியவகையில் பதிவுத் தபால் மூலம் அனுப்பவேண்டும். விண்ணப்பப் படிவம் அடங்கிய உறையின் மேல் இடது மூலையில் “கட்டிடத் திணைக்களத்தின் இலங்கை தொழில்நுட்ப சேவை (சிவில் /மின்னியல்/ வடிவமைப்பாளர்-பயிலுனர்)” பதவிக்கு ஆட்சேர்ப்புக்கான திறந்த போட்டிப் பரீட்சை" என விண்ணப்பிக்கும் பதவியானது தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும். கல்வித் தகுதிகளை நிரூபிக்கும் சான்றிதழ்களின் சான்றுறுதிப்படுத்திய பிரதிகள் விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும் தாமதமாகக் கிடைக்கின்ற,தெளிவற்ற, முழுமையற்ற, அல்லது தேவையான தகுதிகளைப் பூர்த்தி செய்யாத விண்ணப்பங்கள் முன்னறிவிப்பின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் பெறப்பட்டதற்கான அறிவித்தல் வழங்கப்படமாட்டாது.

03. **பணியமர்த்தல் நிபந்தனைகள்:**

3.1 இந்தப் பதவி நிரந்தரமானது. உங்களுக்கு உரிமை யுள்ள ஓய்வூதியத் திட்டத்துடனானதாகும்.

3.2 பொதுசேவைகள் ஆணைக்குழுவின் நிர்வாக ஒழுங்கு விதிகளிற்கும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவைக்கும், அரசாங்க நிதி ஒழுங்கு முறைகள்,அரசாங்கத்தின் ஏனைய ஒழுங்கு முறைகள், சுற்றறிக்கைகள் மற்றும் அறிவுறுத்தல்களுக்கும் அவற்றின் மீது அவ்வப்போது வெளியிடப்படும் திருத்தங்கள் மற்றும் திணைக்கள பணிப்புரைகளிற்கும் நீங்கள் கீழ்ப்படிதல் வேண்டும்.

04. பொதுவான தகைமைகள்:

4.1 இலங்கைபிரசையாக இருத்தல் வேண்டும்.

4.2 சிறந்த குணநலன்களையும் நல்ல உடல் நலத்தையும் கொண்டிருக்கவேண்டும்.

4.3 புதிதாகப் பணியமர்த்தப்படுகின்ற உத்தியோ கத்தர்கள் தீவின் எந்தப் பகுதியிலும் பணியாற்ற ஒப்புக்கொள்ள வேண்டும்.

4.4 விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினத்தன்று 18 வயதுக்கு குறையாமலும் 30 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

05. **கல்வித் தகைமைகள்:**

5.1 கல்விப் பொதுத்தராதர (சாதாரணதர) பரீட்சையில் ஒரே தடவையில்; சிங்களம் / தமிழ் /ஆங்கிலமொழி, விஞ்ஞானம், கணிதம் மற்றும் மேலுமொரு பாடத்தில் திறமைச் சித்தியுடன்; ஆறு (06) பாடங்களில்; தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

மற்றும்

5.2 இணைந்தகணிதம் மற்றும் பௌதிகவியல் ஆகிய இரண்டு பாடங்கள் உள்ளடங்கலாக விஞ்ஞானம் / கணிதம் /தொழில்நுட்பவியல்துறை சார்ந்த மூன்று (03) பாடங்களில் கல்விப் பொதுத்தராதர (உயர்தர) பரீட்சையில் ஒரே தடவையில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

06. **ஆட்சேர்ப்புக்கான தகைமைகள் :**

6.1 தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்/மின்னியல்), III ஆம் தரம்

மேலே 0.5 - இல் குறிப்பிடப்பட்டுள்ள கல்வித் தகைமைகளுக்கு மேலதிகமாக, பின்வரும் தொழில் சார் தகைமைகளில் ஒன்றைப் பூரணப்படுத்தி விண்ணப்பங்கள் சமர்ப்பிப்ப தற்கான இறுதித் தேதிக்குள் குறித்த சான்றிதழைப் பெற்றிருக்க வேண்டும்.

I. மொரட்டுவை பல்கலைக்கழகம் அல்லது அம்பாறை ஹார்டி நிறுவனம் வழங்கிய தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா,

அல்லது

II. தேசியதொழிற் பயிலுனர் மற்றும் தொழில் நுட்பப் பயிற்சி அதிகார சபையால் வழங்கப் படும் தேசியப் பொறியியல் டிப்ளோமா,

அல்லது

III. கல்விமற்றும் உயர் கல்வி அமைச்சினால் வழங்கப்படும் தேசிய உயர் பொறியியல் டிப்ளோமா,

அல்லது

IV. இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தால் வழங்கப்படும் தொழில்நுட்ப டிப்ளோமா,

அல்லது

V. இலங்கை பொறியாளர்கள் நிறுவனத்தால் நடத்தப்படும் பொறியியல் தேர்வின் பகுதி 1- ஐ வெற்றிகரமாக நிறைவு செய்திருத்தல்,

அல்லது

VI. தொழிற்துறையுடன் தொடர்புடைய தேசிய தொழிற்கல்வித் தகுதி (NVQ) 6 நிலை தகுதியை பூரணப்படுத்தியிருத்தல்,

அல்லது

VII. உயர்கல்வி அமைச்சு மற்றும் மேற்கூறிய தொழில்நுட்பச் சான்றிதழ்களை வழங்கிய நிறுவனங்களை கேட்டறிந்து அவற்றின் கருத்துக்களைப் பெற்ற பின்னர், மேற்கூறிய தொழில்நுட்பத் தகைமை களுக்கு எல்லாவகையிலும் சமமானவை என மூன்றாம் நிலைமற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவால் ஏற்றுக் கொள்ளப் படுகின்ற பிற தொழில்நுட்பத் தகுதிகளைப் பெற்றிருத்தல்.

6.2 **வடிவமைப்பாளர் (பயிலுனர் தரம்)**

மேலே0.5- இல் குறிப்பிடப்பட்டுள்ள கல்வித் தகைமைகளுக்கு மேலதிகமாக,தொழிற்துறையுடன் தொடர்புடைய பின்வரும் தொழில்சார் தகைமைகளில் ஒன்றை முடித்து,அதற்கான சான்றிதழை விண்ணப்பங்கள் பெறுவதற்கான இறுதித் தேதிக்குள் பெற்றிருக்க வேண்டும்.

I. மூன்றாம் நிலை மற்றும் தொழிசார் கல்வி ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு தொழில்நுட்பக் கல்லூரியில், பதவிக்குத் தொடர்புடைய துறையில் ஒருபாட நெறியை வெற்றிகரமாக முடித்து,தேசிய தொழில்நுட்பச் சான்றிதழைப் பெற்றிருத்தல்,

அல்லது

II. மூன்றாம் நிலை மற்றும் தொழிசார் கல்வி ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப் பட்ட ஒரு தொழில்நுட்பக் கல்லூரியில், வடி வமைப்பிலான ஓராண்டு முழு நேரப் பயிற்சிப் பாடநெறியை வெற்றிகரமாக முடித்து, அதற்கான சான்றிதழைப் பெற்றிருத்தல்.

அல்லது

III. மூன்றாம் நிலைமற்றும் தொழிசார் கல்வி ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு தொழில்நுட்பக் கல்லூரி பதவிக்குத் தொடர் புடைய துறையில் தொழிற்துறை தொழில் நுட்பவியலாளர்களுக்கான தேசிய சான்றிதழ் பாடநெறியை வெற்றிகரமாக முடித்து, அதற்கான சான்றிதழைப் பெற்றிருத்தல்.

அல்லது

IV. உயர்கல்வி அமைச்சு மற்றும் மேற்கூறிய தொழில்நுட்பச் சான்றிதழ்களை வழங்கிய நிறுவனங்களை கேட்டறிந்து அவற்றின் கருத்துக்களைப் பெற்றபின்னர், மேற்கூறிய தொழில்நுட்பத் தகைமைகளுக்கு எல்லா வகையிலும் சமமானவை என மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவால் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற பிற தொழில் நுட்பத் தகுதிகளைப் பெற்றிருத்தல்.

குறிப்பு :

மேலே 0.5 - இல் குறிப்பிடப்பட்டுள்ள கல்வித் தகைமைகள் மற்றும் 6.2 இல் குறிப்பிடப்பட்டுள்ள வடிவமைப்பாளர் – பயிலுனர் (ஓராண்டுப் பயிற்சி) தரத்திற்காக பரிந்துரைக்கப்பட்ட தொழில்சார் தகைமை களைக் கொண்ட விண்ணப்பதாரர்கள், பணிக்குரிய பாடத்திட்டத்தின்படி ஓராண்டு கோட்பாட்டு மற்றும் செய்முறைப் பயிற்சியை வெற்றிகரமாக முடித்து, அதற்கான தேர் விலும் தேர்ச்சி பெற்ற பின்னரே தரம் III சம்பள அளவுத்திட்டத்தின் ஆரம்பபடியில் பணியமர்த்தப்படுவார்கள்.

07. **ஆட்சேர்ப்புமுறை :**

7.1 எழுத்து மூலபோட்டிப் பரீட்சைக்கான நிபந்த னைகள்:

இதற்கென நடாத்தப்படும் எழுத்துத் தேர்வானது, கட்டிடங்கள் திணைக்களத்தின் சார்பாக கட்டி டங்கள் பணிப்பாளர் நாயகம் அவர்களால் அங்கீகரிக்கப்படுகின்ற ஓர் நிறுவனத்தால் கொழும்பில் நடத்தப்படும். அதற்கமைய சம்பந் தப்பட்ட நிறுவனத்தால் அறிவிக்கப்படும் ஒரு தேதியில் பரீட்சை நடைபெறும். அதற்கேற்ப விதிக்கப்படுகின்ற விதிகளையும் ஒழுங்கு முறைகளையும் பரீட்சார்த்திகள் கண்டிப்பாகப் பின்பற்ற வேண்டும். (விண்ணப்பப் படிவத்தில் நீங்கள் பூர்த்தி செய்துள்ள தகவல்கள் உண்மை யானவை எனக் கருதப்பட்டு அதற்கமைய தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்ப தாரர்கள் மட்டுமே தேர்வுக்கு அழைக்கப் படுவார்கள்.)

7.2 தகுதியுள்ள விண்ணப்பதாரர்கள் எழுத்துத் தேர்வுக்கு அழைக்கப்படுவதுடன் நேர்முகப் பரீட் சைக்குத் தோற்றுவதற்காக அவர்கள் ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்கும் குறைந்தபட்சம் 40% புள்ளி களைப் பெற்றிருக்க வேண்டும்.

பரீட்சையில் பெற்றுக் கொண்ட புள்ளிகளின் வரிசைப்படி விண்ணப்பதாரர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு பொருத்தமானவர்கள் அதன்படி தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.நேர்முகப் பரீட்சைக்கு புள்ளிகள் வழங்கப்படமாட்டாது என்பதுடன் தகுதிகள் மட்டுமே அதன்போது பரிசோதிக்கப்படும்.

7.3 எழுத்துத் தேர்வுதொடர்பான விவரங்கள் பின் வருமாறு.

7.3.1 **தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்/மின்னியல்) பதவிகளுக்கு :**

| *பாடங்கள்* | *காலம்* | *அதிகபட்ச புள்ளிகள்* | *தேர்ச்சிக்கான புள்ளிகள்* |
|---|---|---|---|
| 01. நுண்ணறிவுப் பரீட்சை | 2 மணித்தியாலம் | 100 | 40 |
| 02. விடயப் பரப்பு சார்ந்த தொழில்நுட்ப பரீட்சை | 2½ மணித்தியாலம் | 100 | 40 |

| *வினாத்தாளின் பெயர்* | *பாடத்திட்டம்* |
|---|---|
| 01. நுண்ணறிவு பரீட்சை | புரிந்து கொள்ளும் திறன், தர்க்கரீதியாக சிந்திக்கும் திறன், சரியான முடிவுகளை எடுக்கும் திறன், புள்ளிவிவர மற்றும் கணிதச் சிக்கல்களைத் தீரக்கும் திறன், மொழித்திறன் அட்டவணைகள், படங்கள், குறிப்புகள், வரைபடங்களைப் பயன்படுத்தல். |
| 02. விடயப் பரப்பு சார்ந்த தொழில்நுட்ப பரீட்சை | **தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்) பதவி**<br>பரிமாணங்கள், வடிவமைப்பு அறிவு, அத்திவாரங்கள், மண் வகைகள், கட்டுமானப் பொருட்கள், கட்டிடக் கட்டமைப்பு மறறும் இறுதி வேலைப்பாடுகள், கட்டிட வரைபடங்கள் மூலம் அளவீடுகளை எடுத்தல், மதிப்பீடுகளைத் தயாரித்தல், நீர்வழங்கல் மற்றும் வடிகால் அமைப்புகள் பற்றிய அறிவு. |
| | **தொழில்நுட்ப உத்தியோகத்தர் (மின்னியல்) பதவி**<br>கட்டிடங்களில் உள்ள மின்சுற்றுகள் பற்றிய அறிவு, பின்பற்றப்பட வேண்டிய விதிமுறைகள், வடிவமைப்புகள் பற்றிய அறிவு, மதிப்பீடுகள் மற்றும் மன்சுற்றுகளைத் தயாரித்தல் துல்லியத்தைச் சரிபார்த்தல் |

7.3.2 **வடிவமைப்பாளர் பதவி : பயிலுனர் தரத்திற்கானது.**

| *பாடங்கள்* | *காலம்* | *அதிகபட்ச புள்ளிகள்* | *தேர்ச்சிக்கான புள்ளிகள்* |
|---|---|---|---|
| 01. நுண்ணறிவுப் பரீட்சை | 1 மணித்தியாலம் | 100 | 40 |
| 02. விடயப் பரப்பு சார்ந்த தொழில்நுட்ப பரீட்சை | 3 மணித்தியாலம் | 100 | 40 |

| *வினாத்தாளின் பெயர்* | *பாடத்திட்டம்* |
|---|---|
| 01. நுண்ணறிவு பரீட்சை | புரிந்துகொள்ளும் திறன், தர்க்கரீதியாக சிந்திக்கும் திறன், சரியான முடிவுகளை எடுக்கும் திறன், புள்ளிவிவர மற்றும் கணிதச் சிக்கல்களைத் தீர்க்கும் திறன், மொழித்திறன், அட்டவணைகள், படங்கள், குறிப்புகள், வரைபடங்களைப் பயன்படுத்துதல். |
| 02. விடயப் பரப்பு சார்ந்த தொழில்நுட்ப பரீட்சை | உரிய அளவுத்திட்டங்களின் படி கட்டிட வரைபடங்களை வரைவ தற்கும், பொருத்தமான அளவில் குறிப்புகளைத் தயாரிப்பதற்கும் உள்ள திறன். |

7.4 எழுத்துமூல போட்டிப் பரீட்சைகள் சிங்களம்/தமிழ் மொழியில் மட்டுமே நடத்தப்படும்.

08. **ஆட்சேர்ப்பு** :

மேற்படி 05மற்றும் 06 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகளைக் கொண்டோரிடையே மேலே 07 இல் உள்ள எழுத்துத் தேர்வில் மிக உயர்ந்த புள்ளிகளைப் பெற்று தேர்ச்சி பெற்றுள்ள தகுதி பெற்ற விண்ணப்பதாரர்கள், காணப்படும் வெற்றிடங்களின் அடிப்படையில், இலங்கை தொழில்நுட்பசேவையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்) தரம் III/ (சிவில்) தொழில்நுட்ப உத்தியோகத்தர் (மின்னியல்) தரம் III மற்றும் வடிவமைப்பாளர் பயிலுனர் தரம் ஆகியவற்றில் நியமிக்கப்படுவார்கள்.

09. **சம்பள அளவுத்திட்டம்** :

பொது நிர்வாக சுற்றறிக்கை இல.10/2025 இலுள்ள MN-3-2025 கீழ்

தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்/மின்னியல்) தரம் III

ரூ. 52,250.00 - 10 x 800 - 11 x 1190 -10 x 1320- 10 x 1350- 100,040.00

(பொதுநிர்வாகசுற்றறிக்கை இல.10/2025 - இன் பட்டோலை II இன் படிசம்பளங்கள் வழங்கப்படும்)

வடிவமைப்பாளர்(பயிலுனர்தரம்;)

மாதாந்த உதவித் தொகை ரூ.43,274.00

(பொது நிர்வாக சுற்றறிக்கை இல.10/2025- இன் பட்டோலை VI இன் படி சம்பளங்கள் வழங்கப்படும்)

10. **பரீட்சைக் கட்டணம்:**

பரீட்சைக்கட்டணம் ரூ. 1,500ஆகும். விண்ணப்பதாரர்கள், திரும்பப் பெறமுடியாத ரூ. 1,50 0பரீட்சைக் கட்டணத்தை, நாட்டில் அமைந்துள்ள எந்தவொரு இலங்கை வங்கிக் கிளையிலும் “கட்டிடங்கள் திணைக்களத்தின் பத்தரமுல்ல இலங்கைவங்கிக் கிளையிலுள்ள கணக்கு இல. 7042710 இற்கு” வைப்புச் செய்தல் வேண்டும். அதற்கான பற்றுச்சீட்டின் மூலப் பிரதியை விண்ணப்பப் படிவத்தின் எண் 12-இன் கீழ் கழறாதவாறு ஒட்டுதல் வேண்டும்.

11. எவரேனும் விண்ணப்பதாரர் ஒருவரின் விண்ணப்பத்தில் தெரிவிக்கப்படும் எந்தவொரு தவறான தகவலும்,தேர்வுக்குப் பிறகு கண்டறியப்பட்டால்,அவரைத் தகுதியிழக்கச் செய்வதுடன்,பணியிலிருந்து நீக்கப்படுவதற்கும் வழிவகுக்கக் கூடும்.

12. **கையொப்பத்தை உறுதிப்படுத்துதல்:**

விண்ணப்பதாரர்கள், தங்களது மாதிரி கையொப்பத்தை அரசாங்க பாடசாலை அதிபர்/ஓய்வுபெற்ற அதிபர், பிரிவுக் கிராம உத்தியோகத்தர், பகிரங்க நொத்தாரிசு,முப்படைகளின் தலைமை உத்தியோகத்தர், அல்லது ரூபா 82,150.00 அல்லது அதற்குக் கூடிய மாதாந்த சம்பளத்தை பெறும் அரசாங்க அல்லது மாகாண அரசாங்கசேவையில் நிரந்தரப் பதவியை வகிக்கின்ற பதவிநிலை உத்தியோகத்தர் அல்லது பௌத்த விகாரையின் விகாராதிபதி, தலைமை மதகுரு அல்லது ஏனைய மத ஸ்தலமொன்றுக்குப் பொறுப்பாகவுள்ள மதகுரு ஆகியோரில் ஒருவரின் மூலம் உறுதிப்படுத்திச் சமர்ப்பிக்க வேண்டும்.

இந்த அறிவிப்பில் குறிப்பிடப்படாத எந்தவொரு விடயத்திலும்,கட்டிடங்கள் பணிப்பாளர் நாயகமே இறுதி முடிவெடுக்கும் அதிகாரத்தைக் கொண்டுள்ளார். மேலும் சிங்களம் /தமிழ் /ஆங்கில மொழிபெயர்ப்புகளுக்கு இடையே ஏதேனும் முரண்பாடு ஏற்பட்டால்,சிங்களமொழி மூலமான அறிவிப்பே செல்லுபடியாகும்.

பொறி.டபிள்யூ.ஆர்.என்.ஆர்.பிரேமச்சந்திர,
கட்டிடங்கள் பணிப்பாளர் நாயகம்.

கட்டிடங்கள் திணைக்களம்,
செத்சிரிபாய,
பத்தரமுல்ல.
2026 .07.30

மாதிரி விண்ணப்பப் படிவம் (மட்டுப்படுத்திய அடிப்படை)

அலுவலகப் பயன்பாட்டிற்கு

விண்ணப்பிக்கும் பதவி :
(பொருத்தமானபெட்டியில் ✓ எனக் குறியிடவும்)

(i) இலங்கைதொழில்நுட்ப சேவையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்), III ஆம் தரம் ☐

(ii) இலங்கைதொழில்நுட்பசேவையின் தொழில்நுட்பஉத்தியோகத்தர் (மின்னியல்), III ஆம் தரம் ☐

(iii) இலங்கை தொழில்நுட்ப சேவையின் வடிவமைப்பாளர் (பயிலுனர் தரம்) ☐

மொழி மூலம்

சிங்களம் - ☐

தமிழ் - (பொருத்தமானபெட்டியில் ✓ எனக் குறியிடவும்)

01. (i) முழுப் பெயர்:...........................................................................................................
...........................................................................................................

(ii) முதலெழுத்துக்களுடன் பெயர் (தமிழில்) :..........................................................................

(iii) முழுப் பெயர் (ஆங்கிலபெரிய எழுத்துக்களில்.) : ..........................................................................
..........................................................................

02. முகவரி மற்றும் தொலைபேசி இல. :

(i) அலுவலக முகவரி : ..........................................................................
..........................................................................

தொலைபேசி இல. : ..........................................................................

(ii) தனிப்பட்ட முகவரி : ..........................................................................
..........................................................................

(iii) தொலைபேசி இல.: .............................. (iv) கையடக்க தொலைபேசி இல. ....................

03. பால் :

ஆண்-

பெண்-

(பொருத்தமானபெட்டியில் ✓ எனக் குறியிடவும்)

04. தேசிய அடையாள அட்டை இல. : | | | | | | | | | | | | |

05. (i) பிறந்ததிகதி : ஆண்டு: | | | | | மாதம்: | | | திகதி: | | |

(ii) விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் இறுதித் தினத்தில் வயது :

வருடங்கள் : | | | மாதங்கள் : | | | நாட்கள் : | | |

06. விவாக நிலை :

விவாகமாகாதவர் ☐

விவாகமானவர் ☐

(பொருத்தமானபெட்டியில் ✓எனக் குறியிடவும்)

07. க.பொ.த. (சா/தர) பரீட்சைவிபரம் (முதலாம் தடவை) (தயவு செய்து சான்றுறுதிப்படுத்திய பிரதியை இணைக்கவும்)

(i) பரீட்சையில் சித்தியடைந்த வருடம் மற்றும் மாதம் : ......................................................

(ii) பரீட்சை சுட்டெண் : ..........................................................................................

| *பாடம்* | *சித்தி* | *பாடம்* | *சித்தி* |
|---|---|---|---|
| .......................................... | .......................... | .................................................. | .......................... |
| .......................................... | .......................... | .................................................. | .......................... |
| .......................................... | .......................... | .................................................. | .......................... |
| .......................................... | .......................... | .................................................. | .......................... |
| .......................................... | .......................... | .................................................. | .......................... |

08. க.பொ.த. (சா/தர) பரீட்சைவிபரம் (இரண்டாம் தடவை) (தயவு செய்து சான்றுறுதிப்படுத்திய பிரதியை இணைக்கவும்)

(i) பரீட்சையில் சித்தியடைந்த வருடம் மற்றும் மாதம் : ......................................................

(ii) பரீட்சை சுட்டெண் : ..........................................................................................

| *பாடம்* | *சித்தி* | *பாடம்* | *சித்தி* |
|---|---|---|---|
| .......................................... | .......................... | .................................................. | .......................... |
| .......................................... | .......................... | .................................................. | .......................... |
| .......................................... | .......................... | .................................................. | .......................... |
| .......................................... | .......................... | .................................................. | .......................... |
| .......................................... | .......................... | .................................................. | .......................... |

09. க.பொ.த. (உ/தர) பரீட்சைவிபரம் (தயவு செய்துசான்றுறுதிப்படுத்திய பிரதியை இணைக்கவும்)

(i) பரீட்சையில் சித்தியடைந்த வருடம் மற்றும் மாதம் : ......................................................

(ii) பரீட்சை சுட்டெண் : ..........................................................................................

| *பாடம்* | *சித்தி* | *பாடம்* | *சித்தி* |
|---|---|---|---|
| .......................................... | .......................... | .................................................. | .......................... |
| .......................................... | .......................... | .................................................. | .......................... |
| .......................................... | .......................... | .................................................. | .......................... |
| .......................................... | .......................... | .................................................. | .......................... |
| .......................................... | .......................... | .................................................. | .......................... |

10. ஏனைய தகைமைகள்:தொழில்நுட்பம்/தொழில்சார் (தயவு செய்து சான்றுறுதிப்படுத்திய பிரதியை இணைக்கவும்)

........................................................................................................................................

........................................................................................................................................

........................................................................................................................................

11. குறித்த தொழிதுறை சார்ந்த அனுபவம ;(தயவு செய்து சான்றுறுதிப்படுத்திய பிரதியை இணைக்கவும்)

........................................................................................................................................

........................................................................................................................................

........................................................................................................................................

மேற்படி 10,11 இலுள்ள தகைமைகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்களின் பிரதிகளை கண்டிப்பாக இணைத்தல் வேண்டும் என்பதைக் கவனத்திற் கொள்ளவும்.

12. பரீட்சைகட்டணம் :

ரூபா 1,500 பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டை கழறாதவாறு இங்கு ஒட்டவும் (பற்றுச்சீட்டின் பிரதியொன்றை கைவசம் வைத்திருத்தல் நல்லது)

13. விண்ணப்பதாரரின் கையொப்பததை உறுதிப்படுத்துதல்:

இந்தவிண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் நபரான ........................................................................................ (முழுப் பெயர்), என்பவர் எனக்கு தனிப்பட்ட முறையில் தெரிந்தவர் என்றும், அவருடைய கையொப்பம் ................................. அன்று என் முன்னிலையில் இடப்பட்டது என்றும் இதன்மூலம் சான்றுறுதிப்படுத்துகின்றேன் .

திகதி: ...........................  ...................................................................

சான்றுறுதிப்படுத்தும் உத்தியோகத்தரின் கையொப்பம்

சான்றுறுதிப்படுத்தும் உத்தியோகத்தரின் பெயர் :
பதவி :
முகவரி :
உத்தியோகபூர்வமுத்திரை :

14. விண்ணப்பதாரரின் சான்றிதழ்:

மேற் கண்ட தகவல்கள் எனது அறிவுக்கு எட்டியவரை உண்மையானவை மற்றும் சரியானவை என்று இதன் மூலம் சான்றளிக்கிறேன்.மேலும், இதில் உள்ள ஏதேனும் தகவல் தவறானது அல்லது பொய்யானது எனக் கண்டறியப்பட்டால்,பரீட்சைக்கு முன்னர் நான் தகுதி நீக்கம் செய்யப்படுவேன் என்பதையும்,நியமனத்திற்குப் பிறகு கண்டறியப்பட்டால் இழப்பீடு இன்றி பணிநீக்கத்திற்கு ஆளாவேன் என்பதையும் நான் அறிவேன்.

திகதி: ...........................  ................................................................

விண்ணப்பதாரரின் கையொப்பம்

அரசாங்க சேவையிலுள்ள விண்ணப்பதாரர்களுக்கு மாத்திரம்

இந்த விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கின்ற திரு./திருமதி/செல்வி....................................................................,அவர்கள் இந்த அமைச்சில் /திணைக்களத்தில்................................................................ என்ற பதவியில் நிரந்தர/தற்காலிக/அமைய அடிப்படையில் பணியாற்றி வருகிறார் என்றும்,அவர் இந்தப் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டால் அவரை சேவையிலிருந்து விடுவிக்க முடியும் /முடியாது என அறியத்தருகின்றேன்.

.............................................

நிறுவனத் தலைவரின் கையொப்பம்

பெயர் :
பதவி :
முகவரி :
உத்தியோகபூர்வ முத்திரை :

08-63

**வர்த்தக, வணிக, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு**

**அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களம்**

## அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களத்தின் இலங்கை தொழில்நுட்ப சேவையின் அளவீட்டு சேவைகள் மற்றும் உபகரணங்கள் பரிசோதகர் பதவியில் பயிற்சித் தரத்திற்கான ஆட்சேர்ப்புச் செய்யும் திறந்த போட்டிப் பரீட்சை - 2025

Open Competitive Examination for the Recruitment to the Trainee Grade of the Posts of Inspectors of Measurement Services and Devices of the Sri Lanka Technological Service of Department of Measurement Units, Standards and Services -2025

அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களத்தினால் இலங்கை தொழில்நுட்ப சேவையின் III தரத்தின் அளவீட்டு சேவைகள் மற்றும் உபகரணங்கள் பரிசோதகர் பதவிற்காக ஆட் சேர்ப்புச் செய்வதற்கு 2026, நவெம்பர் மாதம் நடத்தப்படவிருக்கும் திறந்த போட்டிப் பரீட்சைக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

- ❖ விண்ணப்பங்களை இலங்கை பரீட்சைத் திணைக் களத்தின் www.doenets.lk வலைத் தளத்தின் “Our Services” கீழ் காணப்படும் “Online Applications – Recruitment Exams/ E.B. Exams” இல் பிரசுரிக்கப்பட்டுள்ளதோடு விண்ணப்பங்களை நிகழ்நிலையில் (Online) மாத்திரமே சமர்ப்பிக்க முடியும். நிகழ்நிலை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் செயற்பாடு 2026, ஓகத்து மாதம் 10 ஆம் திகதி மு.ப. 9.00 மணிக்கு ஆரம்பிக்கப்படுவதோடு 2026, செத்தெம்பர் மாதம் 04 ஆம் திகதி பி.ப. 9.00 மணியுடன் முடிவடையும்.
- ❖ தற்போது அரசாங்க/மாகாண அரசாங்க சேவையில் பணிபுரியும் அதிகாரிகள் விண்ணப்பத்தின் ஒரு பிரதியை தமது தனிப்பட்ட கோவையில் சேர்ப்பதற்காக நிறுவனத் தலைவரிடம் ஒப்படைக்க வேண்டியதோடு, நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கும் போது நிறுவனத் தலைவரினால் உறுதி செய்யப்பட்ட விண்ணப்பத்தின் ஒரு பிரதியும், சேவையை உறுதிப்படுத்தும் கடிதம் ஒன்றும் சமர்ப்பிக்க வேண்டும்.
- ❖ விண்ணப்பம் சமர்ப்பிக்கும் இறுதி நாள் வரை தாமதிப்ப தனால் ஏற்படக்கூடிய எந்தவொரு பாதகமான நிலை மையையும் விண்ணப்பதாரியே பொறுப்பேற்க வேண்டும்.

**01. சேவையில் ஈடுபடுத்துவதற்கான நிபந்தனைகளும் சேவை நிபந்தனைகளும்:**

I. இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரியது மாகும். விதவை/ தபுதாரர் மற்றும் அநாதைப் பிள்ளைகளின் ஓய்வூதியத் திட்டத்திற்குப் பங்களிப்புச் செய்ய வேண்டும்.

II. இந்நியமனம் மூன்று வருட தகுதிகாண் காலத்தைக் கொண்டதாகும்.

III. அரச மொழிக் கொள்கைக்கேற்ப அரச நிர்வாகச் சுற்றறிக்கை 18/2020 இற்கு அமைவாக உரிய காலத்திற்குள் அரச மொழித் தேர்ச்சியைப் பூர்த்தி செய்ய வேண்டும்.

**02. சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் :**

பயிற்றுவிக்கும் தரம் :

முதலாம் ஆண்டு - ரூபா 43,274.00 மாதாந்தக் கொடுப் பனவு

2 ஆம் ஆண்டு - ரூபா 45,770.00 மாதாந்தக் கொடுப்பனவு

**பதவிக்குரிய மாதாந்தச் சம்பள அளவுத் திட்டம்** :

அளவீட்டு சேவைகள் மற்றும் உபகரணங்கள் பரிசோதகர் அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை இல. 10/2025 இன் கீழ் MN 3-2025 ரூபா 52,250 -10 x 800 - 11 x 1,190 -10 x 1,320 - 10 x 1,350 - ரூபா 100,040 ஆவதோடு அச் சுற்றறிக்கையின் அட்டவணை II இன் ஏற்பாடுகளுக்கமைய நியமனம் அமுலாகும் திகதி யிலிருந்து சம்பளம் வழங்கப்படும்.

பதவியின் III ஆம் தரத்திற்கு இணைக்கப்பட்டு 03 வருடங்களுக்குள் முதலாவது தடை தாண்டல் பரீட்சை யிலும், II ஆம் தரத்திற்கு நியமனம் பெற்று 03 வருடங் களுக்குள் II ஆம் தடை தாண்டல் பரீட்சையிலும், முதலாம் தரத்திற்கு நியமனம் பெற்று 05 ஆண்டுகளுக்குள் III ஆம் தடை தாண்டல் பரீட்சையிலும் சித்தியடைய வேண்டும்.

**03. கல்வித் தகைமைகள்:**

இணைந்த கணிதம், உயர் கணிதம், பௌதிகவியல், இரசாயனவியல், உயிரியல் மற்றும் விவசாயம் ஆகிய பாடங்களுள் பௌதிகவியல், இணைந்த கணிதம் அல்லது உயர் கணிதம் உள்ளடங்களாக க.பொ.த(உ.த) பரீட்சையில் ஒரே தடவையில் 03 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்

அல்லது

பழைய பாடத் திட்டத்தின் கீழ் பௌதிகவியல் மற்றும் பிரயோக கணிதம் அல்லது தூய கணிதம் ஆகிய பாடங்களில் ஒன்று உள்ளடங்களாக ஒரே தடவையில் 03 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

மற்றும்

மொழி, கணிதம், விஞ்ஞானம் மற்றும் ஏதேனும் இன்னொரு பாடத்தில் சிறப்பு சித்தியுடன் க.பொ.த. (சா.த) பரீட்சையில் ஒரே தடவையில் 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

04. **வேறு தகைமைகள்:**

I. இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.

II. விண்ணப்பம் கோரும் இறுதித் திகதிக்கு வயது 18-30 க்கு இடையிலாக இருத்தல் வேண்டும். (அதன் பிரகாரம் 2008.09.04 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பும் 1996.09.04 ஆந் திகதி அல்லது அதற்கு பின்பும் பிறந்தவர்கள் மாத்திரம் இதற்காக விண்ணப்பிக்கும் தகைமையைப் பெறுவார்கள். தற்போது அரச சேவையில் உள்ளோருக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.)

III. விண்ணப்பதாரர்கள் சிறந்த நன்னடத்தயையும் சிறந்த உடற்தகைமையையும் கொண்டிருத்தல் வேண்டும்.

05. **ஆட்சேர்ப்புச் செய்யும் முறை:**

மேற்படி தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள விண்ணப்ப தாரிகள் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படும் திறந்த போட்டிப் பரீட்சையில் சித்தியடைய வேண்டும்.

இரண்டாண்டு கால கோட்பாடு ரீதியான மற்றும் செயன்முறை பயிற்சியை வெற்றிகரமாக பூர்த்தி செய்ததன் பின், திணைக்களத் தலைவரினால் வழங்கப்படும் தேர்ச்சிச் சான்றிதழைப் பெறும் தகுதி அடைவதோடு ஆட்சேர்ப்புத் தரமான III ஆம் தரத்திற்கு இணைத்துக் கொள்ளப்படுவார்கள்.

பரீட்சையில் சித்தியடைவதற்காக ஒவ்வொரு பாடத்திலும் 40% அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற வேண்டும். அவ்வாறு புள்ளிகளைப் பெறும் விண்ணப்பதாரர்களின் மொத்தப் புள்ளிகளின் திறமை வரிசைப்படி ஆட்சேர்ப்புச் செய்யப்பட வேண்டிய எண்ணிக்கையில் இரு மடங்கான பரீட்சார்த்திகளின் பெறுபேறுப் பட்டியலொன்று அவர்களின் தகைமைகளைப் பரிசீலனை செய்வதற்காக அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளரிடம் வழங்கப்படும். நேர்முகப் பரீட்சையில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது. தகைமைகளைப் பூர்த்தி செய்த, இரண்டு பாடங்களிலும் உச்சப் புள்ளிகளைப் பெற்ற விண்ணப்ப தாரிகள் பயிற்சி வகுப்பில் சேர்த்துக் கொள்ளப் படுவார்கள். பரீட்சைக்குத் தோற்றிய அனைத்து விண் ணப்பதாரர்களின் பெறுபேறுகளை அவர்களுக்கு அறிவித்தல் அல்லது www.results.exams.gov.lk வலைத்தளத்தில் பிரசுரிக்கும் செயற்பாடு எனது இணக் கத்தின் பின்னர் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் செய்யப்படும். பரீட்சையை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பாக பரீட்சை ஆணையாளரின் முடிவு இறுதி முடிவாகும்.

06. இப் பரீட்சை பின்வரும் நகரங்களில் நடாத்தப்படும். விண்ணப்பதாரர்கள் தான் வசிக்கும் விலாசத்திற்கு அண்மித்த நகரத்தைத் தமது பரீட்சை நிலையமாகத் தெரிவு செய்ய வேண்டும். பரீட்சைக்குத் தோற்றும் நகரம் மற்றும் நகர எண்ணைக் கீழே தரப்பட்டுள்ள அட்டவணைக்கு அமைவாக விண்ணப்பத்தில் குறிப்பிட வேண்டும். விண்ணப்பித்த நகரத்தைப் பின்னர் மாற்று வதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

| *நகரம்* | *நகர எண்* |
|---|---|
| கொழும்பு | 01 |
| கண்டி | 02 |
| காலி | 03 |
| யாழ்ப்பாணம் | 04 |
| மட்டக்களப்பு | 05 |
| குருணாகல் | 06 |
| அனுராதபுரம் | 07 |
| பதுளை | 08 |
| இரத்தினபுரி | 09 |

உத்தேசிக்கப்பட்டுள்ள நகரங்கள் அனைத்திலும் அல்லது பெரும்பாலானவற்றில் பரீட்சை நிலையங்களை அமைப்பதற்குப் போதியளவிலான விண்ணப்பதாரர்கள் இல்லாத சந்தர்ப்பத்தில் பரீட்சையைக் கொழும்பில் மாத்திரம் நடாத்துவதற்குப் பரீட்சை ஆணையாளர் நாயகம் நடவடிக்கைகளை மேற்கொள்வார்.

07. **எழுத்துப் பரீட்சை:**

பரீட்சை சிங்களம்/தமிழ்/ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும். விண்ணப்பித்த மொழி மூலத்தைப் பின்னர் மாற்றுவதற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது. ஒரு விண்ணப்பதாரர் பரீட்சைக்குத் தோற்றும் அனைத்து வினாத்தாள்களுக்கும் விண்ணப்பித்த மொழி மூலமே விடையளிக்க வேண்டும்.

பரீட்சை இரண்டு வினாத்தாள்களைக் கொண்டதாகும்.

(1) **நுண்ணறிவுச் சோதனை :**

நேரம் 01 மணித்தியாலம். மொத்தப் புள்ளிகள் 100. விண்ணப்பதாரரின் பகுத்தறிவு, சிந்தனைத் திறன், பகுப்பாய்வுத் திறன் மற்றும் முடிவெடுக்கும் திறன் ஆகியவற்றை மதிப்பிடுவதற்காக 50 பல் தேர்வு மற்றும் குறுகிய வினாக்கள்; உள்ளதோடு அனைத்து வினாக்களுக்கும் விடயளிக்க வேண்டும்.

(2) **தொழில்நுட்ப வினாத்தாள் :**

நேரம் 02 மணித்தியாலம். மொத்தப் புள்ளிகள் 100. பௌதீக அளவீடுகளை மதிப்பிடல் மற்றும் செயன்முறைப் பௌதிகவியல் தொடர்பான அறிவைப் மதிப்பிடுவதற்கான ஒரு வினாத் தாளாகும். க.பொ.த உயர் தரத்திலான அறிவு இதற்குப் போதுமானதாகும். அனைத்து வினாக் களுக்கும் விடையளிக்க வேண்டும்.

08. **விண்ணப்பிக்கும் முறை :**

நிகழ்நிலை (online) பரீட்சை விண்ணப்பங்களை ஆங்கில மொழியில் மாத்திரம் பூர்த்தி செய்ய வேண்டும். விண்ணப்பதாரரால் நிகழ்நிலையில் சமர்ப்பிக்கப்பட்ட மென்பிரதி செல்லுபடியான விண்ணப்பமாக ஏற்றுக் கொள்ளப்பட்டது அல்லது ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்பது திணைக்களத்தினால் நீங்கள் இணயத்திற்குப் பிரவேசிக்கப் பயன்படுத்திய கையடக்கத் தொலை பேசிக்கு குறுஞ்செய்தி (SMS) மூலமாக அல்லது மின்னஞ்சல் (E-mail) விலாசத்திற்கு அறிவிக்கப்படும். நிகழ்நிலை விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்வதற்கு முன் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்காகத் தயாரிக்கப் பட்டுள்ள அறிவுறுத்தல் தாளைப் (Instructions) பதிவிறக்கம் செய்து கொள்ளவும். விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்யும் போது அவ் அறிவுரைகளைச் சரியாகப் பின்பற்றவும். பூரணமற்ற விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

09. பரீட்சைக் கட்டணம் ரூபா 600.00 ஆகும். பரீட்சைக் கட்டணம் செலுத்தும் போது நிகழ்நிலைத் தொகுதியில் வழங்கப்படும் பின்வரும் கட்டணம் செலுத்தும் முறைமைகளினூடாக மாத்திரம் செலுத்த வேண்டும்.

I. எந்தவொரு வங்கிக் கடனட்டையினூடாக (Any Bank Credit Card)
II. இணைய வழி செலுத்தும் வசதிகளைக் கொண்ட எந்தவொரு வங்கிப் பற்று அட்டையினூடாக (Any Bank Debit Card with the Facility of Internet Transactions)
III. இலங்கை வங்கி ஒன்லைன் வங்கி முறைமை யினூடாக (Online Banking Method of Bank of Ceylonn)
IV. எந்தவொரு இலங்கை வங்கிக் கிளையினூடாகவும் (Any Branch of the Bank of Ceylon)

குறிப்பு:

(அ) மேற்கூறப்பட்ட முறைகளில் பணம் செலுத்தும் விதம் குறித்த அறிவுரைகள், பரீட்சைக்கான தொழில்நுட்ப அறிவுரைகளின் கீழ் இணையத்தளத்தில் வெளி யிடப்பட்டுள்ளன.

(ஆ) கட்டணம் கிடைத்தமை தொடர்பாகக் குறுஞ் செய்தியூடாகவோ (SMS) மின்னஞ்சலூடாகவோ அறிவிக்கப்படும். மொத்தப் பரீட்சைக் கட்டணத் தையும் முழுமையாகச் செலுத்த வேண்டியதோடு கட்டணம் குறைவாகவோ அதிகமாகவோ செலுத்தப்பட்டுள்ள விண்ணப்பங்கள் நிராகரிக் கப்படும். மேற்கூறப்பட்ட கட்டணம் செலுத்தும் முறைமைகளினூடாகப் பரீட்சைக் கட்டணம் செலுத்தும் போது ஏற்படும் தவறுகள் தொடர்பாக இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் பொறுப் பேற்காது.

(இ) எந்தவொரு காரணத்தினாலும் பரீட்சைக்காகச் செலுத்தப்பட்ட கட்டணம் மீளச் செலுத்தப்படவோ அல்லது வேறொரு பரீட்சைக்கு மாற்றப்படவோ மாட்டாது.

10. வர்த்தமானி அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதி களைப் பூர்த்தி செய்தோர் மாத்திரமே விண்ணப்பித் துள்ளனர் என்ற அடிப்படையில் விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதி திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி அதற்குரிய பற்றுச்சீட்டுடன் முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரர்களுக்குப் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நிகழ்நிலையூடாகப் பரீட்சை அனுமதி அட்டைகள் வழங்கப்படும். பரீட்சை அனுமதி அட்டைகள் வெளியிடப்பட்டதும், இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் இணைய அறிவித்தல் அல்லது குறுஞ்செய்தி மூலம் பரீட்சார்த்திகளுக்கு அறிவிக்கப்படும். தமது பரீட்சை அனுமதியட்டை கிடைக்காத ஒரு விண்ணப்பதாரர் இருப்பின், அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் நிறுவனப் பரீட்சைக் கிளையில் அது குறித்து விசாரிக்க வேண்டும். அத்தகைய விசாரணைகளை மேற்கொள்ளும் போது, விண்ணப்பதாரர் தான் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரரின் முழுப் பெயர், தேசிய அடையாள அட்டை எண் மற்றும் முகவரி ஆகியவற்றைச் சரியாகக் குறிப்பிட்ட கோரிக்கைக் கடிதமொன்றை வலைத்தள அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள மின்னஞ்சல் முகவரிக்குச் சமர்ப்பித்து விசாரிப்பது மிகவும் பயனுள்ளதாக இருக்கும். அவ்வாறு விசாரிக்கும் போது பரீட்சைத் திணைக்களத்தால் கோரப்படும் ஏதேனும் தகவலை உறுதிப் படுத்துவதற்காகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தின் நிழல் பிரதியொன்றை உங்களிடம் வைத்திருப்பது பயனுள்ளதாக இருக்கும். அனுமதி அட்டையை சரிபார்த்த பிறகு, ஏதேனும் திருத்தங்கள் இருப்பின் முன்கூட்டியே பரீட்சைத் திணைக்களத்தைத் தொடர்பு கொண்டு, விண்ணப்பத்தின்படி திருத்தங்களைச் செய்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்தில் திருத்தங்களுக்காகச் செய்யப்படும் கோரிக்கைகள் பரிசீலிக்கப்பட மாட்டாது.

11. பரீட்சை அனுமதியட்டையில் விண்ணப்பதாரரின் கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். ஒரு அரச நிறுவனத்திலிருந்து விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர் தமது கையொப்பத்தை நிறுவனத் தலைவர் அல்லது அவரால் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள அதிகாரி ஒருவரினாலும், ஏனைய விண்ணப்பதாரர்கள் தமது கையொப்பத்தைத் தமது பிரிவின் கிராம உத்தியோகத்தர், அரச பாடசாலை அதிபர், சமாதான நீதவான், சத்திய ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு அல்லது ஒரு பௌத்த விகாரையின் தலைமைத் தேரர் அல்லது வேறு சமயத்தின் வணக்கஸ்தலத்திற்குப் பொறுப்பான தலைமை மதகுரு பதவியை வகிக்கும் ஒருவரினால் உறுதி செய்திருத்தல் வேண்டும்.

12. ஒரு விண்ணப்பதாரிக்குப் பரீட்சை அனுமதியட்டை அனுப்பப்படுதல் அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அல்லது பதவிக்காகத் தெரிவு செய்யப்படுவதற்குத் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளார் என்பதாக ஏற்றுக் கொண்டதாகக் கருதக் கூடாது.

13. பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தில் தான் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் பரீட்சை மேற்பார்வையாளர் திருப்தியடையும் விதத்தில் தமது அடையாளத்தை உறுதிப்படுத்த வேண்டும். அதற்காகப் பின்வரும் ஆவணங்கள் மாத்திரம் செல்லுபடியாகும்.

(I) ஆட்பதிவுத் திணைக்களத் தேசிய அடையாள அட்டை
(II) செல்லுபடியாகும் கடவுச் சீட்டு
(III) செல்லுபடியாகும் இலங்கைச் சாரதி அனுமதிப் பத்திரம்

மேலும், பரீட்சார்த்திகள் தமது அடையாளத்தை உறுதி செய்யக் கூடிய விதத்தில் முகத்தை மறைக்காமலும், இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள் அணியவில்லை என்பதை உறுதி செய்யக்கூடிய விதத்தில் காதுகளை மறைக்காமலும் பரீட்சை மண்டபத்திற்குள் நுழைய வேண்டும். தமது அடையாளத்தை உறுதி செய்ய மறுக்கும் எவரையும் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கக்கூடாது. மேலும், பரீட்சை மண்டபத் திற்குள் நுழைந்ததிலிருந்து பரீட்சை முடிந்து வெளி யேறும் வரை, உங்கள் முகத்தையோ அல்லது காது களையோ மறைக்காமல் இருக்க வேண்டும்.

14. பரீட்சை நடத்துதல் மற்றும் முடிவுகளை வெளியிடுதல் தொடர்பாகப் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் சட்டவிதிகளுக்குப் பரீட்சார்த்திகள் உட்பட்டவர்கள் ஆவார்கள். அவ்விதிகளை அவர் மீறினால், அவர் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் தண்டனைக்கு உள்ளாக நேரிடும்.

15. இவ் அறிவித்தலில் உள்ளடங்காத ஏதேனும் ஒரு விடயம் தொடர்பாக முடிவெடுக்கும் அதிகாரம் அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் பணிப்பாளர் வசமாவதோடு சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலமான அறிவித்தல்களில் ஏதேனும் இணக்கமற்ற தன்மை ஏற்பட்டால் அவ்வாறான சந்தர்ப்பங்களில் சிங்கள அறிவித்தல் ஏற்புடையதாகும்.

எஸ். என். அக்குரந்திலக்க
அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும்
சேவைகள் பணிப்பாளர்.

அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும்
சேவைகள் திணைக்களம்,
மாஹேனவத்த,
பிட்டிபன,
ஹோமாகம,
2026.07.24.

08-40

## திருத்தம்

## பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

## இலங்கை அரசாங்க நூலகர் சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2025

2025, நவெம்பர் மாதம் 07 ஆந் திகதிய 2462 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட "இலங்கை அரசாங்க நூலகர் சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2025" என்ற பரீட்சை அறிவித்தலில், 6.0 தகைமைகள் பத்தியின் 6.2 மற்றும் 6.3 இற்குரிய விடயங்கள் பின்வருமாறு திருத்தி யமைக்கப்படுகின்றது.

6.0 **தகைமைகள் :**

6.2 **தொழிற் தகைமைகள் :**

(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் நூலகவியல் தொடர்பான மூன் றாண்டுகால டிப்ளோமா பாடநெறியின் முதலாம் ஆண்டில் சிந்தியடைத்திருத்தல்.

அல்லது

(ஆ) இலங்கை நூலகர் சங்கத்தின் நூலகவியல் தொடர்பாக மூன்று (03) வருட கால பாடநெறியின் முதலாம் ஆண்டில் சித்தி யடைந்திருந்தல்

அல்லது

(இ) நூலகவியல் தொடர்பான மேலே குறிப்பிட்ட 6.2 (அ) அல்லது (ஆ) தகைமைகளுக்கு நிகரான அல்லது அதைவிட உயர் தகைமை யொன்றைப் பெற்றிருத்தல்.

(இந்தகைய தகைமைகள், குறித்த பல்கலைக் கழக அதிகாரிகள், இலங்கை நூலகச் சங்கம் மற்றும் சந்தர்ப்பத்துக்கேற்ப பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு ஆகியவற்றிடம் கலந்தாலோசித்து, இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப் படும்.)

6.3 **அனுபவம் :**

(அ) (i) அரசாங்க சேவையில் (மாகாண அரசாங்க சேவை அல்லாத) திணைக்கள ரீதியான ஆரம்ப மட்ட தொழிநுட்பம் சாராத (PL-01) சேவை வகுதியின் நூலக உதவி யாளர் / நூலக ஊழியர் பதவியில்

அல்லது

(ii) அரசாங்க சேவையில் (மாகாண அரசாங்க சேவை அல்லாத) நூலகத்துடன் தொடர்புடைய கடமைகளில் தீவிரமாகவும் தொடர்ச்சியாகவும் ஈடுபட்டுள்ளார் என நிறுவனத் தலைவரினால் முறைப்படி உறுதிப் படுத்தப்படக்கூடிய ஒரு பதவியில் அமர்த்தப் பட்டிருத்தல் (இவ்வாறு உறுதிப் படுத்தும்போது அது முறையான ஆவணங் களைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதுடன், சமீப காலத்தில் கோப்பிடப்பட்ட சேவைச் சான்றிதழ்கள் போன்றவை ஊடாக மேற்கொள்ளப்படும் உறுதிப்படுத்தல்கள் செல்லுபடியாகாது).

பதவியில் உறுதிப்பட்டிருத்தல் மற்றும் அப் பதவியில் 10 வருட முனைப்பான சேவைக் காலத்தை பூர்த்தி செய்திருத்தல்

(ஆ) மேற்கூறப்பட்ட 6.2 இன் (அ) (ஆ) மற்றும் (இ) இல் குறிப்பிடப்பட்டுள்ள தொழிற்தகைமைகளில் ஒன்றையேனும் பூர்த்தி செய்திருப்பின், அவ் விண்ணப்பதாரிகள் மேலே 6.3 (அ) இல் (i) அல்லது (ii) இல் குறிப்பிடப்பட்ட பதவியில் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் மற்றும் விண்ணப்பம் கோரும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள திகதியன்று அப்பதவியில் முனைப்புடனான ஐந்து (05) வருட சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

02. விண்ணப்பதாரிகள் பதவிக்குரித்தான அனைத்து தகைமைகளையும் 2025.12.08 ஆந் திகதிக்கு முழுமைப் படுத்தியிருத்தல் வேண்டும்.

03. அவ்வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய ஏற்பாடுகள் அவ்வாறே வலுவிலிருக்கும் என்பதோடு இத்திருத்தங்கள் காரணமாக விண்ணப் பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி 2026.08.28 வரை நீடிப்புச் செய்யப்பட்டுள்ளது. ஏற்கனவே விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரிகள் இத்திருத்தம் காரணமாக மீண்டும் ஒரு முறை விண்ணப்பிக்கத் தேவையில்லை என அறியத்தரப்படுகின்றது.

என்.யூ. நிஷான் மெண்டிஸ்,
இணைந்த சேவைகள் பணிப்பாளர்
நாயகம்.

பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும்
உள்ளூராட்சி அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07,
2026, யூலை மாதம் 22.

08-95

## திருத்தம்

## அரசாங்க சேவை ஆணைக்குழு

## தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் நிறைவேற்று சேவை வகுதி III ஆம் தரத்திற்கு (புள்ளிவிபரவியலாளர் பதவிக்கு) ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2026

1. இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2026.07.10 ஆந் திகதிய 2497 ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் நிறைவேற்று சேவை வகுதி III ஆம் தரத்திற்கு (புள்ளிவிபரவியலாளர் பதவிக்கு) ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2026 என்ற தலைப்பிலான அறிவித்தலின் தமிழ் மொழி மூல அறிவித்தலில் பந்தி 02 மற்றும் இலக்கம் 3 இன் கீழ் கல்வித் தகைமைகள் என்ற உப பிரிவுக்குப் பதிலாக பின்வரும் பந்திகளை பதிலீடு செய்வதன் மூலம் அவ் அறிவித்தல் திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்று இத்தால் அறிவிக்கப்படுகிறது.

I. **பந்தி 02**

இந்தத் திணைக்களத்தின் நிறைவேற்றுச் சேவை வகுதிக்கான ஆட்சேர்ப்பு நடைமுறைகளின் ஏற்பாடு களுக்கு அமைவாக 28 வெற்றிடங்களை நிரப்பு வதற்காக இந்த ஆட்சேர்ப்பு நடைபெறுவதுடன் அவை அனைத்தையும் அல்லது சிலவற்றை மட்டும் நிரப்புவது அல்லது எதையும் நிரப்பாதிருத்தல் தொடர்பான இறுதி தீர்மானம் அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கே உரியது. நியமனம் நடைமுறைக்கு வரும் திகதியும் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும். இந்தப் பரீட்சை 2026 ஒற்றோபர் மாதம் கொழும்பில் மட்டும் நடத்தப்படும்.

II. **உப பிரிவு இலக்கம் 3. கல்வித் தகைமைகள்**

(அ) புள்ளிவிபரம் கணிதம், பொருளாதாரம், மக்களியல், சனத்தொகை கற்கை, கணினி, விஞ்ஞானம், தகவல் தொழில்நுட்பம், புவியியல், சமூகவியல் அல்லது வரைபடவியல் ஆகிய பாடங்களில் குறைந்தது ஒரு பாடம் பிரதான பாடமாக உள்ளது.

(a) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட வெளிநாட்டு அல்லது அரசாங்க பல்கலைக்கழகத்தில் பெற்ற அல்லது

(b) இலங்கையில் பாராளுமன்றச் சட்டத்தால் நிறுவப்பட்ட பல்கலைக்கழகத்தில் பெற்ற அல்லது

(c) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகச் சட்டத்தின் 254 பிரிவின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட வகுப்பு தரத்துடன் கூடிய சிறப்பு பட்டப்படிப்பு

அல்லது

(ஆ) புள்ளிவிபரம் கணிதம், பொருளியல், மக்களியல் சனத்தொகை கற்கை, கணினி விஞ்ஞானம், தகவல் தொழில்நுட்பம், புவியியல், சமூகவியல் அல்லது வரைபடவியல் ஆகிய பாடங்களில் குறைந்தது ஒரு பாடம் பிரதான பாடமாக உள்ள,

(a) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட வெளிநாட்டு அல்லது அரசாங்க பல்கலைக்கழகத்தில் பெற்ற அல்லது

(b) இலங்கையில் பாராளுமன்றச் சட்டத்தால் நிறுவப்பட்ட பல்கலைக்கழகத்தில் பெற்ற அல்லது

(c) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல் கலைக்கழகச் சட்டத்தின் 25A பிரிவின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட

முதலாம் அல்லது இரண்டாம் வகுப்பு (உயர் பிரிவு) தரத்துடன் கூடிய பொதுப் பட்டப்படிப்பு பெற்றிருக்க வேண்டும்.

2. 2026.07.10 ஆந் திகதி வெளியிடப்பட்ட மூல விண்ணப் பங்கள் கோரல் தொடர்பான வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய அனைத்து ஏற்பாடுகளும் அவ்வாறே நடைமுறையில் இருக்கும் என்பதுடன் விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி 2026.08.24 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

3. இப்போட்டிப் பரீட்சைக்காக ஏற்கனவே விண்ணப்பித் துள்ள விண்ணப்பதாரிகள் மீண்டும் விண்ணப்பிக்க வேண்டியதில்லை.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் உத்தரவின்படி,

செயலாளர்.

நிதி. திட்டமிடல் மற்றும் பொருளாதார
அபிவிருத்தி அமைச்சு,
2026.

08-61

## திருத்தம்

## நீர்ப்பாசனத் திணைக்களம்

## விவசாய, கால்நடைகள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் கீழுள்ள நீர்ப்பாசனத் திணைக்களத்தில் பொறியியல் உதவியாளர் சேவையின் III ஆம் தர பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்காக நடாத்தப்படும் திறந்த போட்டிப் பரீட்சை 2026

2026, யூன் மாதம் 19 ஆம் திகதிய 2494 ஆம் இலக்க வர்த்தமானி பத்திரத்தில் பிரசுரிக்கப்பட்ட மேற்குறிப்பிட்ட அறிவித்தல் கீழ் உள்ளவாறு திருத்தப்படுகின்றது.

❖ விண்ணப்பம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் www.donets.lk என்ற இணையத்தளத்தில் "Our Services" என்பதன் கீழுள்ள "Online Applications Recruitment Exams/E.B. Exams" இனூடாக பிரசுரிக் கப்பட்டுள்ளதோடு, விண்ணப்பங்களை இணையவழி முறைமை (Online) ஊடாக மாத்திரம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். இணையவழி முறைமை மூலம் விண்ணப் பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுவது 2026, யூன் மாதம் 22 ஆந் திகதி மு.ப 9.00 மணிக்கு திறக்கப்பட்டு 2026, செத்தெம்பர் மாதம் 07ஆந் திகதி இரவு 9.00 மணிக்கு முடிவடையும்.

❖ 6.0 வயதெல்லை :

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதிக்கு வயது 18 வயதுக்குக் குறையாமலும் 34 வயதுக்கு மேற்படாமலும் இருக்கவேண்டும்.

மேலும் 2026.07.20 ஆம் திகதிக்கு பதவிக்கு ஆட்சேர்ப்பதற்குத் தேவையான சகல தகைமைகளும் மற்றும் நிபந்தனைகளும் சகல விதத்திலும் பூரணப் படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள விடயம் தவிர்ந்த 2026, யூன் மாதம் 19 ஆம் திகதிய 2494 ஆம் இலக்க வர்த்தமானி பத்திரத்தில் பிரசுரிக்கப்பட்ட மேற்குறிப்பிட்ட ஏனைய விடயங்கள் மாற்றமின்றி காணப்படும்.

கலாநிதி (எந்திரி) கித்சிறி வெளிகேபொலகே,
நீர்ப்பாசன பணிப்பாளர் நாயகம்.

நீர்ப்பாசனத் திணைக்களம்,
கொழும்பு 07,
2026, ஓகத்து.

08-98

## கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு

## மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்ப சேவைகள் (சிவில்) வகுதியைச் சேர்ந்த தொழில்நுட்ப உத்தியோகத்தர் (தரம் III) மற்றும் கட்டிட மேற்பார்வையாளர் (தரம் III) ஆகிய பதவிகளுக்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2026

கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்ப சேவைகள் வகுதியைச் சேர்ந்த தொழில்நுட்ப உத்தியோகத்தர் (தரம் III) மற்றும் கட்டிட மேற்பார்வையாளர் (தரம் III) ஆகிய பதவிகளிலுள்ள வெற்றிடங்களை நிரப்பும் பொருட்டு பின்வரும் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பப்படிவம், இந்த அறிவித்தலின் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு அமைவாக, A4 அளவுத்தாளின் (21cm x 29cm) இரு பக்கங்களையும் பயன்படுத்தி தயாரிக்கப்பட்டு, விண்ணப்ப தாரரினால் அவரின் சொந்தக் கையெழுத்திலேயே நிரப்பப்பட வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக தயாரிக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவம் 2026.09.01 ஆம் திகதி அன்றோ அல்லது அதற்கு முன்னரோ "செயலாளர், கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு, இல. 80/5, கொவிஜன மந்திரய, ரஜமல்வத்த வீதி, பத்தரமுல்ல" என்ற முகவரிக்கு, பதிவுத் தபாலில் மாத்திரமே அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பங்கள் அடங்கிய கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்ப சேவைகள் வகுதியைச் சேர்ந்த தொழில்நுட்ப உத்தியோகத்தர் (தரம் III) மற்றும் கட்டிட மேற்பார்வையாளர் (தரம் III) ஆகிய பதவிகளுக்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2026" எனக் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும். இந்தப் பரீட்சை கொழும்பில் நடத்தப்படும்.

அரசாங்க சேவையில் உள்ள விண்ணப்பதாரர்கள் தங்களது விண்ணப்பங்களை அந்தந்த நிறுவனத் தலைவர்களின் ஊடாக சமர்ப்பிக்க வேண்டும் என்பதுடன், தாமதித்து கிடைக்கும் மற்றும் பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பதாரர் தான் பரீட்சைக்குத் தோற்ற உத்தேசித்துள்ள மொழி மூலத்திலேயே விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்ய வேண்டும்.

1. **தொழில் விபரம் :**

   நிறுவனத்தின் குறிக்கோள்களை அடைந்துகொள்வதற்கான பணிகளில், நிறைவேற்று அதிகார மட்டங்களின் கடமைகளுக்குத் துணையாக அமையும் வகையில், நிறைவேற்று அதிகாரிகளினால் வரையறுக்கப்பட்டு ஒதுக்கப்படும் ஆளணி முகாமைத்துவம், நிதிப் பொறுப்பு மற்றும் நிதி முகாமைத்துவம், மேற்பார்வை மற்றும் செயற்பாடுகள் முதலிய பணிகளை உள்ளடக்கிய பன்முகத் தன்மை (Multi-Functional) கொண்ட கடமைகளை ஆற்றுகின்ற ஒரு சேவை வகையாகும்.

2. **சேவையில் ஈடுபடுத்துவது தொடர்பான நிபந்தனைகள் :**

   2.1 இப்பதவி நிரந்தரமானது. ஓய்வூதியத் திட்டம் தொடர்பாக அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் எடுக்கப்படும் கொள்கைத் தீர்மானங்களுக்கு அமைவானதாக இருத்தல் வேண்டும். விதவை/தபுதாரர் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்குப் பங்களிப்பு செய்தல் வேண்டும். அரசாங்கத்தினால் அவ்வப்போது தீர்மானிக்கப்படும் விதத்தில் நீங்கள் இதற்கான பங்களிப்புத் தொகையை செலுத்த வேண்டும்.

   2.2 தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள், தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளுக்கும், நிதிப் பிரமாணங்களுக்கும், அரசாங்க சேவை நியமனங்கள் தொடர்பாக 2022.12.14 ஆம் திகதிய 2310/29 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமான பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறைகளுக்கும், அரசாங்கத்தினால் அவ்வப் போது வெளியிடப்படும் ஏனைய ஒழுங்கு விதி களுக்கும் மற்றும் கட்டளைகளுக்கும் கட்டுப்பட வேண்டும்.

**தொழில்நுட்ப உத்தியோகத்தர் (தரம் III) பதவி: (பதவிகளின் எண்ணிக்கை 01)**

1. **ஆட்சேர்ப்பு தகைமைகள்:**

   1.1 **பொதுவான தகைமைகள்**

   I.1.1. இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

   I.1.2. விண்ணப்பதாரர்கள் நல்லொழுக்கமும் மற்றும் சிறந்த தேகாரோக்கியமும் உடையவராக இருத்தல் வேண்டும்.

   I.1.3. ஆட்சேர்த்துக்கொள்ளப்படும் உத்தியோகத்தர்கள் தீவின் எப்பகுதியிலும் பணியாற்ற விருப்பமுடையவராக இருத்தல் வேண்டும்.

   I.1.4. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு 18 வயதுக்குக் குறையாதவராகவும் மற்றும் 30 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

   I.1.5. ஏதேனும் ஒரு மதத்தின் அல்லது மதப் பிரிவின் கீழ் துறவறம் பூண்டுள்ள எவரும் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமையற்றவராவர்.

I.1.6. சேவைக்கு ஆட்சேர்த்துக் சேர்த்துக்கொள் வதற்கான போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தேவையான தகைமைகள் அனைத்தும், விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

1.2 **கல்வித் தகைமைகள் :**

- சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழி, கணிதம், விஞ்ஞானம் மற்றும் ஏதேனும் ஒரு பாடத்திற்கு திறமைச்சித்தி உட்பட, ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

அத்துடன்

- துறை சார்ந்த இரண்டு பாடங்களுடன், விஞ்ஞானப் பாடப்பிரிவில் மூன்று பாடங்களில் கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர) பரீட்சையில் (பொதுப் பரீட்சை நீங்கலாக) ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் வேண்டும் (பழைய பாடத்திட்டத்தின் கீழ் ஒரே அமர்வில் 03 பாடங்களில் சித்தியடைந்திருப்பது போதுமானதாகும்).

1.3 **தொழில்சார் தகைமைகள் :**

மேற்குறிப்பிட்ட கல்வித் தகைமைகளுடன், விண்ணப்பதாரர்கள் பின்வரும் தொழில்சார் தகைமைகளில் ஏதேனும் ஒன்றைப் பெற்றிருத்தல் வேண்டும்.

- மொரட்டுவப் பல்கலைக்கழகத்தால் அல்லது அம்பாறை ஹாடி கல்லூரியால் வழங்கப்படும் தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா

அல்லது

- தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபையினால் வழங்கப்படும் தேசிய பொறியியல் தொழில்நுட்பவியல் டிப்ளோமா

அல்லது

- கல்வி மற்றும் உயர்கல்வி அமைச்சினால் வழங்கப்படும் தேசிய உயர் பொறியியல் டிப்ளோமா

அல்லது

- இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் தொழில்நுட்ப டிப்ளோமா

அல்லது

- தொழில் துறை தொடர்பான தேசிய தொழில் தகுதி (NVQ) மட்டம் 6 தகைமையைப் பூர்த்தி செய்திருத்தல்

அல்லது

- உயர்கல்வி அமைச்சினதும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள தொழில்நுட்ப சான்றிதழ்களை வழங்கும் நிறுவனங்களினதும் ஆலோசனைகளையும் கருத்துகளையும் பெற்றதன் பின்னர், மேற்குறிப்பிட்ட தொழில்நுட்பத் தகைமைகளுக்கு அனைத்து விதங்களிலும் இணையானது என மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட வேறு ஏதேனும் ஒரு தொழில்நுட்பத் தகைமையைப் பெற்றிருத்தல்.

2. **ஆட்சேர்ப்பு முறை :**

2.1 எழுத்துமூலப் போட்டிப் பரீட்சை மற்றும் பொது நேர்முகப் பரீட்சை ஆகியவற்றில் பெற்ற பெறுபேறுகளின் அடிப்படையில் ஆட்சேர்த்துக் கொள்ளப்படும். எழுத்துமூலப் பரீட்சையில் சித்தியடைந்த விண்ணப்பதாரர்களின் மொத்தப் புள்ளிகளின் திறமை ஒழுங்கிக்கு அமைய, ஆட்சேர்த்துக்கொள்ளப்படுவதற்கு எதிர்பார்க்கப்படும் எண்ணிக்கைக்கு சமமான எண்ணிக்கையிலானவர்கள் பொது நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்பட்டு, தகுதியானவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

2.2 **எழுத்துமூலப் பரீட்சை :**

இந்தப் பரீட்சை ஒரு (01) வினாத்தாளைக் கொண்டிருக்கும்.

| *பாடம்* | *காலம்* | *அதிக பட்சப் புள்ளி களின் எண் ணிக்கை* | *சித்தி யடை வதற்கு தேவை யான புள்ளி களின் எண் ணிக்கை* |
|---|---|---|---|
| 1. பொதுப் பரீட்சை (விடயமைய தொழில் நுட்பப் பரீட்சை) | 3 மணித் தியாலம் | 100 | 40 |

2.3 **எழுத்துமூலப் பரீட்சையின் பாடவிதானம்** :

| *வினாத்தாள்* | *பாடவிதானம்* |
|---|---|
| விடய மைய தொழில்நுட்பப் பரீட்சை | பொருத்தமான அளவீடுகளுக்கு அமைய கட்டிட வரைபடங்களை வரைதல் மற்றும் குறிப்புகளைத் தயாரிக்கும் திறன், கட்டிடங்களுக்குப் பயன்படுத்தப்படும் குளிரூட்டிகளின் வகை மற்றும் அலுவலக உபகரணங்களின் வகை முதலியன பற்றிய அறிவு |

3. **மாதாந்த சம்பள அளவுத்திட்டம் அல்லது கொடுப்பனவுகள்**

2025.03.25 ஆம் திகதிய 10/2025 ஆம் இலக்கப் பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் அட்டவணை II இன்படி, தொழில்நுட்ப உத்தியோகத்தர் தரம் III பதவிக்குரிய மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூ. 52,250 – 800 x 10 -1,190 x 11 -1,320 x 10 - 1,350 x10 - ரூ. 100,040 (MN-3 2025) ஆகும்.

இதற்கு மேலதிகமாக, அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு அரசாங்கத்தினால் அவ்வப்போது வழங்கப்படும் ஏனைய கொடுப்பனவுகளும் இப்பதவியை வகிப்பவர்களுக்கு உரித்தாகும்.

**கட்டிட மேற்பார்வையாளர் தரம் III பதவி: (பதவிகளின் எண்ணிக்கை 01)**

1. **ஆட்சேர்ப்புத் தகைமைகள்:**

1.1 **பொதுவான தகைமைகள்:**

1.1.1 இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

1.1.2 விண்ணப்பதாரர்கள் நல்லொழுக்கமும் சிறந்த தேகாரோக்கியமும் உடையவராக இருத்தல் வேண்டும்.

1.1.3 ஆட்சேர்த்துக்கொள்ளப்படும் உத்தியோகத்தர்கள் தீவின் எப்பகுதியிலும் பணியாற்ற விருப்பமுடையவராக இருத்தல் வேண்டும்.

1.1.4 விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு 18 வயதுக்குக் குறையாதவராகவும் மற்றும் 30 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

1.1.5 ஏதேனும் ஒரு மதத்தின் அல்லது மதப் பிரிவின் கீழ் துறவறம் பூண்டுள்ள எவரும் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமை பெறமாட்டார்கள்.

1.1.6 சேவைக்கு ஆட்சேர்த்துக்சேர்த்துக்கொள்வதற்கான போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத்தேவையானதகைமைகள் அனைத்தும், விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

1.2 **கல்வித் தகைமைகள் :**

- சிங்களம்/ தமிழ்/ ஆங்கில மொழி, கணிதம், விஞ்ஞானம் மற்றும் ஏதேனும் ஒரு பாடத்திற்கு திறமைச்சித்தி உட்பட, ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

அத்துடன்

- துறை சார்ந்த இரண்டு பாடங்களுடன், விஞ்ஞானப் பாடப்பிரிவில் மூன்று பாடங்களில் கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர) பரீட்சையில் (பொதுப் பரீட்சை நீங்கலாக) ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் வேண்டும் (பழைய பாடத்திட்டத்தின் கீழ் ஒரே அமர்வில் 03 பாடங்களில் சித்தியடைந்திருப்பது போதுமானதாகும்).

1.3 **தொழில்சார் தகைமைகள் :**

- தொழில் துறை தொடர்பான தேசிய தொழில் தகுதி (NVQ) மட்டம் 6 தகைமையைப் பூர்த்தி செய்திருத்தல்

2. **ஆட்சேர்ப்பு முறை** :

2.1 எழுத்துமூலப் போட்டிப் பரீட்சை மற்றும் பொது நேர்முகப் பரீட்சை ஆகியவற்றில் பெற்ற பெறுபேறுகளின் அடிப்படையில் ஆட்சேர்த்துக் கொள்ளப்படும். எழுத்துமூலப் பரீட்சையில் சித்தியடைந்த விண்ணப்பதாரர்களின் மொத்தப் புள்ளிகளின் திறமை ஒழுங்கிற்கு அமைய, ஆட்சேர்த்துக்கொள்ளப்படுவதற்கு எதிர்பார்க்கப் படும் எண்ணிக்கைக்கு சமமான எண்ணிக்கையிலானவர்கள் பொது நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்பட்டு, தகுதியானவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

2.2 **எழுத்துமூலப் பரீட்சை :**

இந்தப் பரீட்சை ஒரு (01) வினாத்தாளைக் கொண்டிருக்கும்.

| *பாடம்* | *காலம்* | *அதிகபட்சப் புள்ளிகளின் எண்ணிக்கை* | *சித்தியடைவதற்கு தேவையான புள்ளிகளின் எண்ணிக்கை* |
|---|---|---|---|
| 1. பொதுப் பரீட்சை<br>(விடய மைய தொழில்நுட்பப் பரீட்சை) | 3<br>மணித்தியாலம் | 100 | 40 |

2.3 **எழுத்துமூலப் பரீட்சை :**

| *வினாத்தாள்* | *பாடவிதானம்* |
|---|---|
| விடய மைய<br>தொழில்நுட்பப் பரீட்சை | பொருத்தமான அளவீடுகளுக்கு அமைய கட்டிட வரைபடங்களை வரைதல் மற்றும் குறிப்புகளைத் தயாரிக்கும் திறன், கட்டிடங்களின் மின்சுற்றுகள் பற்றிய அறிவு, அது தொடர்பாகப் பின்பற்ற வேண்டிய விதிமுறைகள், திட்டங்கள் பற்றிய அறிவு மற்றும் மதிப்பீடுகளைத் தயாரித்தல் |

3. **மாதாந்த சம்பள அளவுத்திட்டம் அல்லது கொடுப்பனவுகள் :**

2025.03.25 ஆம் திகதிய 10/2025 ஆம் இலக்கப் பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் அட்டவணை II இன்படி, தொழில்நுட்ப உத்தியோகத்தர் தரம் III பதவிக்குரிய மாதாந்த சம்பள அளவுத்திட்டம்ரூ. 52,250 – 800 x 10 -1,190 x 11 -1,320 x 10 - 1,350 x10 - ரூ. 100,040 (MN-3 2025) ஆகும்.

இதற்கு மேலதிகமாக, அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு அரசாங்கத்தினால் அவ்வப்போது வழங்கப்படும் ஏனைய கொடுப்பனவுகளும் இப்பதவியை வகிப்பவர்களுக்கு உரித்தாகும்.

4. **வினைத்திறன் தடைகாண் பரீட்சை :**

இலங்கைத் தொழில்நுட்பச் சேவைப் பிரமாணக்குறிப்பின் பிரகாரம் நடத்தப்படும்.

5. **மொழித் திறன் :**

இலங்கைத் தொழில்நுட்பச் சேவைப் பிரமாணக்குறிப்புக்கு அமைவாக இருக்கும்.

6. **பதவியுயர்வு :**

இலங்கைத் தொழில்நுட்பச் சேவைப் பிரமாணக்குறிப்புக்கு அமைவாக இருக்கும்.

7. **பரீட்சைக் கட்டணம் :**

7.1. பரீட்சைக் கட்டணம் ரூ. 1000.00. பரீட்சைக் கட்டணத்தை செலுத்தும் போது, கீழ்காணும் கட்டணங்கள் செலுத்தும் முறையியலின் கீழ், கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சினால், பத்தரமுல்ல இலங்கை வங்கிக் கிளையில் பேணப்படுகின்ற 7040472 ஆம் இலக்க வங்கிக் கணக்கு, அது வரவுவைக்கப்படுதல் வேண்டும். கட்டணத்திற்கான பற்றுச்சீட்டு விண்ணப்பத்தின் உரிய இடத்தில் கழறாதவாறு ஒட்டப்படுதல் வேண்டும். எதிர்கால பயன் நிமித்தம் அந்தப் பற்றுச்சீட்டின் ஒரு பிரதியை வைத்துக்கொள்வது சிறந்ததாகும்.

i. ஏதேனும் ஓர் இலங்கை வங்கி (BOC) கிளை மூலமாக (Any Branch of the Bank of Ceylon).

ii. இலங்கை வங்கி ஒன்லைன் வங்கி முறைமை மூலமாக (Online Banking Method of Bank of Ceylon).

iii. இணையவழி கட்டணச் செலுத்துகை வசதிகளைக் கொண்ட ஏதேனும் ஒரு வங்கி பற்று அட்டை (Any Bank debit Card with the Facility of Internet transaction) மூலமாக.

7.2. பரீட்சைக்காகச் செலுத்தப்பட்ட பணம் எக்காரணம் கொண்டும் மீளளிக்கப்படவோ அல்லது வேறு ஒரு பரீட்சைக்காக மாற்றப்படவோ மாட்டாது.

8. **பரீட்சார்த்திகளின் அடையாளம் :**

பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தினுள் தாம் தோற்றுகின்ற பாடத்திற்கு/பாடங்களுக்காக பரீட்சை மண்டப மேற்பார்வை அதிகாரியின் திருப்திக்கு அமையும் வகையில் தங்களது அடையாளத்தை உறுதிப்படுத்த வேண்டும். அதற்காக, பின்வரும் ஆவணங்கள் மாத்திரமே செல்லுபடியாகும் ஆவணங்களாகக் கருதப்படும்.

i. தேசிய அடையாள அட்டை
ii. செல்லுபடியாகும் கடவுச்சீட்டு
iii. செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்

9. **பொய்யான தகவல்களை வழங்குதல் :**

நீங்கள் அனுப்பிய விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிட்டுள்ள ஏதேனும் ஒரு தகவல் பொய்யானது அல்லது தவறானது என உங்களை ஆட்சேர்த்துக் கொள்வதற்கு முன்னர் கண்டறியப்பட்டால், உங்களுடைய பரீட்சார்த்தித்தகைமை இரத்துச்செய்யப்படும். அத்தகைய பொய்யான அல்லது தவறான தகவல் ஒன்று உங்களை ஆட்சேர்த்துக் கொண்டதன் பின்னர் கண்டறியப்பட்டால், அதற்குரிய நடைமுறைகளுக்கு அமைய உங்களை வேலையிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

10. வெற்றிடங்களை நிரப்புவது அல்லது நிரப்பாமல் விடுவது குறித்த இறுதி அதிகாரம் கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் செயலாளருக்கு உண்டு.

11. இந்த அறிவித்தலில் குறிப்பிடப்படாத ஏதேனும் ஒரு விடயம் தொடர்பாக அல்லது இந்த ஆட்சேர்ப்பு செயல்முறையின் போது ஏதேனும் சிக்கல் நிலைமை ஏற்படும் பட்சத்தில், அது குறித்து கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் செயலாளரினால் எடுக்கப்படும் முடிவே இறுதியான முடிவாகும்.

12. இந்த வர்த்தமானி அறிவித்தலின் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல வாசகங்களுக்கு இடையே ஏதேனும் முரண்பாடுகள் அல்லது இணக்கமற்ற தன்மைகள் காணப்படும் பட்சத்தில், அவ்வேளையில் சிங்கள மொழிமூல வாசகமே மேலோங்கி நிற்கும்.

கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சினது செயலாளரின் கட்டளைப்படி.

செயலாளர்.
கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி
மற்றும் நீர்ப்பாசன அமைச்சு,

இலக்கம் 80/5, கொவிஜன மந்திரய,
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்ல,
2026, யூலை 24.

[ ]

(அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்)

மாதிரி விண்ணப்பப்படிவம்

**கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு**
**மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் - தொழினுட்பச் சேவை வகுதியைச் சேர்ந்த தொழில்நுட்ப உத்தியோகத்தர் (தரம் III) மற்றும் கட்டிட மேற்பார்வையாளர் (தரம் III) பதவிகளுக்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2026**

திறந்த போட்டிப் பரீட்சைக்காக விண்ணப்பிக்கப்படும் பதவி

தொழில்நுட்ப உத்தியோகத்தர் (தரம் III) TO [ ]

(உரிய ஆங்கில எழுத்தை கூட்டினுள் எழுதவும்)

கட்டிட மேற்பார்வையாளர் (தரம் III) BO [ ]

(உரிய ஆங்கில எழுத்தை கூட்டினுள் எழுதவும்)

திறந்த போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுகின்ற மொழிமூலம்

சிங்களம் S

தமிழ் T

ஆங்கிலம் E

(உரிய ஆங்கில எழுத்தை கூட்டினுள் எழுதவும்)

1. 1.1 முதலெழுத்துக்களுடன்) பெயர்: ..........................................................................................................................

(ஆங்கில கெப்பிற்றல் எழுத்துக்களில்) உ+ம் : GUNAWARDHAHA, M.G.B.S.K)

1.2 முதலெழுத்துக்களுடன் முழுப் பெயர் (திரு./திருமதி/செல்வி): ………………………......................................................

(சிங்களத்தில்/ தமிழில்) ..........................................................................................................................................

2. 2.1 நிரந்தர முகவரி:

..........................................................................................................................................................................

2.2 பரீட்சை அனுமதிப் பத்திரம் அனுப்பப்பட வேண்டிய முகவரி :

……………………………………………………………………………………………………………………………….....

2.3 விண்ணப்பதாரரின் நிரந்தர வதிவிட மாவட்டம் :

……………………………………………………………………………………………………………..............................

2.4 பிரதேச செயலகப் பிரிவு :

……………………………………………………………………………………………………………..............................

3. பால்நிலை :

ஆண் - M
பெண் - F

(உரிய ஆங்கில எழுத்தை கூட்டினுள் எழுதவும்)

4. விவாகமானவரா / விவாகமாகாதவரா :

விவாகமானவர் - 1
விவாகமாகாதவர் - 2

(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)

5. பிறந்த திகதி:

ஆண்டு : | | | | | மாதம் : | | | திகதி : | | |

6. 2026. . திகதிற்கு வயது:

வருடங்கள் : | | | மாதங்கள்: | | | நாட்கள் : | | |

7. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம்: | | | | | | | | | | | | |

8. தொலைபேசி இலக்கம்: | | | | | | | | | |

9. க.பொ.த. (சாதாரண தர) பரீட்சை பற்றிய விபரங்கள் (பிரதிகளை இணைக்கவும்)

9.1 பரீட்சைக்குத் தோற்றிய வருடமும் மாதமும்: ……………………………………………

9.2 விண்ணப்பதாரரின் பரீட்சை சுட்டெண்: ………………………………………………

| *பாடம்* | *பெற்ற சித்திகள்* | *பாடம்* | *பெற்ற சித்திகள்* |
|---|---|---|---|
| ………………… | ………… | ………………… | ………… |
| ………………… | ………… | ………………… | ………… |
| ………………… | ………… | ………………… | ………… |
| ………………… | ………… | ………………… | ………… |
| ………………… | ………… | ………………… | ………… |

10. க.பொ.த. (உயர் தர) பரீட்சை பற்றிய விபரங்கள் (பிரதிகளை இணைக்கவும்)

10.1 பரீட்சைக்குத் தோற்றிய வருடமும் மாதமும்: ………………………………………

10.2 விண்ணப்பதாரரின் பரீட்சை சுட்டெண்:

| *பாடம்* | *பெற்ற சித்திகள்* |
|---|---|
| ………………… | ………… |
| ………………… | ………… |
| ………………… | ………… |
| ………………… | ………… |
| ………………… | ………… |

11. ஏனைய தகைமைகள்: தொழில்நுட்பத் தொழில் தகைமை (பிரதிகளை இணைக்கவும்)

| *நிறுவனம்* | *பின்பற்றியுள்ள பாடநெறி* | *காலம்* | *சித்தி* |
|---|---|---|---|
| | | | |

12. உரிய துறையில் பெற்றுள்ள அனுபவம்:

……………………………………………………………………………………………………………………………
……………………………………………………………………………………………………………………………

பரீட்சைக் கட்டணத்திற்காகப் பணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டு மூலப்பிரதி இந்தக் கூட்டினுள் பாதுகாப்பாக ஒட்டப்பட வேண்டும்.
(பற்றுச்சீட்டின் பிரதி ஒன்றை உங்களிடம் வைத்திருப்பது எதிர்கால விசாரணைகளின் போது உபயோகமா இருக்கும்).

13. விண்ணப்பதாரரின் உறுதிமொழி:

என்னால் இங்கு தரப்பட்டுள்ள தகவல்கள் சரியானவை என சான்றளிக்கின்றேன். இங்கு தரப்பட்டுள்ள ஏதேனும் ஒரு தகவல் பொய்யானது அல்லது தவறானது என நான் தெரிவு செய்யப்படுவதற்கு முன்னர் கண்டறியப்பட்டால், தகைமையற்றவனாக்கப்படுவதற்கும், தெரிவு செய்யப்பட்ட பின்னர் கண்டறியப்பட்டால் எவ்வித இழப்பீடுமின்றி

சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கும் ஆளாக்கப்படுவேன் என்பதை நன்கறிவேன்.

திகதி :........................ ....................................

விண்ணப்பதாரரின் கையொப்பம்

14. **கையொப்பத்தை உறுதிப்படுத்துதல்:**

இங்கு கையொப்பமிட்டுள்ள ............................................................ எனும் முகவரியில் வசிக்கும் திரு./ திருமதி/ செல்வி ... ...................................................... என்பவரை நான் தனிப்பட்ட ரீதியில் அறிவேன் என்றும், அவரது கையொப்பம் ......... ........................... ஆம் திகதியாகிய இன்று எனது முன்னிலையில் இடப்பட்டது என்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

………...............................

உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்
(உத்தியோகபூர்வ முத்திரை)

உறுதிப்படுத்துபவரின்
பெயர்.................................
பதவி .............................
முகவரி ..............................
திகதி ................................

15. அரச சேவையில் உள்ள விண்ணப்பதாரர்களுக்கு மாத்திரம்

விண்ணப்பதாரராகிய திரு./திருமதி/செல்வி ....................................................................................................... இந்த அமைச்சில்/திணைக்களத்தில் ................................................................ ஆக நிரந்தர/ தற்காலிக/அமைய ஊழியராக கடமையாற்றுகின்றார் என்றும், அவர் இப்பதவிக்குத் தெரிவு செய்யப்படும் பட்சத்தில் சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/ முடியாது என்றும் அறியத்தருகின்றேன்.

...............................................

நிறுவனத் தலைவரின் கையொப்பம்
(உத்தியோகபூர்வ முத்திரை)

08-99

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ்க் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப் பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

**அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.**

**முக்கிய கவனிப்பு**.- இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான கட்டணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.**

**அட்டவணை - 2026**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| **ஓகத்து** | .. | வெள்ளி | 07.08.2026 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 24.07.2026 |
| | | வெள்ளி | 14.08.2026 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 31.07.2026 |
| | | வெள்ளி | 21.08.2026 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 07.08.2026 |
| | | வெள்ளி | 28.08.2026 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 14.08.2026 |
| **செத்தெம்பர** | .. | வெள்ளி | 04.09.2026 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 21.08.2026 |
| | | வெள்ளி | 11.09.2026 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 28.08.2026 |
| | | வெள்ளி | 18.09.2026 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 04.09.2026 |
| | | வெள்ளி | 25.09.2026 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 11.09.2026 |
| **ஒற்றோபர** | .. | வெள்ளி | 02.10.2026 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 18.09.2026 |
| | | வெள்ளி | 09.10.2026 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 25.09.2026 |
| | | வெள்ளி | 16.10.2026 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 02.10.2026 |
| | | வெள்ளி | 23.10.2026 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 09.10.2026 |
| | | வெள்ளி | 30.10.2026 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 16.10.2026 |

**பிரசன்ன ஜயரத்ன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2026 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 02 ஆந் திகதி.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.